
கல்கி
LKI 7-
90

ஈறு உபாதைகளின் ல் அறிகுறிகள்?



ஊத்தை (Plaque)
எந்நேரமும் உங்கள் பற்களையும் ஈறுகளையும் சுற்றி கண்ணுக்குப் புலப்படாத கிருமிகளின் மெல்லிய படிவங்கள் தோன்றிய வண்ணமிருக்கின்றன. இவற்றை அலட்சியம் செய்தால், இந்த படிவங்கள் காறையாக உருப்பெருகின்றன.

பற்காறை
பற்களின் அடிபாகத்தில் இது படிந்து, ஈறுகளில் எரிச்சல் உண்டாக்கி அவற்றை வீங்கச் செய்கிறது. காலவடைவில் ஈறுகளிலும் எலும்புகளிலும் சரிவு ஏற்படுத்தி பற்களை விழச்செய்கிறது.

இரத்தம் கசியும் ஈறுகள்
பிரஷ் செய்யும் போது பலவீனமாகவும் மிருதுவாகவும் உள்ள ஈறுகளிலிருந்து இரத்தம் கசியும். இதனால் வலி ஏற்படாவிடினும் இந்த ஈறுகளின் இரத்தக் கசிவு பெரும் உபாதைகளில் கொண்டு விடலாம்.

பல் டாக்டரால் உருவாக்கப்பட்ட போர்ஹென்ஸ் டூத்பேஸ்ட் உபயோகித்து உங்கள் ஈறுகளை பராமரியுங்கள்

டாக்டர் போர்ஹென்ஸினுடைய ஸ்பெஷல் ஃபார்முலா

டாக்டர் போர்ஹென்ஸினுடைய ஃபார்முலாவின் திறமிக்க அஸ்ட்ரிஞ்ஜன்ட் செயல் உங்கள் ஈறுகளை வலுப்படுத்தி ஈறு உபாதைகளைத் தடுக்க உதவுகிறது.

பல் டாக்டர்கள் கூறுகிறார்கள்

ஈறு உபாதையால் ஆரோக்கியமான பற்களைக்கூட இழக்க நேரிடும். ஆகவே, இரவிலும் காலையிலும் போர்ஹென்ஸ் டூத்பேஸ்ட் மற்றும் போர்ஹென்ஸ் டபிள் ஆக்ஷன் டூத் பிரஷ் கொண்டு பற்களைத் துலக்குங்கள், ஈறுகளைத் தேய்த்துக் கொடுங்கள்



ஈறுகள் கெட்டால் உடல் நலம் கெடும்



இலவசம்! "உங்கள் ஈறுகளையும் பற்களையும் பராமரிக்கும் முறை" பற்களையும் ஈறுகளையும் பராமரிப்பது பற்றிய வண்ணப் புத்தகம். 25 பைசா தபால் தலையுடன் இம்முகவரிக்கு எழுதுக.
போர்ஹென்ஸ் டென்டல் அட்வைஸரி ப்யூரோ, த. பை. எண். 11463, டிபார்ட்மெண்ட் P 197-215, பம்பாய் 400 020. எம்மொழியில் வேண்டுமெனத் தெரிவிக்கவும்.

போர்ஹென்ஸ்
பல் டாக்டரால் உருவாக்கப்பட்ட டூத்பேஸ்ட்

215-F-172-TM

Regd. T.M: Geoffrey Manners & Co. Ltd.



வத்தலகுண்டு வெடிவிபத்து

ஆகஸ்டு 23 மாலே. வத்தலகுண்டு வழக்கம் போல் சுறுசுறுப்பாக இயங்குகிறது. பேருந்துநிலையம், தக்காளிமண்டிகள், மெயின் ரோடில் உள்ள கடைகள் எல்லாவற்றிலும் ஜன நெரிசல். அன்று இரவு தமிழகம் இது வரை கண்டிராத பெரிய வெடிவிபத்தை அந்த ஊர் சந்திக்கப்போகிறது என்றும் நாற்பத்தி யொரு பேர் இறப்பார்கள் ஐம்பத்தைந்து பேர் காயமடைவார்கள் என்றும் யார்தான் எதிர்பார்த்தார்கள்?

வத்தலகுண்டுக்கு நான் சென்றபோது, மக்களில் பாதிப்பேர் இன்னும் பயம் தெளியாமல் வீடுகளிலேயே முடங்கிக் கிடந்தனர். தெருக்களில் போலீஸ் மயம்.

குற்றவாளியைப் பிடிக்கவும், வெடி-விபத்து சம்பந்தமாகத் துப்பறியவும் ரகசிய போலீஸ் குற்றப் புலனாய்வுத் துறை கண்

⌘ அப்துல் ரஹீம்
உயிரை துச்சமாக மதித்து...

⌘ சரவண பெருமாள்
ரகசிய போலீஸ், குற்றப் புலனாய்வுத் துறை...

⌘ கந்தசாமி
வத்தலகுண்டுவின் பேரிழப்பு







⌘ நள்ளிரவில் ஓர் இடியோசை,..
இல்லை, வெடியோசை!

⌘ துப்புரவுப் பணி ஆரம்பமாகிறது.







⌘ சுதாகர், பாபு:
''எங்களுக்கு இனி யார் சாதம் போடுவார்கள்?''

⌘ புத்தக ஏஜெண்ட் பாண்டியன்
உயிர் தப்பிய அதிசயம்!,..

காணிப்பாளர் சரவணபெருமாள் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருந்தார். அவரைச் சந்தித்தபோது கூறினார்: ''வத்தலகுண்டு — திண்டுக்கல் மெயின் ரோடில் லீலா பவனம் என்ற இரண்டு மாடிக் கட்டிடத்தில் கோ-ஆப் டெக்ஸ் விற்பனை நிலையம், மருந்துக் கடை, சிட்பண்டு நிறுவனம், காஜா முகமது என்பவர் நடத்திய இரும்புக் கடை முதலியன இருந்தன. போலீஸ் லைசென்ஸ் இல்லாமல் காஜா முகமது வெடி மருந்து விற்பதிலும் ரகசியமாக ஈடுபட்டு வந்திருக்கிறார். பாறை பூமியில் கிணறு வெட்டவும் ஆழப்படுத்தவும் வெடிகள்தேவைப்படுகிறது. சுற்றுப்புற மலைகளில் கல் உடைக்கவும் உதவும். இவரிடம் ஆயிரக் கணக்கில் வெடிகளின் ஸ்டாக் இருந்திருக்கிறது. போலீஸ் லைசென்ஸ் இல்லாமல் இதுபோன்ற வெடிகுண்டுகள் வைத்திருப்பது குற்றம். அவர் சாதாரணமாக யார் கேட்டாலும் வெடி குண்டு கொடுத்துவிட மாட்டாராம். அதற்கான ரகசிய பாஷை உண்டு. வாடிக்கையாளர் ''கட்டை கொடு'' என்று கேட்டால்தருவார்!

''அன்றுநள்ளிரவில் லீலாபவனத்திலிருந்து வெடிச் சத்தம் கேட்டு எல்லோரும் விரைந்தார்கள். முதல் முறை சத்தம் ஒன்றும் செய்யவில்லை. இரண்டாம் முறை கட்டிடம் ஆட்டம் கண்டது. மூன்றும் வெடிச் சத்தத்தில் கட்டிடம் மட்டுமின்றி எதிரே உள்ள இடங்களும் தூள் தூளாகின.''

அருமை அண்ணன் கந்தசாமியை இழந்த சகோதரர் சிதம்பரத்தைச் சந்தித்தேன். துக்கத்தை நெஞ்சில் அடக்கிக் கொண்டு சொன்னார்: ''என் அண்ணன் அஜீஸ் சிறப்பு அங்காடியில் குமாஸ்தாவாக இருந்தார். இரவு பதினொரு மணிக்குத் தோசை சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது சத்தம் கேட்டு இருவரும் அந்த இடத்துக்கு விரைந்தோம். மக்கள் தண்ணீர் ஊற்றி அணைக்க முயன்றார்கள். எங்கும் கரும்புகை சூழ்ந்திருந்தது. அண்ணனும் உதவப் போனார். அப்போதுதான் மூன்றாவது பெரும் வெடிச் சத்தம் எழுந்தது. என் அண்ணன் என்னை விட்டுப் பிரிந்து விட்டார். அவர் யாருக்குத் துன்பம் வந்தாலும் பொறுக்கமாட்டார். ரொம்பவும் இளகிய மனசு. ஸ்டோர் கந்தசாமி என்றுதான் எல்லோரும் அவனை அழைப்பார்கள். அவன் இறந்ததால் வத்தலகுண்டு மக்கள் ஒரு சகோதரனை இழந்தது போல் உணர்கின்றனர்.'' கூறிவிட்டுச் சிதம்பரம் தேம்பித்தேம்பி அழுதார்.

வத்தலகுண்டுவில் ரொம்பவும் பாப்புலர் மனிதர் ஒருவர் இருக்கிறார் என்றால் அது புத்தகஏஜெண்ட் பாண்டியன் தான். அதிருஷ்டவசமாகத் தாம் தப்பித்ததை அவர் கூறும்போது உடல் சிலிர்க்கிறது. ''இயற்கை அழைப்புக்காக வெளியே சென்றேன். திரும்பி வருவதற்குள் பயங்கர இடி ஓசை! நான் படுத்திருந்த இடமே இல்லை. ஓடு எல்லாம் தூள் தூளாகிக் கிடந்தது.''

''ஆசையே அழிவுக்குக் காரணம். ஆசையை அடக்கி ஒடுக்கி அடியோடு ஒழிக்க வேண்டும் என்பதே என் ஆசை!''



வெங்காய வியாபாரம் செய்யும் அக்பர் அலி, தம் ஆருயிர் நண்பர் ஜஹாங்கீரை இழந்த துக்கத்தில் இருந்தார். 'அவள் ஒரு தொடர் கதை' படம் பார்க்க இருவரும் சென்றோம். மறுநாள் வசூலுக்காகக் கொடைக்கானல் செல்ல இருந்ததால் படத்தின் பாதியிலேயே வந்தோம். போலீஸ் ஸ்டேஷனை நெருங்கியபோது வேட்டுச் சத்தம் கேட்டது. மக்களுக்கு உதவ நாங்கள் விரைந்தோம். திடீரென்று ஓர் இரும்புக் கம்பி என் நெஞ்சைத் தாக்கியது. உடலெங்கும் அடி. (அடிபட்ட இடங்களைக் காண்பிக்கிறார்.) ஒரு மாதிரி சுதாரித்துக்கொண்டு எழுந்து சுற்றும் முற்றும் பார்த்தால் ஜஹாஜங்கீரைக் காணவில்லை.'' சொல்லும்போதே கண்கள் குளமாகின்றன அக்பருக்கு. அவரை அணைத்தவாறு ஆறுதல் சொன்னேன்.

குழந்தைகள் சுதாகரும், பாபுவும் சொன்னது மனத்தை உருக்கியது!. இவர்கள் சிட் கம்பெனி மானேஜர் குபேந்திரனின் புதல்வர்கள். ''நாங்கள் இருவரும் முற்றத்தில் தூங்கிக்கொண்டிருந்தோம். திடீரென்று பயங்கர வெடிச் சத்தம் எங்களை வெளியே ஓட வைத்தது. நாங்கள் படுத்த இடத்தின் எதிரே உள்ள சுவர் சரிந்தது. ''அம்மா! அப்பா!'' என்று கதறியபோது அவர்கள் மேலே கட்டடம் விழ ஆரம்பித்துவிட்டது. இனி எங்களுக்கு யார் சாதம் கொடுப்பார்கள்? புதுத் துணி போடுவார்கள்?''

உயிரைத் துச்சமாக மதித்து உதவிய இளைஞருள் ஒருவர் அப்துல் ரஹீம். தம் தோளிலேயே பிணங்களைச் சுமந்தும், காயப்பட்ட நபர்களை வெளியே இழுத்தும் வந்தார். ''உயிருக்குயிரான நண்பர்களை இழந்தேன். உலகமே எனக்குக் கசந்து விட்டது'' என்கிறார்.

மதுரை வடக்கு போலீஸ் சூப்பிரண்டெண்ட் ப. ராஜேந்திரனைச் சந்தித்தபோது ''இதுபோன்ற சமூக விரோதிகளை நீதிமன்றம் தீவிரமாகத் தண்டிக்க வேண்டும். எப்போதும் போல் ஐம்பது ரூபாயோ அல்லது அதற்குக் கொஞ்சம் கூடவோ அபராதம் விதித்தால் போதாது. குறைந்த தண்டனைதான் இவர்களை மேலும் இப்பாதைக்குச் செல்லத் தூண்டுகிறது. மேலும் பொதுமக்களும் இப்படிப்பட்டவர்களைப் பற்றி எங்களுக்குத் துப்புக் கொடுத்தால் குற்றவாளியைப்பிடிப்பதோடு இதுபோன்ற விபத்துக்களையும் தவிர்க்க முடியும். விபரீதம் நிகழ்ந்த பிறகுதான் விஷயத்தை வெளியில் சொல்கிறார்களே யொழிய மற்றபடி 'நமக்கேன் வம்பு' என்று சும்மா இருக்கிறார்கள், அது கூடாது'' என்றார்.

படங்கள், பேட்டி:
''சித்தி'







✖ வே. கிருஷ்ணன்
✖ திருமதி உமையாள் முத்து
✖ திரு எஸ். முத்துகிருஷ்ணன்

புதிய தலைமுறை

வே. கிருஷ்ணன்
(பெங்களூர் பாரத் எலெக்ட்ரானிக்ஸில் டெபுடி மானேஜர். - கலை ரசனை)

மூப்பத்து நாலு வயது இளைஞர் இவர். எட்டு வருடங்களாக நடைபெற்று வரும் பெங்களூர் சபா கலாராதனாவில் எட்டு வருடங்களாகவே ஸ்தாபக காரியதரிசி. இசை, நடனம் நிகழ்ச்சிகள் தவிர, சென்னையிலிருந்து தமிழ் நாடகங்களை நடத்த குழுக்களைத் தருவிக்கிறார். ஸ்ரீகாந்த் ஸிம்ஹா போன்றவர்களின் கன்னட நாடகங்களையும் அங்கத்தினர்களுக்கு அளித்து, தமிழர்களுக்கும் கன்னடியர்களுக்கும் இடையே கலைப் பாலம் சமைக்கிறார். வெறும் பொழுது போக்காக அன்றி கன்னட நாடகங்கள் பயனுள்ளவையாகவும் பரிசோதனைகளை உள்ளடக்கியும் அமைந்துள்ளன என்கிறார்.

ஆராதனா பிலிம் சொஸைட்டி எனும் நல்ல திரைப்பட ரசனை வளர்க்கும் சங்கத்திற்கும் திரு கிருஷ்ணன் செயலாளர்.

கலைஞர்களைப் பற்றியும் திரைப்படக்கலை பற்றியும் ஆங்கிலப் பத்திரிகைகளில் எழுதியும் வருகிறார்.

திரு எஸ். முத்துகிருஷ்ணன்
(மானேஜிங் டைரக்டர், யூனியன் கம்பெனி மோட்டார்ஸ் (பி) லிட்.)

எரிபொருள் பற்றாக்குறையை சமாளிக்க ஒரு புது முயற்சியில் கார்பரேட்டர்ஸ் லிட், ஸ்டாண்டர்டு மோட்டார் புராடக்ட்ஸ், சென்னை ஐ. ஐ. டி.ஐ. மூன்று நிறுவனங்களும் கூட்டாக வெற்றி கண்டுள்ளன. டீஸலும் ஆல்கஹாலும் கலந்து பயன்படுத்தி 'ஸ்டாண்டர்ட் 20' வண்டியை ஓட்டியிருக்கிறார்கள். சூரிய சக்தி உட்பட மற்ற மாற்று முறைகளையும் இவர்கள் ஆராய்கிறார்கள்.

திரு முத்துகிருஷ்ணன் கடந்த ஆறு ஆண்டுகளாய் 'கார் ரேஸ்' கமிட்டியின் தலைவராய் இருந்து வருகிறார். சர்வதேச அளவில் இந்தியாவில் முதன் முறையாக நடைபெற விருக்கும் 'ஹிமாலயன் ராலி' பந்தயக் குழுவிலும் இவர் நிர்வாக உறுப்பினர். 'ஹிமாலயன் ராலி'யின் மொத்தப் பயண தூரம் 5200 கி.மீ.

எஸ். ஓ. எஸ். குழந்தைகள் கிராமம் என்னும் அனாதை இல்லத்துக்கும் இவர் டிரஸ்டி.

77-78ம் ஆண்டில் அகில இந்திய ஆடோமோபைல் அண்ட் ஆன்ஸிலரி இண்டஸ்ட்ரீஸ் அஸோஸியேஷன் தலைவராய் இருந்தவர்.

தம்முடைய முன்னேற்றத்துக்கு ஊக்கமூட்டி வழிகாட்டிய தாத்தா திரு கே. கோபாலகிருஷ்ணன் அவர்களை (ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் ஸ்தாபகர்) பெருமையுடன் நினைத்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறவர்.

திருமதி உமையாள் முத்து
(இலக்கியச் சொற்பொழிவு)

நகரத்தார் சமூகத்தில் பிறந்து பொது மேடைகளில் இலக்கியச் சொற்பொழிவுக்கு வந்துள்ள முதல் பெண் இவர். தமிழ்க் கடல் ராய. சொ. அவர்களின் ஊக்கமும் தூண்டுதலுமே இவரை இந்தத் துறையில் ஈடுபடுத்தியவை.

தற்போது பாங்க் ஆப் மதுரை இராயப் பேட்டை, கிளையில் பணியாற்றும் இந்தத் தேவகோட்டைக்காரர், வரலாறு படித்துப் பட்டம் பெற்றது புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில். அங்கும், சட்டக் கல்லூரியிலும் உடன் பயின்றவர்களில் நிறையப் பேர் இன்று அரசியலில் பிரபலமாகியுள்ளனர். இருந்தும் இவருடைய நாவன்மை அரசியலுக்குப் பயன்படவில்லை என்பது சுவையான செய்தி.

புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் படித்தபோது தமிழ்த் தாத்தா உ. வே. சா. தங்கப்பதக்கம் பெற்ற முதல் பெண்மணி என்ற பெருமை பெற்ற இவர், சென்னைப் பல்கலைக் கழகத்தின் மிகச் சிறந்த பெண் பேச்சாளர் என்றும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

— சுப்ரபாலன்

Kalki Shopping Page



Our Stockists:

1. M/s D. Srinivasa Iyengar, Maligai, West Car Street, Chidambaram & Cuddalore
2. M/s K. S. Muthuswamy Iyer Son R. V. Venkatarama Iyer, Maligai, Railady, Mayuram
3. M/s R. Ganapathi Pillai, Maligai, Railady, Mayuram
4. Thanjavur Cooperative Wholesale Stores Ltd., Thanjavur
5. M/s A. V. M. Muthukrishnan & Bros, Pudupalayam, Cuddalore
6. M/s P. Ramalingam, 26, Bhandarkar Road, Matunga, Bombay-19
7. M/s P. V. R. K. & Co., 321, Avenue Road, Bangalore-2
8. M/s Geetha Stores, 115, Jeweller Street, Bangalore-1

★

எங்கள் புதிய D L C பிராண்ட் அக்மார்க் நெய் 16 kg & 4 kg கிடைக்குமிடம்

1. **M/s Bharathi & Co**
   27, Mundy Street, Vellore-4
2. **M/s R. Rangarajan & Co**
   13/1751, Karikkara Street, Kumbakonam-612 001

★

Dhanalakshmi & Co
21-B, M. G. Pudur 1st Street, Tirupur-638604



கொலு பொம்மைகளுக்கும், மற்றும் கலைப் பொருட்களுக்கும் சிறந்த இடம்:

எங்களிடம் அழகு நிறைந்த காகித வண்ணப் பொம்மைகளும், மண் மற்றும் சிமெண்ட் மாடல் அழகிய பொம்மைகளும் திறமை மிக்க வேலைப்பாட்டுடன் கண் கவரும் வகையில் அவரவர் தேவைக்கேற்றவாறு செய்து தரப்படும்.

பழைய பொம்மைகளையும் பழுது பார்த்து நல்ல வண்ணத்துடன் புத்தம் புதியதாக மாற்றி மனநிறைவு ஏற்படும் வகையில் செய்து தரப்படும்.

ஒரு முறை நேரில் வருகை தந்து தங்கள் தேவைகளுக்கு ஆர்டர் கொடுக்கவும்

குணசுந்தரி கலைக்கூடம்
பொம்மை *தயாரிப்பாளர்*
31, 6வது கிராஸ் தெரு,
டிரஸ்ட்புரம், சென்னை-600 024


SPECIALISTS IN

Quartz, Electronic, Omega, Rolex, Rado, Seiko, Citizen, HMT, Etc




SERVICE ONLY

Sri Jagadeswari Electronic Service Centre
17, Ramanathan Street, T. Nagar, Madras-600 017
(Near Mambalam Railway Station)


ஆஹா!
என்ன விறுவிறுப்பு.
என்ன சுகம்,
நீங்களும்
அனுபவிச்சுப்
பாருங்களேன்!


சுட்டுத் தள்ளியாச்சு!...
தோலுரிக்க வேண்டியது
தான் பாக்கி!


அ.தி.மு.க
தேர்தல்
வாக்குறுதிகளை
நிறைவேற்றக்
கோரி
உண்ணாவிரதம்!
— தி.மு.க —

1980 செப்டம்பர் 7
ரௌத்திரி ஆவணி 22
மலர்: 39 இதழ்: 6



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

1982

செப்டம்பர்.

பாரதியாரின் நினைவு நாள் இந்த மாதத்தில்தான்.

ஸ்ரீ ஜயந்தி ரசிகமணியின் பிறந்த தினமும் கூட.

அமரர் கல்கி அவதரித்த நாள் செப்டம்பர் 9.

கவிதையை எளிதாக்கி ஒரு புதிய சகாப்தத்துக்கு அடிக்கல் நாட்டி மரபுக் கவிதைகளையும் புதுக் கவிதைகளையும் எழுதிக் குவிக்கும் எண்ணற்றவர்களைத் தோற்றுவித்தவர் பாரதி.

கம்பன் முதல் கவிமணி வரை கவிஞர்களையும் அவர்களது கவிதைகளையும் போற்றி உயர்ந்தவற்றை — உயர்ந்தவற்றை மட்டுமே — தேர்ந்தெடுத்து ரசிக்க நம்மைப் பழக்கியவர் டி. கே. சி.

இவ்விருவரையுமே உள்ளத்தால் துதித்து எழுத்தால் போற்றியவர் கல்கி. இயல், இசை, நாடகம், கவிதை, சிற்பம், நாட்டியம், அரசியல், சினிமா, நகைச்சுவை போன்ற எந்தத் துறையிலும் நல்லனவற்றைப் போற்றவும் தரக் குறைவானவற்றை அச்சமின்றிச் சாடவும் நமக்குக் கற்றுத் தந்தவர் கல்கி.

இன்றைய நிலை என்ன?

''லைசென்ஸ் காவலர்கள்'' என்று பட்டம் பெறத்தக்க அளவில் ஆபாசத்துக்கு இடமளித்தது போதாதென்று ஆபாசத்தின் சார்பில் வாதாடவே பலர் தொடங்கி விட்டனர்!

அரசியலிலோ, பொய்மையும் சிறுமையும், பேராசையும் தன்னலமும், லஞ்ச லாவண்யங்களும் கட்சித் தாவல்களும், ஜாதிமத வேறுபாடுகளும் வகுப்புத் துவேஷங்களும், எதேச்சாதிகாரமும் அடிமைப் பொருளாதாரமும் வளர்ந்து விட்டன.

இந்நிலையில், சின்னத்தனங்களைக் கண்டு சீறிய பெரியோர்களை அடிக்கடி நினைவுக்குக் கொண்டு வரவேண்டியிருக்கிறது. சோர்வை நீக்கவும் செயலூக்கம் பெறவும் அவர்களை எண்ண வேண்டியிருக்கிறது.

1982 — ரசிகமணி, மகாகவி இருவருக்குமே நூற்றாண்டு விழா எடுக்க வேண்டிய வருஷம். அதுவரை காத்திராது இப்போதே ஆரம்பித்துவிட அவசியம் இருக்கிறது!

நியூவேவ் என்ற போலிப்பெயரில் வந்துள்ள ஆபாச அலையை அழிக்கின்ற ஆரோக்கிய இலக்கிய அலை பொங்கி எழவேண்டும். அதற்கு ரசிகமணியை நாம் சதா மனத்தில் இருத்த வேண்டும்.

ஜனநாயக சோஷலிஸம் என்ற போலிப் பெயரில், சாசன ரீதியான மக்களின் அடிப்படை சுதந்திரங்களைக் கூடப் பறித்து விடுகிற சர்வாதிகாரப் போக்கினை எதிர்க்க மக்கள் துணிவு பெறவேண்டும். அதற்குப் பாரதியை நினைவு கூர வேண்டும்.

டி. கே. சி. நூற்றாண்டினைச் சிறப்பாகக் கொண்டாட வட்டத் தொட்டி இட்டம் வகுத்து வருகிறது. ஜஸ்டிஸ் மகராஜன் ஏற்பாடுகளைக் கவனிக்கிறார். தமிழக அரசு பூரண ஒத்துழைப்புத் தரச் சம்மதித்துள்ளது.

பாரதி நூற்றாண்டினை அகில இந்திய ரீதியில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பிரதமரே ஆர்வத்துடன் இருப்பதாகத் தெரிகிறது. திரு நா. மகாலிங்கத்தைத் தலைவராகக் கொண்ட பாரதியார் சங்கம் எட்டயபுரம் பாரதி மணி மண்டபத்தைத் தேசிய உடைமையாக்கி அரசின் பராமரிப்பில் விட்டுவிடத் தயாராக உள்ளது. மேலும் சென்னையில் தாகூர் — பாரதி அரங்கு அடிக்கல் நாட்டப்பட்ட நிலையிலேயே இருப்பதைச் சுட்டிக்காட்டி நூற்றாண்டு விழாவுக்கு முன்னதாகவேனும் அதனை முடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் சிக்கல்களைச் சீராக்குமாறு அரசினை வேண்டியுள்ளது.

செப்டம்பர் 10, 11 தேதிகளில் திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி சபா அரங்கில் பாரதியார் சங்கம் நடத்தும் பாரதி விழா, நூற்றாண்டு விழாவுக்கு ஒரு முன்னோடி யாகவே திகழும். அமைச்சர்களும், நீதிபதிகளும் பத்திரிகை ஆசிரியர்களும் கவி வாணர்களும் பங்கேற்கும் விழாவினையொட்டி மாணவ மாணவியருக்கு பாரதி பாடல் — கட்டுரை போட்டிகளும் நடக்கின்றன.

மயிலை இலக்கிய வட்டம் பாரதி பற்றிய ம. பொ. சி. அவர்களின் தொடர் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது. இச்சொற்பொழிவு களின் சுருக்கம் கல்கியில் தொடர்ந்து பிரசுரமாகும் என்பதை நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவை தவிர சிறிதும் பெரிதுமான பல ஊர்களில் சிறிதும் பெரிதுமான பல கூட்டங்கள் நடக்கும். பாரதியின் கவிதை மணம் பரப்பும். நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் வளர்க்கும். பொழுது புலர, புன்மை இருட் கணம் போகும். அறிவெனும் இரவி எழுந்து விளங்க, எழும் பசும் பொற்சுடர் எங்கணும் பரவும்.

ஜய ஜய பாரதம்!





"அதுவும் ஒரு பயங்கர ஆயுதமே!"

பஸ் விபத்துக்கள் இப்போதெல்லாம் அடிக்கடி நிகழ்கின்றனவே காரணங்கள் என்ன? எப்படித் தவிர்க்கலாம்?

இன்றுள்ள அளவுக்குப் போக்குவரத்தை ஏற்கக் கூடிய சாலைகள் அல்ல இவை. மேனாடுகளில் ஆறு அடி அஸ்திவாரத்தின் மேல் நான்கு அங்குல காங்கிரீட் சாலைகள் போடுகிறார்கள்.

பஸ்களின் தாங்கும் சக்திக்கு அதிகமாகப் பயணிகள் ஏற்றப்படுகின்றனர். முன்பெல்லாம் கலெக்ஷன் பேட்டா வெளியூர் பஸ்களுக்குத்தான் உண்டு. சிடி பஸ்களுக்கு ஃபிக்ஸட் பேட்டாதான்.

போதிய அனுபவம் இன்றி இளம் வயதிலேயே டிரைவர்களாகப் பலர் நியமிக்கப் படுகிறார்கள். அந்த நாளில் முதலில் கார் டிரைவராகவும் பிறகு லாரி டிரைவராகவும் இருந்து அனுபவப்பட்டவர்தான் பஸ் டிரைவராகத் தனியார் நிறுவனங்களில் நியமிக்கப்படுவார். வயது 35க்குக் குறையாது.

பஸ்களின் நீள அகலங்கள் அதிகமாகி விட்டன. முன்பு 21 பேருக்கு மேல் பஸ்ஸில் அமர முடியாது. இன்று 65 பேர் உட்காரலாம்.

பஸ் இன்ஜின்களின் சக்தி மிக அதிகமாகி விட்டது. முன்பெல்லாம் காருக்கு ஸைட் தராத பஸ்டிரைவர் தண்டனைக்குள்ளாவார். இன்று லேட்டஸ்ட் பென்ஸ் கார்களை பஸ்கள் முந்துகின்றன. இதற்கு உதவியாகச் செவிப் பறைகளைக் கிழிக்கும் ஹாரன்.

இப்படிப் பல காரணங்களைக் கூறிக் கொண்டு போகலாம் என்றாலும் மறக்கக் கூடாத விஷயம் டிரைவரின் கரத்தில், கத்தி துப்பாக்கி போல பஸ்ஸும் ஓர் ஆயுதம்தான். மனித உயிரை அது பறிக்குமானால் டிரைவருக்கு மட்டுமல்ல, அவரை வேகமாக ஓட்ட அனுமதித்த டிரான்ஸ்போர்ட் அதிகாரிக்கும் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும்.

ஆனால் இன்றுள்ள நிலை? பல விபத்துக்கள் குறித்துப் போலீசார் நடவடிக்கை எடுப்பதே இல்லை. போலீஸாரிடம் பஸ் டிரைவர்களுக்கு மதிப்பு, மரியாதை இல்லை. காரணம் தொழிற்சங்க ஆதிக்க பலம்; வேலை நிறுத்தம் பற்றிய அச்சம்; தொடர்ந்து அரசியல் வாதியின் தலையீடு.

விமோசனத்துக்கு வழி: அரசாங்கத்தில் உத்தியோகம் அளிப்பது, பதவி உயர்வு தருவது, டிரான்ஸ்ஃபர், டிஸ்மிஸல் போன்றவை பிரான்ஸ் நாட்டில் அரசியல்வாதிகளின் அதிகாரத்தில் இல்லை. அப்படி ஒரு நிலை இங்கு தோன்றினால் அவரவரும் அச்சமின்றியும் கருத்துடனும் கடமையைச் செய்வார்கள். பஸ் போக்குவரத்துத் துறையில் மட்டுமல்ல, சகல துறைகளிலும் பிரமிக்கத்தக்க முன்னேற்றம் ஏற்படும்.

பதில் : ஞா. மகாலிங்கம்
பேட்டி : குட்டி கிருஷ்ணன்

சட்டமன்றத்தில் புது முகங்கள்

நான் அடிமையாக இருக்க விரும்பவில்லை; எஜமானனாகவும் இருக்க விரும்பவில்லை. இதுவே ஜனநாயகம் பற்றிய எனது கருத்தை விளக்குகிறது. இதிலிருந்து யார், எந்த அளவுக்கு மாறுபட்டாலும் அந்த அளவுக்கு நாட்டில் ஜனநாயகம் இல்லை என்றாகிறது.

—ஆபிரஹாம் லிங்கன்

ஏ. டி. குலசேகரன் (தி. மு. க.)
சிங்காநல்லூர் தொகுதி

கல்லூர் கோவையில் ''ஒரே முற்றுப் புள்ளி'' என்ற தலைப்பில் பேசிய பேச்சைக் கேட்டு தி. மு. க.வில் சேர்ந்தார். 1962ல் அண்ணாவால் அறிவிக்கப்பட்ட விவசாயப் போராட்டத்தில் அங்கம் வகித்து 29 நாட்கள் சிறையில் இருந்தார்.

சா. ஜெகத்ரட்சகன் (அ.இ.அ.தி.மு.க.)
உத்திரமேரூர் தொகுதி

விவசாயக் குடும்பத்தில் பிறந்தும் இலக்கியம் என்றால் ரொம்பத்தான் காதல் இந்த மனுஷருக்கு. பி.காம். டி.லிட். பட்டங்கள் பெற்றவர்.

''இருபது ஆண்டுகளுக்கு முன்பு, சிறு பையனாக வீதியிலே திரிகிறபோது ஊரிலே நடக்கும் நற்பணிகளில் கலந்துகொள்ள நானும் போய் நிற்பேன். 'நீ என்ன பெரிய எம். எல். ஏ.வா? சும்மா இரு' என்று என் அப்பா சொல்வது வழக்கம். இந்தத் தேர்தலில் நான் வெற்றி பெற்றதைக் கண்டு அவர் கண்களில் நீர் துளிர்த்தது'' என்கிறார்.

சோ. கலிதீர்த்தன் (அ.இ.அ.தி.மு.க.)
சங்கராபுரம் தொகுதி

தெருக்கூத்து இசை என்றால் தனி உற்சாகத்தோடு அனுபவிப்பார் கலிதீர்த்தன். கவிதைகளில் ரசனையும் உண்டு. இவரது குடும்பம் ''பசியாற்றும் குடும்பம்'' என்று பெயர்பெற்றது. கள்ளக்குறிச்சி எம்.ஜி. ஆர். மன்றத் தலைவர்.

கே. ஆர். கணபதி
(அ.இ.அ.தி.மு.க.) சிதம்பரம் தொகுதி

''ஆல் ரவுண்டர்'' என்று பட்டம் சூட்ட வேண்டுமென்றால் அது விளையாட்டு வீரர் கணபதிக்கு ரொம்பவும் பொருத்தம். அதற்கேற்ற வாகான உடல்கட்டு.

பள்ளி மாணவனாக இருந்தபோது அண்ணாவின் ஓர் இரவு நாடகம் பார்த்தார். அது இவரைக் கலைத் துறையிலும் பின்னர் அரசியலிலும் ஈடுபாடு கொள்ள வைத்தது. பதினைந்தாவது வயதிலேயே ''வருங்காலத்தில் நல்ல அரசியல் வாதியாக விளங்குவாய்'' என்று அண்ணாவின் ஆசியைப் பெற்றவர்.

இரா. திருமன் (அ.இ.அ.தி.மு.க.)
ஏற்காடு தொகுதி

ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் வேட்டையாடக் கிளம்பி விடுவார் திருமன். ''அண்ணாவின் மேடைப் பேச்சைக் கேட்டு ஆர்வம் கொண்டு 1962 முதல் தி.மு.க.வுக்குப் பாடுபட்டேன். 1972 அக்டோபர் முதல் புரட்சித் தலைவரின் அ.தி.மு.க.வில் சேர்ந்து தொண்டாற்றி வருகிறேன்'' என்கிறார்.

என். ஏ. பூங்காவனம்
(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி) காட்பாடி

''தேச விடுதலை இயக்கத்தில் ஆர்வம் கொண்டு சுபாஷ் சந்திர போஸ் ஆதரவாளனாக இருந்து 1945ல் கம்யூனிஸ தத்துவங்களின் மேல் உள்ள ஈடுபாட்டினால் கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினனாகச் சேர்ந்தேன். என் வழிகாட்டியாக அமரர் ஜீவானந்தம் அவர்களையே கொள்கிறேன்'' என்கிறார். கம்யூனிஸத்துக்கு அடுத்தபடியாக இவருக்கு ஹாக்கி ஆட்டம் ரொம்பப் பிடிக்குமாம்.

கோவைத் தம்பி
(அ.இ.அ.தி.மு.க.) பேரூர் தொகுதி

ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த இவர் சிறந்த பேச்சாளர். எப்போதும் நண்பர்களுடன் நாட்டு அரசியலைச் சூடாக விவாதிப்பார். ஒரு தபால்காரரின் மகன்.

சா. கிருட்டிணமூர்த்தி (அ.இ.அ.தி.மு.க.)
ஆண்டிமடம் தொகுதி

விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். கால் பந்து, வாலிபால், உயரம் தாண்டுதல், ஆகிய விளையாட்டுக்களில் சாம்பியன். இது வரை 52 சான்றிதழ்களைப் பெற்ற விளையாட்டு வீரர்.

பேட்டி : சிக்கி

ஏ. டி. குலசேகரன், சா. ஜெகத்ரட்சகன், சோ. கலிதீர்த்தன், கே. ஆர். கணபதி, இரா. திருமன், என். ஏ. பூங்காவனம், கோவைத் தம்பி, சா. கிருட்டிண மூர்த்தி





GH

பி.வி.ஆர்

அத்தியாயம் 6

கடையைக் கண்டு மல்லிகா பிரமித்துப் போனாள். கோயமுத்தூரில் பெரிய பெரிய கடைகளுக்குள் பிரவேசித்து ஓரிரு தடவைகள் புடவைகளும் வாங்கியிருக்கிறாள். ஆனால் இப்படிப்பட்ட ஒரு புடவைக் கூடத்தை அவள் பார்த்ததில்லை. எத்தனை நீளத்துக்கும் உயரத்துக்கும் அலமாரிகள்... எத்தனை எத்தனை சிப்பந்திகள்! அந்த சிப்பந்திகளை மேற்பார்வை செய்ய எத்தனை மேல்மட்ட சிப்பந்திகள்!

திடீரென்று ஒரு கேள்வியால் தாக்கப்பட்ட அவள் அர்ஜுனனைப் பின்தொடர்வதை நிறுத்திவிட்டு நின்றாள். கடைக்குள் வரும்போது துணி அவனுக்கு என்றுதான் அவள் நினைத்தாள். ஆனால் அவன் மகளிர் பக்கம் சென்று கொண்டிருந்தான். அதுவும் நாகரிகமான புடவைகள் இருக்குமிடம்.

அவள் நின்றுவிட்டதை அவன் உடனே உணர்ந்திருக்க வேண்டும். அவனும் நின்றான். திரும்பினான்.

''வா...''

பிற்பகல். இன்னும் கூட்டம் வர ஆரம்பிக்கவில்லை. அவன் மெல்லிய குரலில் அழைத்தபோதிலும் அவளுக்கு இரைச்சலாகப் பட்டது. அவள் மெல்ல மெல்ல நடந்து அவன் அருகே நின்றாள்.

''என்ன?'' என்றான்.

''புடவை.''

''யாருக்கு?''

''நிச்சயமாக பிருகந்நளைக்கு இல்லை.... ஓர் அழகான பெண்ணுக்கு....'' அவன் மிகவும் தாழ்ந்த குரலில் பேசினான்.

''ஏன் இரையறீங்க... எனக்குத்தானே?''

''அழகான பெண் என்றேனே?''

''அப்ப நான் எதுக்கு இங்கே வரணும்?''

''சரி.சரி வா....'' அவனையும் அறியாமல் கை நீண்டு அவளுடைய இடது மணிக் கட்டைப் பிடித்தது.

ஒரு கணம் மின்சாரத் தாக்குதலில் அவள் பரபரத்துப் போனாள். ஓர் ஆண் அவள் கையைப் பற்றுகிறான். அதுவும் ஒரு பெரிய கடையில் பல சிப்பந்திகளின் முன்னிலையில்! கோபப்படுவதா? அல்லது வெட்கத்தில் தலைகுனிவதா?



அவன் அவளுடைய மனத்தைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். கையை விட்டான்.

திடீரென்று ஓர் இன்ப வேதனையில் அவள் தவித்தாள். இனிப்புச் சாப்பிட்ட பிறகும் தித்திப்பு நாவில் படர்ந்து நிற்பது போன்ற இன்பம். அது இன்னும் சில நொடிகளில் மறைந்துவிடுமே என்ற வேதனை.

அவள் ஓர் ஊமையாக நடந்தாள்.

''வாங்க சார்... வாங்க அம்மா.''

''மாடர்ன் டிஸைன்லே புடவைகளை அள்ளிப் போடப்பா... மல்லிகா உம் ஆரம்பி உன் செலக்ஷனை... அது முடியறதுக்குள்ளே தேவி பாரடைஸில் ஒரு படம் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன்.''

அவன் பதில் சொல்ல ஆரம்பிப்பதற்குள் ''என்ன ரேஞ்சிலே சார்?'' என்றான்.

''ரேஞ்சுன்னா? விலையா... அது பத்தி என்கிட்டே இதுவரை யாரும் பேசியதில்லே. நீதான் முதல் ஆள்....''

''மன்னியுங்க சார்... ஜார்ஜட் ஷிபான் மல்மல் ஆர்கண்டி. ..''

''இவங்க கேக்கறதைக் கொடு. அவங்க சீப்பா வாங்க மாட்டாங்க. அதுக்கு நான் உத்தரவாதம்.... ஏன் மல்லிகா, இப்போதைக்கு எட்டுப் புடவை போதாது?''

மல்லிகாவுக்கு மயக்கம் வந்தது. கடையில் அவனுடன் வார்த்தை யுத்தம் நடத்தும் நிலையில் இல்லை.

''இப்போதைக்குப் போதும்...''

''சோளியும் மாட்சிங்கா எடுத்துக்கோ.''

''எனக்குத் தெரியும்.''

''அப்புறம் ரெடிமேட்... எப்படிச் சொல்றதுன்னு...''

''தெரியும். எடுத்துக்கறேன்.''

''அந்தச் சாமா அங்கேயே நிக்கறான். குகை வாயில்லே நிக்கற புலி மாதிரி... அவனைக் கவனிச்சுட்டு வரேன்... நீ சீக்கிரம் எடுத்து முடி. நாலு மணிக்கு அப்பா கிட்ட இருக்கணும்....''

அவள் திடீரென்று பரவசமானாள். சில மணி நேரங்களே பரிச்சயமான ஓர் ஆண்மகனிடமிருந்து புடவைகளைப் பரிசாக வாங்கிக்கொள்ளுவது மெச்சத் தகுந்ததல்ல என்ற உணர்வு ஓரிரு தடவைகள் அவளுள் எழுந்தபோதிலும், அர்ஜுனனின் விகல்பமில்லாத பார்வையை எண்ணி அவள் நெகிழ்ந்து போனாள். பஸ்களில் அவளை எத்தனையோ பேர் வேண்டுமென்றே இடித்திருக்கிறார்கள். ஒரு ரௌடி யாரும் அறியா வண்ணம் அவளுடைய தோளைத் தடவிப் பார்க்க முயன்றிருக்கிறான். தெருவில் ஃபாக்டரி வேலை முடிந்து காந்திபுரத்துக்குச் செல்லுகையில் விசில் அடித்திருக்கிறார்கள். இரண்டு மூன்று தடவைகள் அவளுக்காக



''ரயில்வே புக்கிங் கிளார்க் கோட கல்யாணத்துக்குப்போனது தப்பாயிடுச்சு!''

''ஏன்?''

''சாப்பாட்டுக்கு வெயிட்டிங் லிஸ்டிலே போட்டு மனுஷன் கடைசி நிமிஷத்திலே பந்தியிலே இடம் இல்லேன்னு கையை விரிச்சுட்டார்!'' - ஜி. நடராஜன்

ஸ்கூட்டர்கள் நின்றிருக்கின்றன. ஒருதடவை ஒரு படகுக் கார் கிரீச்சென்று அருகில் நின்றிருக்கிறது. அவளுடைய ஏழ்மையில் அவளுக்கு இருந்த ஒரு சொத்து கற்பும் கௌரவமும்தான். அதை அவள் விற்கவோ பணயம் வைக்கவோ கனவிலும் நினைத்தது இல்லை. அவளுடைய கற்பு என்றும் வாடா மலராக இருக்க வேண்டும். அது அவள் விரும்பும் ஒருவனுடைய பாதங்களை அலங்கரிக்க வேண்டும். அவளுடைய உடலும் உள்ளமும் அவனிடம் மட்டுமே தஞ்சம் புகவேண்டும் என்றெல்லாம் அவள் கனவு கண்டிருந்தாள்.

இப்போது ஒரு பெரிய கடையில் விசுவரூபமாக உயர்ந்திருக்கும் கண்ணாடி அலமாரியின் முன் நிற்கும் போது அவளை அங்கே அழைத்து வந்தவன் யார் என்ற கேள்வி எழுந்தது.

அண்ணனா?

அண்ணன் போல நடிக்கிற கயவனா?

அல்லது அவள் உள்ளத்தைப் பறித்துக் கொண்டு அவள் கூட நினைக்கும் வாடா மலருக்காகத் தயாராக நிற்பவனா?

அவள் ஊமைக் கண்ணோட்டத்தோடு பார்த்ததைச் சிப்பந்தி தவறாகப் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

''இந்த டிசைனும் கலரும் உங்களுக்குன்னு வந்தமாதிரி இருக்கும்மா...''

''என்ன விலை?'' இயந்திரமாகக் கேட்டாள்.

''அதைப் பத்தி ஏம்மா கவலைப்படறீங்க?''

''ஏன்?''

''இது அவர் கடை மாதிரி.''

''புரியலே.''

''உங்க கிட்டே சொல்லலையா?''

''ஊஹூம்...''

''எனக்கே இப்பத்தான் தெரிஞ்சுது, அம்மா... ஒரு ஆள் என் காதைக் கடிச்சுட்டுப்போனப்புறம்தான் நான் சுதாரிச்சுட்டேன்.... அவர் அப்பாவுக்கு இந்தக் கடையிலே நாலிலே ஒரு பங்கு....''

''அவர் சொல்லவே இல்லே.''


''ஒவ்வொண்ணாத்தான் சொல்லுவார்'' என்று அவன் தன்னுள் பேசிக் கொண்டான்.

வயலட், லைட் புளு, பாட்டில் க்ரீன், பீனட் ரெட், யெல்லோ லைம், ஹனிப்ரௌன், மில்க் ஒயிட், பிங்க்....

எட்டு எடுக்க அரை மணி நேரம். ஏற்ற சோளிகள், பிரேஸியர்... பெட்டிகோட்... கர்சீப்....

''நீங்க போங்கம்மா வண்டியிலே ஏத்தச் சொல்றேன்.''

அவள் இயந்திரமாக நடந்து வாசலுக்கு வந்தாள்,



FDS KS 2871 TAM

''என்ன சாமா எத்தனை நேரம் இங்கேயே நிக்கப் போறே?''

''வக்கீல் கோபால்ரத்னத்தோட குமாஸ்தா 'வரேன், இங்கே நில்லு'ன்னு சொல்லிட்டுப் போனான். காணோம்.'' சாக்குச் சொன்னான்.

''உன்னாலே எனக்குச் சுமை, செலவு கஷ்டம்'' என்றான் அர்ஜுனன்.

''நடேசன்தானே?''

''ஆமாம்.''

''ஆனா அந்தப் பொண்ணு பாரமா இருக்க மாட்டாளே?'' நமுட்டுச் சிரிப்புடன் சாமா புகையிலையை இடத்திலிருந்து வலதுக்கு மாற்றினான்.

''அந்த விஷயத்தில் நான் உனக்கு ரொம்பக் கடமைப்பட்டிருக்கிறேன் சாமா.''

''என்ன சொல்றே....''

''ஒரு அப்சரஸை என்னிடம் ஒப்படைச்சிருக்கியே....''

''நீ என்ன செய்யப் போறே? அவ மானத்தோடே அவளை ஊருக்குத் திருப்பி அனுப்பிவிடாதே!''

அர்ஜுனன் சிரித்தான்.

''அவளைப் பங்கப்படுத்தித்தான் அனுப்புவேன்னு நீ நினைக்கிறியா?''

''பயமா இருக்கு.''

''அப்ப ஒண்ணு செய்.''

''என்ன அர்ஜுனா?''

''இப்ப வெளியே வருவா. நீயே அழைச்சுண்டு போ...''

''ஐயய்யோ... எனக்கே தங்கஇடமில்லே. உன் வீட்டுக்கே வந்துடலாமான்னு யோசிச்சுட்டிருக்கேன்.... டேய், மாப்பிள்ளை ராஜாமணி குடும்பத்தைப் பத்தி ஆயிரம் விதமாப் பேசுவா. ஆனா பொம்மனாட்டி தோல் விஷயத்தில் ஒரு அவப் பெயர் இல்லே... அதை நீ ஏற்படுத்திவிடாதே... அப்புறம்... மல்லிகாவின் அம்மா...''

''அவளுக்கு என்ன?''

''அவள் ஒரு ராட்சசி.''

''அதனால் என்ன?''

''அவ விழிச்ச கோட்டை. நடேசன் தாண்ட மாட்டான்.''

''அவள் கோடே, விழிக்காதபடி பார்த்துக்கிறேன்.''

''அவ பிறந்த ஊர் சத்தியமங்கலம். அங்கே மேஜர் சுந்தரராமன் இருக்கார்.''

''தெரியும். ஆர்மி டாக்டர்.''

''அவன் பெண்டாட்டி ஏழெட்டு மாசங்களுக்கு முன்னாடி செத்துப்போனா....''

''ஆமாம். பெண்ணைக் கொடுத்த கையோடப் பிராணனை விட்டாளென்று ஊர்லே பேசிண்டா.''

''அவருக்கு நாற்பத்தாறு வயசு.''

''விஷயத்துக்கு வா.''

''இப்ப நடேசன் பெண்டாட்டிதான் மேஜர் வீட்டைக் கவனிச்சுக்கிறா... ஒரு தாரத்துச் சொந்தத்தைப் பெரிய பந்தமா மாத்திண்டிருக்கா.''

''உம். அப்புறம்?''

''மேஜருக்குப் பிள்ளை இல்லே.''

''புரியறது சாமா! இந்த மல்லிகா என்ற கொடியை அந்த மனுஷனுப் போல காட்டு மரத்திலே படர விட ராட்சசி அம்மா திட்டம் தீட்டறான்னு சொல்ல வறே.''

''நீ கெட்டிக்காரன். ஆனா எச்சரிக்கையா இரு. ஏற்கனவே ராட்சசியைக் குஷிப் படுத்த மேஜர் வைரத் தோட்டையும் ரெட்டை வடம் சங்கிலியையும் அவளுக்குக் கொடுத்தாச்சு. அவனோட காதோர நரையெல்லாம் கறுப்பாயிடுச்சு. கொண்டை மீசை வெள்ளையும் கறுப்புமாயிருக்குன்னு அதையும் எடுத்துட்டான். உடம்பைக் குறைக்கப் பெங்களூருக்குப் பக்கத்திலே ஒரு இயற்கை வைத்தியசாலைக்குப் போயிருக்கான். நாற்பத்தைந்து நாளுக்கு அப்புறம் காய கல்பம் சாப்பிட்டவன் மாதிரித் திரும்பி வரப் போறான்....''

''இவ்வளவு ஆயத்தமா?''

''யுத்த முஸ்தீபுன்னு சொல்லு.''

''ஓ. ஆர்மி. கரெக்ட்.''

''நீ மல்லிகாவைக் கல்யாணம் செய்து கொள்றதுன்னு முடிவு எடுத்திருந்தா —எடுத்திருக்க மாட்டேன்னு நினைக்கிறேன் — ரகசியமா ரிஜிஸ்டர் ஆபீஸில் காரியத்தை முடி.''

''காரியம்னா அர்த்தம் வேறே சாமா.''

''எதுவோ எப்படியோ உனக்கு ரெண்டு பக்கத்திலேந்தும் எதிர்ப்பு இருக்கும்.''

''மூணு.''

''அது யார்?''

''மல்லிகாதான்.''


''அப்ப உன் கதை கோவிந்தாதான்... அதோ அவ வர்றா... நான் கழண்டுக்கிறேன்.''

அர்ஜுனன் ஏதோ ஒரு யோசனையில் பறிகொடுத்தவனைப் போலப் பார்த்தான்.

மல்லிகா அருகே வந்து நின்றதைக்கூட அவன் உணரவில்லை.

(தொடரும்)

அவர்: ''உங்க துணுக்கையெல்லாம் எவனோ ஒருத்தன் காப்பியடிச்சு வேற்றுமொழிப் பத்திரிகையில் எழுதறானே!...''



இவர்: ''ஆமாம்! பார்த்தவுடன் எனக்கே 'துணுக்'கென்னுச்சு!'' -ச. ரமேஷ்குமார்

பா.ரா — ஒரு பேட்டி

கே: உங்கள் எதிர்காலத் திட்டம் என்ன?

பதில்: காங்கிரஸில் சேர்ந்த பிறகு அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைப்பொறுத்துத்தான் எதிர்காலமே இருக்கிறது. அரசியலில் தனிப்பட்ட நபர் நடவடிக்கை எடுப்பதற்கும் ஒரு கட்சி நடவடிக்கை எடுப்பதற்கும்வித்தியாசம் உண்டு. கட்சி என்ன நடவடிக்கை எடுக்கிறது நம்மை என்ன செய்யச் சொல்கிறது என்பதைப் பொறுத்து என்னுடைய எதிர் காலத் திட்டம் இருக்கும்.

கே: நீங்கள் கட்சியை விட்டுப்போவது பதவிக்காகத் தான் என்று பேசிக்கொள்கிறார்களே...?

பதில்: வெறும் அபத்தம். என்னுடைய பேரைக் கெடுப்பதற்காகத்தான் அப்படி கூறுகிறார்கள். நெருக்கடி நிலை காலத்தில் போனால் பதவி கிடைக்கும் என்று பலபேர் சொன்னார்கள். நான் போகவில்லை. எனது அரசியல் வாழ்க்கையிலே பதவிகளைத் தேடி நான் எப்பவுமே யாரிடமும் போனதில்லை.

கே: கட்சி மாறுகிறவர்களை மக்கள் புறக்கணித்து வருகிறார்களே...

பதில்: கட்சி மாறி என்று சொல்வது தவறு. ஏனென்றால் தேர்தலுக்காகவோ தேர்தலின் விளைவாகவோ ,தேர்தல் காலத்திலோ பதவிக்காகவோ இன்னொரு கட்சிக்குப் போனால் கட்சி மாறுவது ஆகும். புதியதொரு சூழ்நிலையில் ஏற்படும் கருத்து மாறுபாடுகள் காரணமாக ஒரு கட்சியின் எதிர்காலத் திட்டங்கள் சரியில்லை எனக் கருதி நாட்டின் நலனுக்காக ஜனநாயக நலனுக்காக அந்தக் கட்சியிலிருந்து ராஜினாமாச் செய்து இன்னொரு கட்சிக்குச் சாதாரணத் தொண்டனாகப் போகும் போது கட்சி மாறி என்று இடித்துரைப்பது எப்படிப் பொருந்தும்?

கே: ஜனதா கட்சியைவிட்டு ஏன் வெளியேறினீர்கள்?


பதில்: தமிழ்நாடு ஜனதாக் கட்சி நிர்வாகிகள் முறைப்படி தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். இது அட்ஹாக் கமிட்டி அல்ல. தலைவனை மாற்ற வேண்டுமென்றால் பொதுக் குழுவைக் கூட்டி, ஜனநாயக முறையில் அதைச் செய்ய வேண்டும். சமீபத்தில்தான் தலைவர் மேலே முழு நம்பிக்கை இருப்பதாகத் தீர்மானங்கள் போட்டார்கள். தவறு ஏதும் செய்யாத தலைவரை நீக்க ஜனநாயக முறையெல்லாம் மறந்து கமிட்டியைக் கலைத்து வேறொரு கமிட்டியை அட்ஹாக் ஆக ஏன் போட வேண்டும்? அதிகாரம் இருக்கலாம். ஆனால் அதை துஷ்பிரயோகம் செய்யக் கூடாதல்லவா?

கே: இந்திரா காங்கிரஸில் இதுபோன்ற அதிகார துஷ்பிரயோகம் இல்லை, இராது என்று நினைக்கிறீர்களா?

பதில்: நான் இப்போதுதான் சேர்ந்திருக்கிறேன். இதற்குள் இப்படித்தான் நடக்கும் என்று நான் ஏன் கற்பனை செய்ய வேண்டும்? நல்லபடியாக நடக்கும் என்று ஏன் எதிர்பார்க்கக் கூடாது?

கே: சில காலமாகவே பா. ரா. கட்சி மாறப் போகிறார் என்று ஹேஷ்யங்கள் கூறப்பட்டு வந்தன. ஆனால் நீங்கள் அதை மறுத்திருக்கிறீர்கள். நான் ஜனதாவில் தான் இருக்கப்போகிறேன் என்று கூறி வந்தீர்கள். இப்போது திடீரென்று மாறியிருக்கிறீர்கள்?

பதில்: சில மாதங்களுக்கு முன்பு நான் சொன்ன கருத்துக்கும், இப்பொழுது



நான் கூறும் கருத்துக்கும் மாறுபாடு இருந்தால் அதற்குக் காரணங்கள் இருக்கும். எஸ். வி. லட்சுமணனை டிஸ்மிஸ் செய்யப் போகிறார்கள் என்பது அன்று எனக்குத் தெரியுமா என்ன? நான் இன்று முடிவு எடுக்கிறேன் என்றால் இன்று என்ன காரணத்துக்காக முடிவு எடுக்கிறேன் என்பது தானே முக்கியம்? இன்றைய அரசியல் சூழல், நாட்டின் இன்றைய நிலைமை, இவற்றை ஒட்டு மொத்தமாக யோசித்துத் தான் முடிவெடுக்க வேண்டும். காங்கிரஸ் பிரிவு 1969ல் ஏற்பட்டது. அதன் பின் காமராஜ் இந்திரா காங்கிரஸுடன் எப்படி தேர்தல் கூட்டு வைத்துக் கொண்டார் என்று கேட்க முடியுமா? சவான் நேற்று வரை எதிர்த்தவர். இன்று இந்திரா காந்தியைப் புகழ்ந்திருக்கிறாரே?


கே: எஸ். வி. லட்சுமணன் ஜனதாவிலிருந்து விலகி னாலும் இந்திரா காங்கிரஸில் சேரவில்லையே?

பதில்: அது அவருடைய தனிப்பட்ட விவகாரம். ஆனால் ஒன்று. பொறுத்திருந்து பாருங்கள்!

கே: எதிர்க்கட்சிகளுக்கு இனி எதிர்காலம் இல்லை என்பதால்தான் நீங்கள் இந்திரா காங்கிரஸுக்குச் சென்றீர்களா?

பதில்: எதிர்க் கட்சிகளுக்கு எதிர்காலம் இருக்கலாம். ஆனால் ஜனதாவுக்கு எதிர்காலம் இல்லை. 1977 தேர்தலில் மக்கள் எங்களுக்கு வோட்டுப் போட்டார்கள். ஆறு வருடம் நாங்கள் ஆட்சி செலுத்த. ஆனால் இரண்டு வருடங்களிலேயே வெளியில் வந்துவிட்டோம். இது மக்கள் தப்பா? அல்லது இந்திரா காந்தி தப்பா? ஜனதா கட்சி 1, 2, 3, 4, 5 என்று உடைந்தால் யார் தப்பு? நாங்களே எங்களை அழித்துக் கொண்டோம்.

கே: அவசர நிலைப்பிரகடனத்துக்கும் பிறகு காமராஜர் இந்திரா காங்கிரஸை எதிர்த்தாரா இல்லையா? அவரது பக்தன் என்று கூறிக் கொள்ளும் நீங்கள் அதில் சேரலாமா?



பதில்: நோய்வாய்ப்பட்ட பிறகு அவர் அபிப்பிராயம் சொன்னாரா? காமராஜர் மனம் எனக்குத் தெரியும். நான் இந்திரா காந்தியை எதிர்த்தது உண்மையே. அன்றைய சூழ்நிலை என்ன? அவர் கட்சியிலேயே இருந்த சந்திர சேகர் கூட எதிர்த்தார். ஆனால் அவசர நிலைப் பிரகடனம் முடிந்தது. தேர்தல் நடந்தது. இந்திரா காந்தியை மக்கள் தண்டித்தார்கள். மாற்றுக் கட்சிக்கு வாய்ப்பளித்தார்கள். ஆனால் நாம் சரியாக நடந்து கொள்ளவில்லை. திரும்பவும் அவரே ஆட்சிக்கு வந்தார். மக்கள் ஓட்டுப் போட்டுத்தானே வந்தார்? 27 மாதங்களுக்குள் ஒருவரை இறக்கித் திரும்பவும் அவரையே அரியாசனத்தில் ஏற்றிய மக்கள் கெட்டிக்காரர்களே ஒழிய கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாத நாம் அல்ல. இன்று மாறிய சூழ்நிலையில் காமராஜ் இருந்தால் என்ன செய்திருப்பார்? என்று யோசிக்கிறேன். மனச்சாட்சிப்படி நடக்கிறேன்.

கே: ஒரு கட்சியிலிருந்து மற்றொரு கட்சிக்கு மாறுவது ஆரோக்கியமான அரசியலுக்கு வழி வகுக்கும் என்று நினைக்கிறீர்களா?

பதில்: நான் ஸ்தாபனக் காங்கிரஸிலிருந்து அன்று ஜனதாவுக்குச் சென்றேன். அது ஆரோக்கியமான அரசியல் என்று நீங்கள் ஒப்புக்கொண்டால் இதுவும் ஆரோக்கியமானதே. வாஜ்பாய், சரண்சிங், பெர்னாண்டஸ், அத்வானி எல்லோரும் ஜனதாவிலிருந்து பிரிந்து சென்றார்களே அவர்கள் எல்லாம் கட்சி மாறியதாக வைத்துக் கொண்டால் நானும் கட்சி மாறியதாக வைத்துக் கொள்ளுங்கள்.

கே: ஒரு கட்சியிலிருந்து மற்றொரு கட்சிக்குச் செல்பவர்கள் எல்லோருமே பதவியிலிருக்கும் கட்சிக்குத் தான் செல்கிறார்கள். வலுவான எதிர்கட்சியே யில்லாமல் ஏகக்கட்சி ஆட்சி ஜனநாயகத்திற்கு ஆபத்தில்லையா?

பதில்: மற்றவர்களுக்கு எந்த அளவுக்கு ஜனநாயகத்தைக் காப்பாற்றும் அக்கறை இருக்கிறதோ அந்த அளவுக்கு எனக்கும் இருக்கிறது. வலுவான எதிர்க் கட்சியை ஆளும் கட்சி உருவாக்கும் என எதிர்பார்க்கிறீர்களா? நல்ல எதிர்க் கட்சி ஏன் அமையவில்லை? ஜனதா என்று ஒன்றை அமைத்தோமே அந்தக் கட்சி என்ன ஆயிற்று? ஏன் வாஜ்பாய், சரண்சிங், அத்வானி, பெர்னாண்டஸ் ஆகியவர்கள் ஓடிப் போனார்கள்? ஏன் என்னை மட்டும் குற்றம் சாட்டுகிறீர்கள்?

கே: சத்தியமூர்த்தி பவன் யாருக்குச் சொந்தம்?

பதில்: காங்கிரஸ் சொத்துக்கு ஒரு டிரஸ்ட் இருக்கிறது. நானும் ஒரு டிரஸ்டி. டிரஸ்ட்டை நான் நிர்வகிக்கிறேன். காங்கிரஸ் பிளவுபட்டதினால் வழக்கு வந்தது. அந்த வழக்கு முடியவில்லை. அதனால் அதைப் பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை.

பேட்டி : சுஜன்

"அனு....?' அதிர்ச்சியோடு நான் பின் வாங்கியதைப் பற்றி அவள் கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல் இன்னும் அதே வெற்றுப் பார்வையோடு எங்கோ இலயித்திருந்தாள்.

''உன்கிட்டே இதை நான் எதிர்பார்க்கவே இல்லே அனு''

அவள் திடீரென்று சிரித்தாள். கலகல வென்ற அந்தச் சிரிப்பில், எதை வலையாக்கி என் இதயத்தை இழுத்துக் கொண்டாளோ. அந்தச் சங்கீதச் சிரிப்பில் இன்று...உயிரில்லே.

''ஸ்டாப் இட்'' நான் பல்லைக் கடித்தேன். அவள் பட்டென்று சிரிப்பை நிறுத்தி விட்டு என்னைப் பார்த்தாள்.

''பெண்ணைப் பார்த்தாச்சு... நிச்சயதார்த்தம் பண்ணியாச்சு... கல்யாணத் தேதியைக் குறிச்சுட்டு மண்டபத்துக்கும் அட்வான்ஸ் கட்டியாச்சு. இத்தனையும் முடிஞ்ச பின்னால் ''நீ என்ன சொல்றே அனு'' ன்னு என்னைக் கேட்டா என்ன சொல்றது? உங்களுக்கு வாழ்த்துத்தான் சொல்ல முடியும். இல்லே... வயிறு வலிக்கச் சிரிக்கத்தான் முடியும்.''

அவள் விளக்கம் என்னை ஊமையாக்கியது. எல்லாவற்றையும் முடித்து விட்டு இன்று அவள் புடவைக்குப் பின் ஒளியத் துடிக்கும் ஒரு கோழையாக என்னை உணரும்போது எனக்குள் நானே கசந்தேன். ஆனால் இது எப்படி நடந்தது? இதற்கு ஒரு வகையில் இந்த அனுவும் காரணம்தானே?

''போகலாமா?''



அறிமுக எழுத்தாளர்

கதாசிரியன் என்பதோடு நான் ஒரு மேடை நடிகன், நாடகாசிரியன், கவிஞன், என்பதையும் தன்னடக்கத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். ''நாடகாலயா'' என்ற நாடகக் குழுவின் மூலம் பல மேடை நாடகங்களை நடத்தி வருகிறேன். குடத்தில் ஒளிர்ந்து கொண்டிருந்த இந்த விளக்கைக் குன்றின் மேல் ஏற்றி வைத்திருக்கும் 'கல்கியை' யும், என்னைக் கலைஞனாக உருவாக்கிய பெற்றோர்களையும் நன்றியோடு நினைத்துக் கொள்கிறேன். எழுத்துத்துறையில் சாதனைகள் புரிய வேண்டும் என்ற தாகம் தணியாத வரை எழுதுவேன். என் இலட்சியம்... எழுத்து... எழுத்து... எழுத்து..

கோவி. ஜெயராமன்

கரந்தற்ற அவளுடைய கேள்விக் கணை என்னைத் தாக்கியது.

''அனு...'' அளவு கடந்த சோகத்தால் என் குரல் கரகரத்தது. என்னையுமறியாமல் அவள் கரங்களைப் பற்றியபடி ''அனு... ஐ....ஐ... லவ்... யூ..'' அனு... என்று இறைஞ்சினேன். அவள் மிகவும் நாசூக்காக என் கரங்களைத் தவிர்த்தாள்.

''உங்க பேரேஜ் இன்விடேஷனை மறக்காம அனுப்புங்க... உங்களைத்தான் 'மிஸ்' பண்ணிட்டேன். அட்லீஸ்ட் உங்க மேரேஜுக்காவது வரேனே'' என்றவள் வேகமாகத் திரும்பி நடந்தாள். நான் சிலையாக நின்றிருந்தேன். ஆள் நடமாட்டமற்ற அந்தப் பார்க்கின் ஓங்கி உயர்ந்த அசோக மரங்கள் எனக்கு அனுதாபிப்பது போல் கொஞ்சநேரம் அசைந்துவிட்டு ஓய்ந்தன. தூரத்தில் புள்ளியாகிக் கொண்டிருக்கும் அனு என்இதயச் சுவர்களை மிதித்துக் கொண்டிருந்தாள். எவ்வளவு பெரிய ஏமாற்றத்தை எத்தனை எளிதாக ஜீரணித்துக் கொண்டாள்? ஏதோ அன்றாட நிகழ்ச்சி போல அவள் நடையில் தான் எத்தனை அலட்சியம்? மென்மையான பெண்மையைச் சுற்றி இப்படி ஓர் இரும்புச் சுவரா? எந்தப் பிரச்னைகளுமே பாதிக்காத அந்த இதயத்தில் நான் இருக்கிறேன் என்ற நினைவின் இனிப்பில் எத்தனை இரவுகள் தூக்கத்தைத் தோற்கடித்திருக்கிறேன்? ஆனால் இன்று... எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. நான் அனுவோடு பேசுவது இது இரண்டாவது முறைதான். பேசாமல் பழகாமல் ஒருவருக்கொருவர் எத்தனை அந்நியோன்யமாக....

கண்ணீரின் தடம் என் கன்னத்தில் கனத்தது. நகர்ந்தேன். நீண்ட தார்ச் சாலையில் நிதானமாக நடந்தபோதும் சரி, சேலம் போகும் பஸ்ஸில் சிரமப்படாமல் 'சீட்' பிடித்தபோதும் சரி — கண் மூடித்தனமான வேகத்தில் பஸ் சேலத்தை நோக்கி வழுக்கிக் கொண்டிருந்தபோதும் சரி — எனக்குள் அனு நின்றாள், நடந்தாள், நீந்தினாள்.

சேலத்தில் அப்பா ஒரு குறிப்பிடத்தக்க பாங்க் ஆபீசராக இருந்தும் எனக்கு அவரால் மேட்டூரில் ஒரு கிளை பாங்கில் மட்டுமே வேலை வாங்கித் தர முடிந்தது. பற்றுக்குறை பல்லைக் காட்ட முடியாத வசதியோடு, தனியறை வாசத்தில் என் வாழ்க்கை வண்டி ஓடிக் கொண்டிருந்தபோதுதான் எதிரே என் வசந்த காலத்தை ஏந்திக் கொண்டு எதிர் வீட்டில் தோன்றினாள் அனு. பஞ்சாலையில் பணி புரியும் அண்ணன் வீட்டில் ஓர் அடைக்கலப் பொருளாக வந்திருந்தாள் அவள். வயதான அவள் தாய் வடக்கே எங்கோ மூத்த மகனோடு தன் மூப்புக் காலத்தை வழி அனுப்பிக் கொண்டிருந்தாள்.

அனுவின் வரவு அலுப்புத் தட்டிப் போன என் வாழ்க்கையில் ஓர் அருமையான திருப்பத்தை ஏற்படுத்தியது. மற்ற பெண்களில் தனித்து நிற்கும் அவளுடைய கேரக்டர் என்னை அவள் பைத்தியமாக்கியது. தொடங்கினேன்... தொடர்ந்தேன்...முதலில் அவளை அவள் எண்ணத்தை... பின் அவள் இதயத்தை பார்வைகள் கலந்தன. பேசின...உற


அறிமுக எழுத்தாளர்
போட்டிக்கதை –1
ஜெரா

வாடின. காதல் உயிர் பெற்றது. கோவிலில் ஒரு நாள் அவளைச் சந்தித்துக் கேட்டேன். கல்யாணத்துக்குச் சம்மதமா என்று. மௌனமாகத் தலையாட்டினாள். மகிழ்ச்சியாகச் சிரித்தாள்: ''அண்ணனை வந்து பாருங்களேன்'' என்று அடக்கமாக அறிவுறுத்தினாள். நான் அடக்க முடியாத ஆனந்தத்தால் அரைச் சுற்றுப் பறந்தேன். அதிகமாக வியர்த்தேன். ஓர் அந்தி மாலை நேரத்தில் அவளுடைய அண்ணனைப் பார்த்தேன். நிதானமாக என் தேவையைக் கேட்டுவிட்டு நிர்தாட்சண்யமாகப் பதில் கொடுத்தார்.

''அனு எல்லாத்தையும் சொன்னா. ஆனா உங்களுக்கு அவளைக் கொடுக்கிறதுக்குஎனக்கு அவ்வளவு பிரியமில்லே. எதுக்கும் பெத்தவளைப் பார்க்கட்டும்னு நேத்தே அவளை அம்மா கிட்டே அனுப்பிட்டேன். திரும்பி அனு இங்கே வருவாளோ மாட்டாளோ எனக்குத் தெரியாது.''

கடமைக்காகப் பேசிய அவருடைய கழுத்து அன்று என் கைகளிலிருந்து தப்பியது அவர் கட்டிய தாலியின் மகிமையோ என்னவோ. அதற்குப் பின் இரண்டு மாதங்களுக்கு மேல் காத்திருந்தேன். அனுவும் இல்லை— அவள் எங்கிருக்கிறாள் என்கிற விலாசமும் இல்லை. அப்பாவும் அம்மாவும் என் கல்யாணத்தை முடித்துவிட முடிவு எடுத்து விட்டார்கள். மறுத்துப் பேச முடியவில்லை. அனு வருவாள் என்ற ஆசையில் பலமும் இல்லை. பலன்... நான் என்னை இழந்தேன். ஜாதகங்கள் கைமாறின. பெண்ணைப் போய்ப் பார்த்தேன். அவள் — வித்யா — ஏதோ ஒரு கான்வென்டில் டீச்சராக உத்தியோகம் பார்க்கிறாள். அழகாக இருந்தாள். அருமையாக ஆங்கிலம் பேசினாள். சுத்தமாக வீணை வாசித்தாள். சூழ்நிலைகள் என்னைத் தலையாட்டிப் பொம்மையாக்கின. வித்யாவோடு என் வருங்காலம் இணையப் போவதற்கான இறுதி ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில்...இதோ... வந்து நிற்கிறாள் அனு' அதுவும் எப்படி? மாலை அணிந்துகொள்கிறேன் என்ற மலர்ந்த முகத்தோடு'

உடனே வீட்டுக்குத் தந்தி அடித்துவிட்டேன். — கல்யாண ஏற்பாடுகளை நிறுத்தி வையுங்கள் என்று. ஆனால் நான் வீட்டுக்குப் போனபோது... ஓ... எத்தனை கொடுமையான நேரம் அது' கோபமே என்னவென்று அறியாத அப்பா அன்று கோவைப் பழக் கண்களோடு காத்திருந்தார். பாசத்தோடு பேசும் அம்மா பார்த்தாலே முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அன்போடு பழகும் தம்பி அலட்சியமாக நகர்ந்துகொண்டான்.

''ராஜா, உனக்கென்ன பைத்தியமா — பாக்கு வெத்திலை மாத்திக்கிட்ட பின்னாலே கல்யாணத்தை நிறுத்தச்சொல்றியே நானும் அப்பாவும் தலை நிமிர்ந்து நடக்க முடியுமா?'



சர்வர்: பேப்பர் மசாலா நிறைய மீந்து போய் விட்டதே, என்ன செய்வது?

முதலாளி: பக்கத்து பழைய பேப்பர் கடையில் கொண்டு போட்டுவிட்டு வா!

த. கல்யாணராமன்

அடுப்படியில் நின்று அம்மா அழுது அரற்றினாள். அப்பா அழைத்தார்.

''மிஸ்டர் ராஜா! டன்லப் டிலைட்— கல்யாண மண்டபத்துக்கு உன்னை நான் அழைச்சுட்டுப் போகவா? இல்லே, சுடுகாட்டுக்கு நீ என்னைக் கொண்டு போறியா?''

நான் விழித்தேன். அதிர்ந்தேன். விழிநனைத்தேன். எதையும் விளக்க முடியாமல் வீட்டை விட்டுக் கிளம்பி இங்கே வந்தேன். அனுவைப் பார்த்தேன். அவளோ என் வருங்காலத்துக்கு வாழ்த்துக் கூறிவிட்டுப் போய் விட்டாள்.

இரவு. மோட்டு வளைக்குள் எதையோ தேடிக் கொண்டிருந்த எனக்கு அப்பாவின் கனைப்பு சிலிர்ப்பைத் தந்தது.

''ராஜா... அப்படின்னு என்ன முடிவு எடுத்தே?''

''எனது முடிவுக்கு ஒன்னும் அர்த்தம் இல்லே! அப்பா — ஐ லவ் அனு. அனு இல்லாத வாழ்க்கை அர்த்தமே இல்லாத வாக்கியம் போலத்தான். அன்பார்ச்சுனேட்லி நீங்க என் விருப்பத்தை மதிக்கலே ஸோ... ஐ ஹால் மை ஹேப்பினஸ்....''

''ராஜா! உன்னுடைய போராட்டத்தை என்னால் புரிஞ்சுக்க முடியுது. ஆனா நல்லா யோசிச்சுப் பாரு. நீயே சம்மதிச்சே. பெண் பார்த்தே. ஏற்பாடுகள் நடக்கிறதையும் அனுமதிச்சே. திடீர்னு கல்யாணத்தை நிறுத்தச் சொன்னா நடக்கிற காரியமா? நம்ம கௌரவம் என்ன ஆகும்? சரி அதை விடு. நம்மை நம்பிய பெண் வீட்டார் எப்படி இதை ஜீரணிக்க முடியும்?''

அவர் நடையின் தளர்ச்சி அவருடைய மனப் பாதிப்பைப் பிரதிபலித்தது. அம்மா வந்து உணர்வற்ற என்னைத் தொட்டு உயிர் தந்தாள்.

''ராஜா! நீ கல்யாணத்தை நிறுத்தச் சொன்னது பெண் வீட்டு வரைக்கும் போயி ஒரே கலாட்டாவா இருந்துச்சு - எது எப்படி யானாலும் கல்யாணம் நடக்கும்னு அப்பா சொன்னதும்தான் அவர்களுக்கு நிம்மதியா போச்சு — நீ உன்னை மாத்திக்குவேன்னு எல்லாரும் எதிர்பார்க்கிறோம்.''

அம்மா படபடவென்று பொரிந்துவிட்டுப் போய்விட்டாள். தனித்து விடப்பட்ட எனக்குள் ஒரு பூகம்பம் — அனுவோடு நான் கட்டிய கனவு மாளிகைகள் அதிலே தான் தூளாகச் சரிந்து விழுந்து மண் மேடாகிப் போய்க் கொண்டிருந்தன.

காலையில் ஹாலில் அமர்ந்து எல்லோரும் கல்யாணக் காரியங்களில் மூழ்கி இருக்கும் போது.... அவள் வந்தாள் — வித்யா தன் தந்தையோடு.

''மிஸ்டர் ராஜா... இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிக்கலேன்னு கேள்விப்பட்டேன். அவர் வேறு யாரையோ ஒரு பெண்ணை

புதிய கோல்கேட் ஃப்ளோரிகார்ட் டூத்பேஸ்ட்



குழந்தைகளுடைய பற்களின் மென்மையான எனாமல் எளிதில் துவாரங்களுக்கும், சிதைவுக்கும் உள்ளாகிறது. பெரியவர்களுக்கும் பற்சிதைவுக்கு எதிராகப் பாதுகாப்பு தேவை. புதிய ஃப்ளோரிகார்ட் டூத்பேஸ்ட் பல் துவாரங்களுக்கும், பற்சிதைவுக்கும் எதிராக உங்கள் குடும்பத்தினருக்கு நிச்சயமான பாதுகாப்பைத் தருகிறது. துவாரங்களையும், பற்சிதைவையும் உண்டாக்கும் வாய் அமிலங்களுக்கு எதிராகப் பற்களை உறுதிப்படுத்துவதற்கென பல் எனாமலுடன் இணைந்து செயல்படும் விசேஷ கோல்கேட் எம்.எஃப்.பி ஃப்ளோரைட் அதில் உள்ளது. கோல்கேட் ஃப்ளோரி கார்ட் புல்லரிக்கும் புதுச்சுவை கொண்டது. உங்கள் குடும்பத்திற்கு இன்றே வாங்குவீர்.

MFP FLUORIDE

MFP



உலகெங்கும் உள்ள ஆராய்ச்சி சாலைகளில் சோதிக்கப்பட்டுள்ள எம்.எஃப்.பி ஃப்ளோரைட் துவாரங்களுக்கும், சிதைவுக்கும் எதிராகப் பற்களை உறுதிப்படுத்துகிறது என்பது மருத்துவ ரீதியாக நிரூபணமாகியுள்ளது. கோல்கேட்டின் தீவிர ஆராய்ச்சி மட்டுமே இந்த தனிப்பட்ட எம்.எஃப்.பி ஃபார்முலாவை உங்களுக்கு வழங்க முடியும்.

ஃப்ளோரிகார்டில் உள்ள எம்.எஃப்.பி ஃப்ளோரைட் எனாமலுடன் இணைந்து துவாரங்களுக்கும், சிதைவுக்கும் எதிராக உங்கள் பற்களை உறுதிப்படுத்துகிறது.

இப்பொழுது தமிழ்நாடு மற்றும் கேரளாவில் மட்டுமே கிடைக்கும்.

CFT-G-2 TM



பாகவதர்: அந்தக் காலத்தில் நான் குருகுல வாசம் செய்து குருவிற்குத் துணி துவைத்துப் போட்டு, வீட்டு வேலைகளைச் செய்து, தோட்ட வேலைகளைக் கவனித்து, கடைக் கண்ணிக்குப் போய் வந்து.....

நண்பர்: சங்கீதத்தைத் தவிர மீதி எல்லாவற்றையும் நன்றாகக் கற்றுக் கொண்டு விட்டீர்கள்!

-லலிதா செல்லப்பா

விரும்பறதாகவும் தெரிஞ்சது — அது உண்மையா?''

மௌனம் டன் கணக்கில் கனத்தது... அவளே தொடர்ந்தாள். ''ஸோ, மௌனம் சம்மதம்தானே? இந்த நிலைமையிலே வற்புறுத்தலுக்காக நடத்தற கல்யாணத்தை நான் விரும்பல்லே! அப்கோர்ஸ்— இந்தக் கல்யாணம் நின்னு போனா எங்க ஃபேமிலி, பேரண்ட்ஸ், நான் எல்லோரும் பாதிக்கப்படுவோம். ஆனா கட்டாயத்தாலே கல்யாணம் பண்ணிக்கிட்டா நான் நிச்சயமா என் வாழ்க்கையில் நிறைவு காண முடியாது! அப்படிப்பட்ட ஹிப்போக்ரஸியை நான் வெறுக்கிறேன். இவர் எனக்குக் கணவனாக நடிக்கப் போறதை விட வேறே ஒரு இழப்பு எனக்கு இருக்க முடியுமா? இந்த ''நாடக வாழ்க்கையை'' 'செட்டப்' பண்ண இத்தனை படிச்சவங்க எதுக்கு? நான் மனத்திருப்தியோட வாழ வர்ற ஒரு கணவனை எதிர்பார்க்கிறேன். தன் வாழ்க்கையைத் தியாகம் பண்ணிட்டுக் கணவனா நடிக்க வர்ற தியாகியை நான் ஏத்துக்க முடியாது. என்னை விட்டுடுங்கோ! இது எனக்குப் பெரிய இழப்பாக இருக்கலாம். ஆனா அதுக்காக நான் ஒரு போலிக் கணவனை உண்டாக்க விரும்பலே. எல்லோரும் என்னை மன்னிக்கணும்.''

மௌனம். அப்பாதான் பேசினார்.

''வித்யா! உன் உணர்ச்சிகளை நான் பாராட்டுகிறேன். ஆனா இந்தப் பாராட்டு உனக்கு நல்ல வாழ்வைத் தந்துவிடாது.''

அவள் கலகலவென்று சிரித்தாள். ''சார்— இதிலே எனக்குக் கொஞ்சமும் வருத்தமில்லே. போலித்தனமான வாழ்க்கை வாழ முடியாதுன்னு எடுத்துச்சொல்ல எனக்குத் தைரியமிருக்கு. இந்தக் காலத்து இளைஞர்களுக்கு இன்னும் சரியா முடிவு எடுக்கிற பக்குவம் வரலே.''

வித்யா முடித்துவிட்டுத் தன் தந்தையைப் பார்த்து ஜாடை காட்டினாள். அவர் எழுந்தார். திடீரெனக் குலுங்கிக் குலுங்கி அழுதார். பின் தன் மேல் துண்டால் வாயைப் பொத்தியபடி மகளுடன் நகர்ந்தார்.

நான் வாசல்வரை அவர்களுடன் சென்றேன். அவள் டாக்ஸியில் ஏறுவதற்கு முன் ''ஜஸ்ட் எ மினிட், மிஸ் வித்யா'' என்றேன். ''நோ பார்மாலிட்டிஸ் — எனக்கு நன்றி சொல்லாதீங்க. நான் செய்தது தியாகமோ தர்மமோ இல்லே. நீங்க உங்க பிரியமானவளோடு சந்தோஷமா இருக்கணும். உங்க வளமான எதிர்காலத்துக்கு என் வாழ்த்துக்கள்'' என்றவள் டாக்ஸிக் கதவைத் திறந்துகொண்டு சற்றுநேரம் நிதானித்தாள். பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவள்போல ''மிஸ்டர் ராஜா! மறக்காம உங்க மேரேஜ் இன்விடேஷனை அனுப்புங்க. உங்களைத்தான் 'மிஸ்' பண்ணிட்டேன். அட்லீஸ்ட் உங்க மேரேஜுக்காவது வர்றேனே'' என்று சொல்லிவிட்டு அவசரமாகத் தன் கர்சீப்புக்குள் முகத்தைப் புதைத்தபடி டாக்ஸியில் ஏறிவிட்டாள். ஒருவேளை அழுகிறாளோ? எனக்கு இதயம் வலித்தது.

தூரத்தில் காரின் பின்புறக் கண்ணாடி வழியாக அவள் கையாட்டி ''குட் பை'' சொல்வது நிழலாக என் கண்களில் உறவாடியது. அனு எத்தனை தைரியமாக என்னிடம் விடை பெற்றாளோ அதே தைரியம் கொஞ்சமும் குறையாமல் அதே வார்த்தைகளைக் கூறிவிட்டு இதோ இவளும் போகிறாள். அனுவையும் இவளையும் ஒப்பிடும்போது நான்... நான்... வெட்கத்தோடு தலை குனிந்து கொள்கிறேன். பிரச்னைகளை உருவாக்கி ஏங்கித் தவிக்கும் என்னைப் போன்றவர்களுக்கிடையே எப்படிப்பட்ட சிக்கலான சூழ்நிலைகளிலும் வெறும் சம்பிரதாயங்களுக்காகவும், சமூகப் பழக்கங்களுக்காகவும் தன்னைப் பலியாக்கிக் கொள்ளாமல், சதா தாக்கும் சமுதாய அலைகளிலே, எதிர் நீச்சலிட்டுக் கொண்டு, அனுவையும் வித்யாவையும் போல, சிலர் இன்றும் இந்தச் சமுதாயத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள்.


'துணுக்' துளசிதாஸ்



அவர்: ''இன்னிக்கு உங்களை விட்டா, பத்திரிகையில் துணுக்கு எழுத வேற ஆள் கிடையாது... இருந்தும் ஏன் கவலையா இருக்கீங்க?...''

துளசிதாஸ்: ''நம்ம பொழப்பே இப்படிச் ''சிரிப்பாய்'' போயிடுச்சேன்னு நினைக்கற போது சில சமயம் கவலை ஏற்படறது!'' -ச. ரமேஷ் குமார்





அவளுக்கென்ன மகராசி!

எம்.கே.சங்கரன்

பதவி உயர்வு பெற்றுத் திருநெல்வேலிக்கு மாற்றலாகி வந்தான் ஜெகன். பத்து வருடங்களுக்கு முன் பட்டம் பெற்று வேலை கிடைக்காமல் திண்டாடி ஒருவர் சிபாரிசில் திருநெல்வேலியில் உள்ள ஒரு சிட்டுக் கம்பெனியில் வேலை பார்த்த அனுபவம் அவன் நினைவில் வந்தது. ஆபீஸ் வேலை என்று எண்ணிச் சேர்ந்தவனுக்குத் தன் உத்தியோகம் 'கலெக்ஷன் பாய்' என்று பிறகுதான் தெரிந்தது.

சாலியார் தெருவில் ஒரு வீட்டு முற்றத்தில் இருக்கும் மாடி அறையில் தங்கல். எதிரே முனியாண்டியின் டீக்கடை.

முனியாண்டிக்கு நாற்பது வயதுக்கும் மேல் இருக்கும். புகை படிந்த கருத்துப் போயிருந்த அந்த டீக்கடையைப் போல் கன்னங் கரேலென்றிருந்தான். அவன் வாயிலிருந்து எப்பொழுதும் 'நல்ல' வார்த்தைகளே வந்து கொண்டிருக்கும். தெருவில் போகும் அழகிய பெண்களின் அங்க அவயவங்கள் அந்த நல்ல வார்த்தைகளால் அர்ச்சிக்கப்படும்போது அதை ரசிக்க ஒரு கூட்டமே திரண்டிருக்கும்.

ஜெகன் தங்கியிருந்த அறைக்குக் கீழ் வீட்டுக்குப் புதுக் குடித்தனம் ஒன்று வந்தது. நாகராஜன் பெரிய அதிகாரியாக இருந்தவராம். குரலில் அதிகாரம் முழங்கியது. அவர் பெண் கல்பனாவை வர்ணிக்க வார்த்தைகளே கிடையாது. அவ்வளவு அழகு. எலுமிச்சம்பழ நிறம். பட்டாம்பூச்சியைப்போல் அங்குமிங்குமாய்ப் பறந்து கொண்டிருந்தாள்.

''லக்கி ஆளப்பா நீ! பஸ்ட் கிளாஸ் உருப்படி உன் பக்கத்திலேயே வந்திருக்கு. ஜமாய்ச்சுத் தள்ளு'' — முனியாண்டி ஜெகன் முதுகில் தட்டிக் கொடுத்தான்.

"உள்ளே வரலாமா?'' தேனில் இழைந்த குரல்.

மாடி வாசலில் கல்பனா. அழகுச் சுடராய் நின்றுகொண்டிருந்தாள்.

அவளைக் கண்டதும் ஜெகன் உள்ளத்தில் ஓர் ஆட்டம்.

''வாங்க.''

அவசர அவசரமாக ஒரு பாயை எடுத்து விரித்தான்.

''என் பெயர் கல்பனா. உங்க பெயர்?''

''ஜெகவீரன்.''

''மிஸ்டர் ஜெகன்! ஏதாவது பத்திரிகை இருக்கா?''

தன் பெயரைச் சொல்லி எவ்வளவு அழகாக அழைக்கிறாள்! ஜெகன் உருகிவிட்டான்.

பெட்டி, மேஜைகளைத் துழாவி அவ்வப்போது வாங்கிய பத்திரிகைகளைத் தேடி எடுத்துக் கொடுத்தான்.

மறு நாள் முதல் காரியமாக ஒரு சர்குலேட்டிங் லைப்ரரிக்காரனைக் கண்டுபிடித்து டபுள் கட்டணம் கட்டி ஒன்றுக்கு மூன்று புத்தகங்களைப் போட வைத்தான்.

கல்பனா தினமும் வர ஆரம்பித்தாள். இருவரும் நெருங்கிப் பழகினர். காலை ஜெகன் ஆபீஸ் போகிறவரை கதை சினிமா என்று பேச்சு. ஆபீஸிலிருந்து அவன் திரும்பும்போது எதிர்பார்த்துக் காத்திருப்பது போல் வந்துவிடுவாள். ஞாயிற்றுக் கிழமை முழுக்க முழுக்க அவன் அறைதான் அவளுக்குத் தஞ்சம். சீட்டு, கேரம், செஸ் இன்னும் ஏதேதோ விளையாட்டுக்கள். எல்லாம் அவன் சொல்லிக் கொடுத்ததுதான்.

கல்பனா எந்த நேரமும் ஜெகனோடு ஒட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்து அவள் அம்மா கனகம் முறைத்துக் கொண்டிருந்தாள். அடிக்கடி கூப்பிட்டுக் கொண்டே இருப்பாள்.

"நீ இந்தக் காலத்துப் பிள்ளை இல்லே. உன் இடத்தில் நான் மட்டும் இருந்தால் இதுக்குள் முடிச்சிருப்பேன். அது உன்னைச் சுத்திச் சுத்தி வருதே தெரியலையா? ஒரு காதல் கடிதாசு தள்ளிவிடு.''

உழன்று கொண்டிருந்த மனதைத் தட்டி எழுப்பிவிட்டான் முனியாண்டி. கல்பனா நெருங்கிப் பழகுகிறாள். சிரித்துச் சிரித்து மயக்கம் ஏற்படுத்துகிறாள். இது வெறும் சிநேகமாய்ப் போய்விடக் கூடாது. அவள் உள்ளத்தைத் தெரிந்து தன் காதலை உறுதிப்படுத்திவிட வேண்டும் என்ற தீவிரம் அவனுள் எழுந்தது. தன் காதல் உணர்வுகளைக் கொட்டி ஒரு கடிதம் எழுதிப் புத்தகத்துள் வைத்துக் கொண்டான்.

கல்பனா வந்தாள். தயங்கித் தயங்கி அவள் புறப்படும் சமயம் அந்தப் புத்தகத்தை அவளிடம் கொடுத்து விட்டான்.

இரவு அவனுக்குத் தூக்கம் வரவில்லை. கல்பனா கடிதத்தைப் பார்த்தால்... ஒரு சமயம் அவள் சிரித்த முகம், மறு கணம் சீறிய முகம்! என்னவாகுமோ?

எப்பொழுதும்போல கல்பனா வந்தாள்.

கடிதத்தைப் படித்தாளா?

அவளிடம் எப்படிக் கேட்பது?

விஷமத்தனமான சிரிப்பு அவளிடமிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. அந்தச் சிரிப்புக்கு அர்த்தம்?

''ஆபீசுக்குப் போயிட்டு வாங்க'' கண்களை ஒரு விதமாகச் சுழற்றியபடி சொன்னாள்.

கடிதத்தைப் படித்திருக்கிறாள் என்பது புரிந்து விட்டது. அவனுக்குக் கோபம் வரவில்லை. ஜெகன் மனம் திருப்திப்பட்டுக் கொண்டது.

மாலை ஜெகன் ஆபீசிலிருந்து திரும்பிய போது...

வாசலில் ஒரு மோட்டார் சைக்கிள். கல்பனாவின் வீட்டுக்குள் செக்கச் செவேலென்று சுருண்ட முடி, கூலிங் கிளாஸ், ராஜ கம்பீரத்துடன் அமர்ந்திருக்கும் அவன்...

ராஜ் கார்ப்பரேஷன் முதலாளி ராஜன்!

சோபாவில் சாய்ந்தவாறு கால் மேல் கால் போட்டுக் கொண்டு அவன் அமர்ந்திருந்தது தனி ஸ்டைல். அதிதமான ஒரு பர்சனாலிட்டி.

கல்பனாவின் அப்பா, அம்மா, கல்பனா உட்பட ராஜ உபசாரம் நடத்திக்கொண்டிருந்தனர்.

டாக்ஸி ஒன்று வந்து வாசலில் நின்றது.

ராஜன் எழுந்து போய் மோட்டார் சைக்கிளில் ஏறிக் கொண்டான். தாய் தந்தையரோடு கல்பனா டாக்ஸியில் ஏறினாள். என்றுமில்லாத மாடர்ன் டைப்பில் கல்பனா டிரஸ் செய்து கொண்டிருந்தாள்.

ராஜன் மோட்டார் சைக்கிளில் முன் செல்ல டாக்ஸி கிளம்பிச் சென்றது.

இவ்வளவு ஆர்ப்பாட்டங்கள் ஏன்? ஜெகன் மனம் குழம்பிற்று. எல்லோரும் திரும்பி வர இரவு பத்து மணிக்கு மேலாயிற்று.

மறுநாள் ஞாயிற்றுக் கிழமை. வழக்கம் போல் ஜெகன் கல்பனாவை எதிர்பார்த்தான். தினமும் வருபவள் அன்று வரவில்லை. பொறுமை எல்லை மீறிற்று. இறங்கி வந்து கல்பனாவின் வீட்டை எட்டிப் பார்த்தான்.

கல்பனா தைலாகத் தாயை அனுப்பி விட்டாள். கலகம் அனல் கக்க அவன் மீது



ஒரு பார்வையை வீசிவிட்டு மேஜையிலிருந்து அவன் எழுதிய கடிதத்தை எடுத்து வந்து அவன் முன் விட்டெறிந்தாள்.

''உனக்கு எவ்வளவு துணிவிருந்தா என் பெண்ணுக்குக் காதல் கடிதம் எழுதுவே! உன் தகுதி என்ன? எங்கள் தகுதி என்ன? ராஜ் கார்ப்பரேஷன் முதலாளி தேடி வந்து எங்க கல்பனாவைக் கல்யாணம் செய்துக்கப் போகிறார். போயிட்டு வா.''

அந்தத் தாய் வீசிய சொற்களைக் கூட அவனால் தாங்கிக் கொள்ள முடிந்தது. கல்பனாவின் அலட்சியத்தை அவனால் தாங்கவே முடியவில்லை.

அன்று வேலைக்கு ராஜினாமாக் கொடுத்து விட்டு அறையைக் காலி பண்ணிச் சென்றவன்தான்.

இன்று மின் விசிறி சுழன்று கொண்டிருக்க குஷன் சீட்டில் கம்பீரமாக அமர்ந்தவாறு அந்த ஆபீசுக்கு அதிகாரியாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறான்.

கதவு கிறீச்சிட்டது.

ஆபீஸ் பாய் ரமணி பணிவாக வந்து எதிரில் நின்றான்.

''என்னப்பா வீடு கிடைச்சுதா?'' ஜெகன் கேட்டான்.

''எங்க வீட்டுப் பக்கம் பெரிய வசதியான வீடு ஒண்ணு இருக்கு சார்.''

''சாயந்திரம் பார்க்கலாமா?''

''சரி சார்.''

ரமணி ஜெகனை எதிர்பார்த்துத் தன் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தான். ஜெகன் ஸ்கூட்டரில் வந்து இறங்கினான்.

''சார் வீட்டுக்காரங்க வெளியே போயிருக்காங்க. கால் மணி நேரத்தில் வந்துடுவாங்க. அதுவரை எங்க வீட்ல வெயிட் பண்ணலாம் சார்.''

ரமணி ஜெகனைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று உட்கார வைத்தான்.

''அம்மா, எங்க மானேஜர் வந்திருக்காங்க'' ரமணி தாயை அழைத்து வந்தான்.

நடு வீட்டில் வரும்போதே ஜெகனைப் பார்த்துவிட்டாள் கனகம்.

'இது ஜெகன்... அன்று சீட்டுக் கம்பெனியில் கலெக்ஷன் பையனாக வேலை பார்த்த அதே ஜெகன்தான்.' - நடு வீட்டிலேயே நின்றுவிட்டாள்.

''அம்மா ஜெகன் பி. ஏ. படிச்சிருக்கார். தற்காலிகமாகத்தான் இந்த வேலை. என்றைக்காவது முன்னேறிவிடுவார் அம்மா'' என்று அன்று கல்பனா சொன்னது மனசில் எதிரொலித்தது.

ஜெகனோடு பழகக் கூடாது என்று கல்பனாவிடம் கனகம் எப்படியெல்லாம் போராடி இருக்கிறாள்?

அன்று ஜெகன் கொடுத்த கடிதம் — அதற்கு கல்பனா ஆசையோடு எழுதிய பதில்..

''என் உயிரே ஜெகன்! நான் மலர் என்றால் மணம் என் ஜெகன்தான்!''

காதல் மயக்கத்தில் அம்மா பக்கத்தில் நிற்பது தெரியாமல் எழுதினாள்.

கனகம் இரண்டு கடிதங்களையும் கைப்பற்றிக் கணவனிடம் காட்டிவிட்டாள். நாகராஜன் மகளிடம் கோபத்தைக் காட்டவில்லை.

''கல்பனா, அதிர்ஷ்டம் உன்னைத் தேடி வந்து கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் உன் புத்தி இப்படிப் போக வேண்டாம்'' என்று இதமாகச் சொன்னார்.

''கல்பனா, ராஜ் கார்ப்பரேஷன் முதலாளி ராஜனைப் பற்றி நீ கேள்விப்பட்டிருப்பே. உன்னைக் கல்யாணம் செய்ய ஆசைப்பட்டு ஆள் அனுப்பியிருக்கிறார். நாம் நினைச்சே பார்க்க முடியாத பெரிய இடம். ராணி மாதிரி வாழலாம்'' என்று ஆசை மூட்டினாள் கனகம்.

கல்பனா மசியவில்லை.

''இன்று உன்னைப் பார்க்க ராஜன் வரப் போகிறான். அவனைப் பார்த்துவிட்டு நீ பதில் சொன்னால் போதும்'' என்றார் நாகராஜன்.

ராஜன் மோட்டார் சைக்கிளில் கம்பீரமாக இறங்கிய தோரணை ஸ்டைலாக அமர்ந்திருந்த பர்சனாலிட்டி எல்லாம் பார்த்த கல்பனா ஓரளவு மனமாற்றம் அடைந்து வருவது தெரிந்தது. ராஜன் கல்பனாவைத் தன் மாளிகைக்கு அழைத்துச் சென்று விருந்து நடத்தினான். அங்கு நிலவிய செல்வ போகம், வெல்வெட் சோபாக்கள், பர்னிச்சர்கள், மற்ற ஆடம்பரப் பொருட்கள் எல்லாவற்றையும் கண்டு கல்பனா பிரமித்தாள் ராஜன் உரிமையோடு கல்பனாவின் கைகளைப் பற்றியபோது அவள் மறுக்கவில்லை.

பெற்றோரிடம் மனப்பூர்வமாகத் தன் சம்மதத்தைத் தெரிவித்து விட்டாள்.

மனமுடைந்து வேலையை உதறிவிட்டுச் சென்ற ஜெகனைப் பற்றிக் கல்பனா கவலைப் படவே இல்லை.

அந்தக் கல்யாணம் நடந்ததா?

கல்யாணத்துக்கு இரண்டு நாட்கள் முன் ராஜன் போலீசாரால் திடீரென்று கைது செய்யப்பட்டான். பல ஊர்களில் கார்ப்பரேஷன், எண்டர்பிரைசஸ் என்பன போன்ற ஆடம்பரப் பெயர்களை வைத்துக் கொண்டு ராஜன் பெரும் மோசடி பண்ணி இருக்கிறான். அது தவிர போகிற ஊர்களில் எல்லாம் கல்யாணம் செய்து ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு மனைவி வேறு.

பெண்ணின் தந்தை: பொண்ணுக்குக் கொஞ்சம் செல்லம் அதிகம் கொடுத்து வளர்த்துட்டேன்.

பையனின் தந்தை: இருக்கட்டும். அதற்காக, உட்கார் என்றால் மாப்பிள்ளை மடியிலா உட்காருவது?

ஆர். கோபாலகிருஷ்ணன்



மானேஜர்: என்னய்யா இது...! பஸ்ட் எய்டு' பாக்'ஸில சிப்பு, பவுடர், கண்ணாடி, பொட்டு எல்லாம் இருக்கு...

டிரைவர்: என்னைக் கேட்டா... பெண் கண்டக்டரைக் கேளுங்க...

-பாபநாசம் நாகராஜன்



அந்த விபத்தில் கல்பனா தப்பிவிட்டாள்.

நாகராஜன் ஆபீசராக இருந்த காலத்தில் லஞ்ச லாவண்யங்கள் பண்ணி வேலை போனதால் இந்த ஊர் வர நேரிட்டது. இருக்கிற பணத்தை யெல்லாம் தெரியாத பிசினசில் போட்டுக் காலி பண்ணி விட்டார். வீட்டில் தரித்திரம் தாண்டவமாடியது.

ஒரு நாள் நாகராஜன் நடு ரோட்டில் மயங்கி விழுந்து விட்டார். டீக்கடை. முனியாண்டி அவரைக் கண்டு டாக்சி பிடித்து அவரை ஆஸ்பத்திரியில் சேர்த்தான். ஒரு மாதம் ஆஸ்பத்திரி. கையில் பணம் கிடையாது. முனியாண்டிதான் தாராளமாகச் செலவு செய்தான். அவர் பிழைக்கவில்லை. போய்ச் சேர்ந்துவிட்டார்.

கல்பனா, கனகம், தம்பி இரண்டு பேர். எப்படிக் காலம் கழிப்பது? நாகராஜன் ஆபீசராக அதிகாரம் பண்ணிக் கொண்டிருந்த காலத்தில் உறவினர்களைத் துச்சமாக மதித்து உதாசீனப்படுத்தி யிருந்தார். அதனால் உறவினர் யாரும் அந்தக் குடும்பத்தை ஏறிட்டுப் பார்க்கவில்லை.

தவித்து நின்ற நேரம் முனியாண்டிதான் உதவ முன்வந்தான். முனியாண்டிக்கு டீக்கடையை விட அதிக வருமானம் கிடைக்கக் கூடிய வேறொரு பிசினஸ் இருந்தது. டீக்கடை வெறும் ஷோதான். கள்ளச் சாராய விற்பனை. சொந்தத் தயாரிப்பு. கல்பனா வீட்டில் ஒளித்து வைக்க ஏற்பாடு செய்தான். அதற்காக அந்தக் குடும்பத்துக்கு நூறு இருநூறு என்று தேவையான பணம் கொடுத்தான். பயமாக இருந்தாலும் அவனுடைய ஆதரவை அவர்களால் நிராகரிக்க முடியவில்லை. ஆதரிக்கும் தெய்வமாக அவனை மதித்தனர்.

கல்பனா வேலையில் சேர முயற்சி செய்தாள். முனியாண்டி அவளுக்கு டிரெஸ் எடுத்துக் கொடுத்து அவளுடன் மதுரைக்குத் துணையாகச் சென்றான். வேலை கிடைக்கவில்லை.

ஒரு நாள் இரவு கல்பனா ரொம்ப நேரம் புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள். கனகம் அயர்ந்து நன்றாகத் தூங்கிவிட்டாள். திடீரென்று விழிப்புத் தட்டி அவள் எழுந்த சமயம் வீட்டு விளக்கெல்லாம் அணைந்து ஒரே இருட்டாய் இருந்தது. விடி விளக்கை ஏற்றிவிட்டுப் படுக்கையில் விழப்போன கனகம் தற்செயலாகக் கல்பனாவின் படுக்கையைப் பார்த்தாள். அது காலியாக இருந்தது. பாத்ரூம் போயிருப்பாளோ என்று அவள் எண்ணிக் கொண்டிருக்கும் போது மாடிக் கதவு திறக்கப்பட்டது. மாடியிலிருந்து வந்தவனைக் கண்டதும் கனகம் திடுக்கிட்டு விட்டாள்,

முனியாண்டி!

நடு நிசி நேரத்தில் எப்படி வீட்டுக்குள் வந்தான்?

முனியாண்டி தெரு வாசல் கதவைத் திறந்து ''கதவைத் தாள்போட்டுக்கிடுங்க'' என்று சொல்லிவிட்டு இறங்கிச் சென்றான். சிறிது நேரம் கழித்துக் கல்பனா இறங்கி வந்தாள். தாயின் கூரிய பார்வையைக் கண்டு சிறிதும் கலங்காமல் கல் போல் நின்றாள்.

''இது உனக்கே நல்லா இருக்கா?''

''நல்லது எதுவுமே எனக்கு நடக்கல்லே.''

''முனியாண்டி இங்கே எப்படி வந்தது?''

''நான்தான் வரச் சொன்னேன்.''

''நீயா?''

''இல்லேன்னா லாட்ஜுக்குப் போக வேண்டி யிருக்கும். எத்தனை நாள் ஒளிஞ்சு ஒளிஞ்சு லாட்ஜுக்குப் போய்க் கொண்டிருக்க முடியும்?''

''அப்படின்னா?''

''அவர் கூட மதுரைக்குப் போனதுமே முடிஞ்சு போன விஷயம். உனக்கும் தெரியட்டுமேன்னுதான் வீட்டுக்கு அவரை வரவழைத்தேன்.''

''உன் மனசு கெட்டுப் போகுமின்னு நான் நினைக்கவே யில்லே.''

''மனசுன்னு ஒண்ணு இருந்தாத்தானே கெட்டுப் போறதுக்கு? ஜெகன் மீது ஆசைப் பட்டேன். நடக்கல்லே. நீ ஒரு பணக்காரனுக்குக் கட்டி வைக்கணும்னு என் மனசை மாத்தினே. அதுவும் நடக்கலே. என் தலை எழுத்து இப்படித்தான் போகணும்னு இருக்கு. அம்மா! இன்றைய நம் நிலை என்ன? நம் குடும்பத்தின் உயிர்நாடியே அவர் கையில் தான் இருக்கு. நான் வளைஞ்சு கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம். இதில் என் மனசுப் படி நடக்கறதுக்கு ஒண்ணுமே இல்லே.'' கல்பனா எல்லாம் துறந்து சொன்னாள்.

சற்று நேரம் சிலையாகிப் போன கனகத்தை ''அம்மா'' என்று அழைத்தான், ஜெகன்.

அவனை நிமிர்ந்து பார்க்கவே கூசினாள். இன்று அவன் இருக்கும் உயர்ந்த தோரணையைப் பார்த்ததும். அவன் எதிரில் நிற்கவே அவளுக்குச் சக்தி இல்லே.

''கல்பனா எங்கே இருக்கிறாள்? எப்படி இருக்கிறாள்?'' — ஜெகன் விசாரித்தான்.

கனகம் விரக்தியாகச் சிரித்தாள்.

''அவளுக்கென்ன மகராசி! காந்தி நகர்ல டீக்கடை முனியாண்டியோட வசதியாத்தான் வாழ்ந்துக் கிட்டிருக்கிறாள் எங்க கல்பனா'' என்ற அந்தத் தாய் குலுங்கக் குலுங்க அழுதாள்!

கல்கி

சந்தா விவரம்

★

	ஓராண்டு	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 46	ரூ. 23
இலங்கை (இந்திய நாணயப்படி)	ரூ. 64	ரூ. 32
இதர வெளிநாடுகள்	ரூ. 100	ரூ. 50

மானேஜர்

கல்கி, சென்னை-600 032

புரிசைவான் உலகில் பூவுலகு எல்லாம்
புண்ணிய உலகமாய்ப் பொலிந்தே
கரிசெலாம் தவிர்ந்து களிப்பெலாம் அடைந்து
கருத்தொரு வாழவும் கருத்தில்
துரிசெலாம் தவிர்க்கும் சுத்தசன் மார்க்கம்
துலங்கவும் திருவருட் சோதிப்
பரிசெலாம் பெற்றேன் எனக்குஇது போதும்
பண்ணிய தவம்பலித் ததுவே!

— *திருஅருட்பா*

சஞ்சய்-8

துர்க்மான்கேட் துயரச் சம்பவங்கள்

ஏப்ரல் 19, 1976.

டில்லி துர்க்மான்கேட். கசகசவென்று முஸ்லிம் ஜனங்கள் நிரம்பி வாழும் இடம். முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாகவே எலிவளைகள் போல் சந்து பொந்துத் தெருக்களில் அடைந்த குடியிருப்புக்கள்.

இவற்றை இடித்துத் தகர்க்க வேண்டும் என்று டில்லி வளர்ச்சி ஆணையம் தீர்மானித்துச் செயலில் இறங்கியது. சஞ்சய் காந்தியின் சேரி ஒழிப்புத் திட்டத்தின் கீழ் டில்லியில் கண்ணராவிக் குடியிருப்புக்கள் அனைத்தும் ஒழிக்கப்பட்டு அங்கே பூங்காவனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

''இங்கிருந்து பார்த்தால் ஜும்மா மசூதி தெரிய வேண்டும்'' என்று சஞ்சய் காந்தி சொன்னார் ஒரு மைலுக்கப்பால் நின்றுகொண்டு.

துர்க்மான் கேட் ஜும்மா மசூதிப் பகுதிகளில் சஞ்சய் காந்தியின் கருத்தடைத் திட்டமும் தீவிரமாக அமலாகி வந்தது. இதனாலும் முஸ்லிம்கள் மிகவும் சினந்துகொண்டிருந்தனர். கருத்தடைத் திட்டம் கட்டாயத்தின் பேரிலேயே நிறைவேற்றப்பட்டு வந்தது. போகிற, வருகிற இளைஞர்கள், ஏன் முதியவர்கள், மணமாகாத மைனர்கள் உட்பட, ஆட்களைப் போலீஸ் துணையுடன் பிடித்து வந்து வாசெக்டமி செய்து அனுப்புவது மாமூலாக இருந்தது.

டில்லியிலும் சுற்றுப்புற ராஜ்யங்களிலும் கட்டாயக் கருத்தடைத் திட்டமும், குடிசை ஒழிப்புத் திட்டமும் அதிகார வெறியின் கோர சொரூபத்தை வெளிப்படுத்தின.

டில்லியில் அழகிய அரசாங்கக் காலனிகள், சீமான்கள் வாழும் பேட்டைகளைச் சார்ந்த அந்த வீடுகளில் பெருக்கி, பாத்திரம் துலக்கி, சமைத்து உழைத்துக்கொண்டிருந்த ஏழைகள் சக்திக்குத் தகுந்தபடி தகரம், டின், இத்தான் இவற்றினால் குடிசைகள் அமைத்து வாழ்ந்து வந்தனர். இவர்களில் பெரும்பாலோர் ராஜஸ்தானியர். சேலத்திலிருந்து பிழைப்புத் தேடி வந்த தமிழர்கள்.

ஒரே இரவில் இந்தக் குடிசைகள் எல்லாம் தரை மட்டமாக்கப்பட்டன. உடைமைகளுடனும் குழந்தை குட்டிகளுடனும் லாரிகளில் ஏற்றப்பட்டு 15 மைல்களுக்கப்பால் வெட்டவெளியில் விடப்பட்டனர். அங்கே குடும்பம் ஒன்றுக்கு 25 சதுர கஜம் நிலம் ஒதுக்கப்பட்டிருந்தது. பின்னால் இது திரிலோக்புரி, கிச்சிரிபுரி என்று பெரிய காலனிகளாக உருவெடுத்தன. ஆனால் அச்சமயத்தில் அங்கே குடிதண்ணீர் வசதியோ, மின் விளக்கோ ஒன்றுமில்லை. 1975 ஆகஸ்டு மாதத்திலேயே ஆரம்பிக்கப்பட்ட இப்பணி 1976ல் ஏப்ரல் மாதம் வரை மழைக் காலத்திலும் குளிர் காலத்திலும் நீடித்தது. இடம் பெயர்க்கப்பட்ட கூலிக்கார ஜனங்கள், சொல்லொணாத் துயர்ப்பட்டனர். வேலைகளுக்குப் போய் வரவே அரை நாள் பஸ் பிரயாணம் தேவைப்பட்டது.



ஆனால் சொந்தமாக மனை கிடைத்தது லாபம். எமர்ஜன்சி கெடுபிடியும் சேர்ந்து எதிர்ப்பு ஏதும் இன்றிக் குடிசை ஒழிப்புத் திட்டம் நிறைவேறி வந்தது. ஆனால் துர்க்மான் கேட் முஸ்லிம் குடியிருப்புக்களைத் தகர்க்க ஆரம்பித்தது தான் வினையாக முடிந்தது.

ஒரு வாரமாகப் புல்டோசர்கள் தங்கள் குடியிருப்புக்களை நிர்த்தூளி செய்து வந்ததைக் கண்டு துர்க்மான் கேட் வாசிகள் கொதித்துக் கொண்டிருந்தனர். பிரதமரிடமும் மற்றும் அதிகாரிகளிடமும் பலமுறை முறையீடுகள் செய்தும் பலனில்லை. சஞ்சய் காந்தி தான் போட்ட உத்தரவை மாற்ற முடியும் என்று முஸ்லிம் தலைவர்கள் கும்பலாகச் சென்று கொடுமைகளை எடுத்துரைத்தனர். சஞ்சய் கூறிய பதில் அவர்களை ஏமாற்றத்துக்கும் அதிர்ச்சிக்கும் உள்ளாக்கியது.


''உங்களையெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும். ஒரு குட்டி பாகிஸ்தானை உருவாக்கியிருக்கிறீர்கள். உங்களுக்கெல்லாம் ஒரு பாடம் கற்பிக்க இதுதான் வழி'' என்று நிர்த்தாட்சண்யமாகப் பேசி அனுப்பி விட்டார்.

இதன் பிறகு முஸ்லிம்கள் சத்யாக்கிரகத்தில் இறங்கினர். ஏப்ரல் 19ம் தேதி அதிகாலையிலிருந்து குழந்தை, பெண்கள் உட்பட ஆயிரம் பேர் புல்டோஜர் வரும் வழியில் போய்

கி.கஸ்தூரிரங்கன்

உட்கார்ந்து கொண்டனர். பத்து மணியளவில் புல்டோஜர்களுடன் தகர்ப்புப் படை வந்தது. சத்யாக்கிரகிகள் இடத்தைவிட்டு நகர மறுத்து விட்டனர். ''எங்கள் மேல் ஓட்டிச் செல்லுங்கள்'' என்றனர்.

அதிகாரிகளுக்கு ஒன்றும் புரியவில்லை. இரண்டு மணி நேரம் வாக்குவாதம், மிரட்டல் ஒன்றும் பலிக்கவில்லை. இன்னும் ஆயிரக்கணக்கான முஸ்லிம்களும் சேர்ந்து கொண்டனர்.



திடீரென்று போலீஸ் மேல் கல் வந்து விழுந்தது.

பெரிய ரகளை உருவாகும் கட்டம். மாஜிஸ்டிரேட் ஆகாயத்தை நோக்கிச் சுடச் சொன்னார். இன்னும் அதிக கற்கள் வந்து விழுந்தன. கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசப்பட்டன.

பெண்களும் குழந்தைகளும் தலை தெறிக்க ஓடினர். அப்படியும் கல் வீச்சு நடந்து கொண்டிருந்தது. முடிவாக மாஜிஸ்டிரேட் துப்பாக்கிச் சூட்டுக்கும் உத்தரவிட்டார். ஆறு பேர் ஸ்தலத்திலேயே மாண்டனர். பலருக்குப் பலத்த காயம்.

அதன் பிறகு எதிர்ப்பு ஏதும் இருக்கவில்லை. ஆனால் துர்க்மான் கேட் சம்பவம் அவசரநிலை கெடுபிடிகளுக்கு எதிர்ப்பு இயக்கத்தின் ஆரம்பமாயிற்று.

பத்திரிகைத் தணிக்கை இருந்ததால் துர்க்மான் கேட் பற்றிய செய்திகளே வரவில்லை. ஆனால் வதந்திகள் இறக்கை கட்டிக்கொண்டு பறந்தன. ''முந்நூறு முஸ்லிம்கள் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி. முஸ்லிம் பெண்கள் கற்பழிப்பு, குழந்தைகள் படுகொலை. மசூதிகளை இடித்தார்கள்'' என்றெல்லாம் வதந்திகள் மீரட், மொராதாபாத், பரேலி என்று முஸ்லிம்கள் அதிகம் வாழ்ந்து வந்த இடங்களுக்குப் பரவிற்று. இது போதாதென்று கட்டாயக் கருத்தடையால் முஸ்லிம் இனத்தையே ஒழிக்கத் திட்டம் என்ற பிரசாரமும் வலுத்தது.

தொடர்ந்து ரகளைகள். போலீஸ் நிலையங்கள் தாக்கப்பட்டன. துப்பாக்கிச் சூடு. நூற்றுக் கணக்கானவர் மாண்டனர். இவையும் பத்திரிகைகளில் வெளியாகவில்லை.

கட்டாயக் கருத்தடைத் திட்டம் அதிகாரிகள், பள்ளிக்கூட ஆசிரியர்கள் போன்றவர்களை மிகவும் பாதித்தது. ஒவ்வொருவரும் ஐந்து பேர்களையாவது கருத்தடைக்கு அழைத்து வரவேண்டும். இல்லையெனில் சம்பள உயர்வு கிடையாது என்று உத்தரவு. டில்லி, உ. பி. ஹரியானா ராஜ்யங்களில் அமுலாகியது.

ரேஷன் கார்டு புதுப்பிப்பதற்குக் கருத்தடை செய்து கொண்டதற்கு அத்தாட்சி சீட்டு காண்பிக்க வேண்டும். மூன்று குழந்தைகள் உள்ள ஒவ்வொரு அரசாங்க ஊழியரும் கருத்தடை செய்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் உத்தரவுகள்.

கருத்தடைக்கு ஆள் பிடிக்க போலீஸ் குழுக்கள் கிராமம் கிராமமாக அனுப்பப்பட்டன. இதற்குப் பயந்து கொண்டு கிராமவாசிகள் பகல் இரவெல்லாம் வீடு திரும்பாமல் வயல்வெளிகளிடையே பதுங்கி இருந்தனர். பிப்லி என்னும் ஹரியானா கிராமத்தில் போலீசுக்கும் கிராம வாசிகளுக்கும் மூன்று நாள் கடும் போராட்டம் நடந்தது. நூற்றுக் கணக்கானவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இரையாயினர்.

இது பற்றிய செய்தியும் பத்திரிகைகளில் வெளிவரவில்லை.

இவ்வாறாக அவசர நிலை அலங்கோலங்கள் பரவலாக நிகழ ஆரம்பித்தன.

பத்திரிகைத் தணிப்போ சிரிப்புக்கிடமான வகையில் எல்லாம் அமுலாக்கப்பட்டது. மகாத்மா காந்தியின் பெயரோ பொன்மொழியோ அச்சடிக்கக் கூடாது என்றுகூடத் தணிக்கை விதி ஏற்பட்டது.

எல்லாவற்றுக்கும் பொறுப்பாளியாக சஞ்சய் காந்தி இருந்தார். அடாவடியான நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கென்று ஆமாம் சாமிகளாக இருப்பவர்களே முக்கிய பதவிகளில் நியமிக்கப்பட்டனர். சஞ்சயின் உத்தரவுக்கு மறுப்புத் தெரிவித்தவர்களுக்குப் பதவி மாற்றம். இன்னும் சிலபேர் மீது ஏதாவது ஒரு சாக்கில் போலீஸ் நடவடிக்கை, கைது.

மாருதி கார் விவரங்களை பார்லிமெண்டு கேள்விகளுக்காகச் சேகரிக்க முயன்ற நான்கு அரசாங்க சிப்பந்திகள் பல வகையில் பழி வாங்கப்பட்டனர். ஒரு தமிழ் அதிகாரி வீட்டில் போலீஸ் சோதனை போட்டது. தடயம் ஏதும் கிடைக்கவில்லை. அயல்நாட்டு விஸ்கி பாட்டில்களை ஒளித்து வைத்து சட்டம் மீறியதாக வழக்குத் தொடுத்தார்கள்.

ஸ்டேட் பாங்க் உயர் அதிகாரி ஒருவர் சஞ்சய் காந்திக்கு வேண்டியவரான ராஜஸ்தானி தொழிலதிபருக்கு கேட்ட அளவுக்குக் கடன் தர மறுத்தார். அவரை டிஸ்மிஸ் செய்யும்படி உத்தரவாயிற்று. பார்லிமெண்ட் சட்டப்படி இன்னும் இரண்டு வருடத்துக்கு மாற்றக் கூடாது என்றிருந்தது. அடுத்த வாரமே சட்டம் மாற்றப்பட்டது. ஸ்டேட் பாங்க் கஸ்டோடியனுக்கு வேலை போயிற்று.

அவசரநிலை ஆட்சி சஞ்சய் காந்தியின் ஆட்சி என்றே சொல்ல வேண்டும். ஆனால் கீழ் மட்டத்தில் நடந்த அதிகார துஷ்பிரயோகங்களுக்கும் பழிவாங்கல்களுக்கும் அவர் காரணம் இல்லை. உதாரணமாக கிராமங்களில் போலீஸ்காரர்கள் சிலர் சில வியாபாரிகளை மிரட்டிப் பணம் பறித்தனர். ''உன் பேர் மிசா லிஸ்டில் இருக்கிறது. ரூபாய் கொடுத்தால் விட்டு விடுகிறோம்'' என்று பயமுறுத்தினார்கள்.

மிசா கைதுகளை எதிர்த்துக் கோர்ட்டில் அப்பீல் செய்ய முடியாது என்று அவசர

நிலைச்சட்டம் இருந்தது சௌகரியமாகப் போயிற்று.

சஞ்சய் காந்தி இளைஞர் காங்கிரஸ் நிதிக்காக சினிமா நட்சத்திரங்கள் பாடகர்களைத் தருவித்து இசை விருந்து நடத்தினர். நேரம் இல்லை என்று கிஷோர் குமார் மறுத்தார். பலன் அவருடைய பாடல்களுக்கு ரேடியோவில் தடை. பல வாரங்கள் நீடித்த இந்தத் தடை கிஷோர்—குமார் மன்னிப்புக் கேட்டு இலவசமாக ஒரு கச்சேரி ஒப்புக் கொண்ட பின்தான் வாபஸாயிற்று. இதன் பிறகு சினிமாக் கலைஞர்களெல்லாம் கூப்பிட்டபோது வரவேண்டும், அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வேண்டும் என்று ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்து வாங்கப் பட்டது.

இளைஞர் காங்கிரஸ் பட்டாளம் பெருகிய காலம். ஒரு ரூபாய் கட்டணம் செலுத்தி யார் வேண்டுமானாலும் அங்கத்தினராக லாம். இதன் காரணமாகத் தற்குறிகள், போக்கிரிகள், சூதாடிகள், குண்டர்கள் எல்லாம் சஞ்சயின் இளைஞர் காங்கிரஸ் அங்கத்தினர்களாயினர். இவர்களைப் போலீஸ் கைது செய்யத் துணிவில்லாமல் போயிற்று.

சஞ்சய் தலைமையில் இளைஞர் காங்கிரஸில் 50 லட்சம் பேர் அங்கத்தினராகச் சேர்ந்தனர். காங்கிரஸ் கட்சி செயலிழந்துபோய் இளைஞர் காங்கிரஸ் முன்னணிக்கு வந்தது. கட்சி நடவடிக்கை யெல்லாம் இளைஞர் காங்கிரஸே நடத்தியது. பணமும் அங்கேயே போயிற்று.

பணம் சேகரிப்பதற்காகப் பல இல்லு முல்லுகள். சஞ்சய் காந்தி அறிந்தோ அறியாமலோ சாவனீர் போடுகிறேனென்று லட்சம் லட்சமாகக் கம்பெனிகளிடமிருந்து வசூலித்தனர். ஒன்று கூட அச்சாகவில்லை.

சஞ்சய் காந்தியின் நடவடிக்கைகள் பலவற்றுக்கு விளக்கமே கிடையாது. என்றாலும் அவருடைய நோக்கங்கள் பல போற்றற்குரியவையே. ஆனாலும் அவர் பிடித்த பிள்ளையார் ஒவ்வொன்றும் குரங்காய் முடிந்ததற்குக் காரணம் அத்துமீறலான செயல் நடவடிக்கைகள்தாம்.

இந்தியாவின் ஏழைமைக்குக்காரணம் மக்கள் தொகைப் பெருக்கம் என்று அவர் சரியாகவே கணித்தார். கட்டாயக் கருத்தடைக்கும் தேவை இருந்தது. கொஞ்சம் கண்டிப்புடனும் பெரும்பாலும் நைச்சியத்துடனும் செய்ய வேண்டிய இப்பெரிய திட்டம் தாறுமாறாகச் செயல் பட்டதன் காரணமாகக் குடும்பக் கட்டுப்பாடு என்பதே மக்கள் மிரளும் கெட்ட வார்த்தையாயிற்று.

இதேபோல் குடிசை ஒழிப்புத் திட்டமும், நகர் அழகு நடவடிக்கைகளும் போற்றத்தக்க மாற்றங்களைத் தந்தன. ஆனால் இங்கேயும் மனிதாபிமானமற்ற செயல் முறை பெரும் கேட்டில் போய் முடிந்தது.

விலைவாசிகளைக் கட்டுப்படுத்தும் ஒரேவழியை சஞ்சய் காந்திதான் செயல்படுத்தினர்: பதுக்கலைத் தவிர்த்து, விற்பனைப் பொருளுக்கு விலை நிர்ணயம் செய்து கொள்ளை லாபத்துக்கு வழியில்லாத சீரான வியாபாரச் சூழ்நிலையை உருவாக்கினர். அதே சமயம் சஞ்சயைச் சார்ந்தவர்கள் இறக்குமதி ஏற்றுமதி லைசென்சுகளைப் பெற்றுக் கோடீஸ்வரர்களாகவும் முடிந்தது. சஞ்சயின் மாமியார் அம்தேஷ்வர் ஆனந்த் ஏற்றுமதி வியாபாரம் துவக்கிச் சில குறுக்கு வழிகளில் இறங்கியபோது 12 கஸ்டம்ஸ் அதிகாரிகள் கடமை தவறாமல் நடவடிக்கை எடுத்ததற்காகப் பழிவாங்கப்பட்டனர்.

அவசர நிலை முறைகேடுகள் அத்தனையும் பிரதமர் இந்திரா காந்தியின் கவனத்துக்கு வந்ததாகத் தெரியவில்லை. அவசர நிலையினால் நாட்டில் நிலவிய அமைதி, ஒழுங்குமுறை இவற்றை அவர் சிலாகித்துப் பேசினர்.

ஆனால் ஜனநாயகம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டு விட்டது என்று மேல் நாட்டுப் பத்திரிகைகள் அவரைத் தாக்கி வந்தது பிடிக்கவில்லை. பலவிதமான வதந்திகள் ஆட்சியின் பெருமையைக் குலைப்பதாக இருந்தன. வெளியே காணாத எதிர்ப்பு இரகசிய இயக்கமாக வலுத்தது.

மாநில முதல்வர்கள் சிலர் அவசர நிலையைப் பயன்படுத்திக் கொண்டு அதிகார வெறியிலும் துஷ்பிரயோகத்திலும் இறங்கி வந்ததும் பிரதமர் காதுக்கு எட்டியது.

மேலும் ஏராளமான அரசியல் தலைவர்களைக் காலவரம்பின்றிச் சிறையில் அடைத்து வைத்திருந்ததும் அவரைக் குற்ற உணர்வுக்குள்ளாக்கியது.

இவற்றுக்கெல்லாம் முடிவு தேடத் தேர்தல் நடத்துவது என்று தீர்மானித்தார். முதலில் சஞ்சய் காந்தி ஒப்பவில்லை. பிறகு தேர்தல் நடத்தினல் பார்லிமெண்டில் காங்கிரஸ் கட்சி முழுதும் தன் கைக்குள் வந்து விடும், முதியவர்களை அனுப்பிவிட்டு இளைஞர்களையே வேட்பாளர்களாக நிறுத்தி வெற்றி காணும் வாய்ப்பு இருக்கும் என்பதால் தேர்தலுக்கு இணங்கினர்.

தேர்தல் நடத்தினல் காங்கிரஸ் சுலபமாக வெற்றி காண முடியும் என்று உளவு இலாகாவும் தகவல் சேகரித்து அனுப்பியது.


1977 மார்ச் மாதம் தேர்தல் நடத்துவது என்று முடிவாயிற்று. அரசியல் சட்டத்தை மாற்றி ஓராண்டுக்குப் பிறகு தேர்தல் நடத்தலாம் என்று வசதி செய்து கொண்டிருந்தார். அம்முடிவை மாற்றிக்கொண்டு தான் அடிப்படையில் ஜனநாயகவாதி என்று காட்டிக்கொள்ள ஒரு வருடம் முன்னதாகவே தேர்தலுக்கு உத்தரவிட்டார். சிறை வைக்கப்பட்ட தலைவர்கள் விடுதலை செய்யப் பட்டனர். பத்திரிகை தணிக்கையும் தளர்ந்தது. சஞ்சய் காந்தியின் மேற்பார்வையில் காங்கிரஸ் வேட்பாளர் பட்டியல் தயாராகியது. அப்போது எதிர்பாராதவிதமாகக் காங்கிரஸ் கட்சியிலேயே ஜகஜீவன்ராம் குண்டு வெடித்தது. (தொடரும்)

மனைவி: ''நான் செஞ்ச கோத்சு எப்படி..?''
கணவன்: ''திகு!''
உ. ராஜாஜி



A+U படங்கள்

'சாருகேசி'



புதிய சென்ஸார் போர்டு அறிவிப்புப்படி பெரியவர்களோடு குழந்தைகளும் சேர்ந்து பார்க்கக் கூடிய படங்களுக்கு ஏ முத்திரையோடு யு முத்திரையும் கொடுக்கப் போகிறார்களாம். இதற்குப் பட அதிபர்களுக்கு என்ன Guide lines கொடுக்கிறார்களோ தெரியாது. ஆனால் குழந்தைகளோடு போகிற பெற்றோருக்குச் சில Guide lines:

திரையில் சில முத்தக் காட்சிகள் வருகிறபோது, நீங்கள் பாப்கார்ன் தின்றுகொண்டிருக்காதீர்கள்; பையனின் கண்களை அழுத்தமாக மூடுங்கள். மனைவியிடம் பெண்ணின் கண்களை மூடச் சொல்லவும். (இரண்டு குழந்தைகளுக்கு மேல் அழைத்துச் செல்வதானால் கையோடு பழைய பெட்ஷீட் அல்லது எட்டு முழ வேட்டி ஒன்று கொண்டு போகவும். எல்லாக் குழந்தைகளையும் சேர்த்துக் கூடாரம் போல் மூடிவிடவும்.) திடீரென்று கண்ணை மூடும்போது குழந்தைகள் அடம் பிடித்து அழலாம். அல்லது திமிறலாம். வீட்டில் அடிக்கிற மாதிரியோ, அல்லது சாதாரணமாக நண்பர்கள் வீட்டுக்குப் போய்ச் செய்யும் விஷமங்களுக்கு அடிக்கிற மாதிரியோ பளீர் என்று ஓர் அறை வையுங்கள். குழந்தைகள் நன்றாக ஊளை விடும். தியேட்டர் முழுதும் உள்ள குழந்தைகள் எல்லாம் ஊளையிட்டால் பெரியவர்கள் எப்படிப் படம் பார்க்க முடியும் என்று கேட்கலாம். திரையில் மேற்படி காட்சியைக் காணும் பார்வையாளர்களின் விசில் ஒலியோடு இந்த ஊளையும் சேர்ந்து கேட்கும்போது அத்தனை நாராசமாக இராது....

கதாநாயகன் கதாநாயகியின் முந்தானையைப் பிடித்து இழுத்து, பிறகு கட்டிப்

ஜானி

● (ர)ஜானி ஆரம்பத்தில் அலட்டாமல் (போலீஸ் உதவியோடு) லட்சத்தைக் கொள்ளையடித்தது போலவே படம் நம்மையறியாமல் நம் மனத்தைக் கவர்கிறது.

மஞ்சள் பத்திரிகை வாங்கிய unofficial அப்பாவின் கடன்களைத் தீர்க்க ஜானி (ரஜனி) கொள்ளைக்காரனாக மாறிப் பாடகி ஸ்ரீதேவியின் காதலுக்கு ஆளாகிறார். ஜானியின் மறு பதிப்பாய் பார்பர் வித்யாசாகர் (ரஜினி நம்பர் 2) எதிர்பாராமல் இரண்டு கொலை செய்ய, குழப்ப போலீஸ் ஜானியையும் வித்யாசாகரையும் இரவு பகலாய் ஓடவைக்கிறது. ஸ்ரீதேவியின் காதலை உணர்ந்த வி. சாகர் போலீஸில் ஜானியின் குற்றங்களுக்கும் சேர்த்து சரணடைய (தியாகம்) ஜானியும் ஸ்ரீதேவியும் கைகோக்கிறார்கள்.

நடிப்பில் ரஜினியை ரஜினி மிஞ்சுகிறார். கஞ்சன் ரஜினி வீட்டை ரெட்டைப் பூட்டில் பூட்டி வெளியே செல்கையில் செடியிலுள்ள பூக்களையும் எண்ணிவிட்டுப் போகுமிடம், வித்யாசமான இனிமை.

ஜானி கார் பெயிண்டை மாற்றுவதிலும், உயர்ந்ததைப் பார்த்ததும் மனம் மாறும் பச்சோந்திக் காதலி தீபாவை வி. சாகர் சிரிக்க வைத்து எதிர்பாராமல் கடுவதிலும் வீசுவது ஆங்கில வாடை.

ஜானியிடம் தன்னை மணக்கச் சொல்லுமிடத்திலும், வி. சாகர் தன் வீட்டில் ஜானியாகத் தங்கியிருக்கும் சமயங்களிலும் சிக்கனப் பேச்சில் ஸ்ரீதேவி 'சிக்'கென உயர்கிறார். கண்களில் காதல் வழிகிறது.

வினோரீட்டா பாட்டில் ரஜினி இல்லாத குழந்தையைக் கொஞ்சி, இல்லாத கண்ணடி போட்டுச் செய்யும் சேஷ்டைகளில் ஜில்ஜிலுப்பு இல்லாமலில்லை. சுபாஷிணி கௌரவமாய் வந்து ஆசைப் பார்வை பார்க்கிறார். திருஷ்டி பரிகாரமாய் தீபா.

வழக்கத்துக்கு மாறாக சுருளி 'ஏ' கலக்காமல் கலகலக்க வைக்கிறார். சாமிக்கண்ணுவாகு என். டி. ராமராவின் பெயரைக் கேட்டதும் எழுந்து சேவிக்கையில் சிரிப்பு வெடிக்கிறது. வித்யாசாகர் கோழிகளுக்கிடையே அறிமுகமாவதும், தீபாவிடம் கஞ்சத்தனமாய் உரையாடுவதும் நயமான நகைச்சுவை.


இளையராஜாவின் இசை காற்றில் ஆசையாய்த் தூது வந்து மனத்துக்குள் இனிமையாய் அதிர்கிறது. மிருதுவான பாடல்களில் மணம் மிதக்கிறது. அசோக்குமாரின் கேமரா 'ஷோக்'காய் தொட்டபெட்டாவில் புகுந்து விளையாடுகிறது. (உதவி சுஹாஸினி). மனுஷன் சும்மா பிரமிக்க வைக்கிறார்.

தம் 'பூட்டு' படத்தில் சானியைத் தொலைத்த மகேந்திரன் ஜானியில் தம் பாணியை மாற்றிவிட்டார். ஆமையாய் இருந்த இவர் டைரக்ஷன் ஜானியில் கொஞ்சமாய் முயலாகியிருக்கிறது. இடைவேளைக்குப் பிறகு இன்னும் வேகப்படுத்தியிருக்கலாம்.

ஒரு பொழுது போக்குப் படத்தில் சண்டைகள் இல்லாமல், கிளப் டான்ஸ் இல்லாமல் துணிப் பஞ்சம் இல்லாமல், மகேந்திரனும், இளையராஜாவும் முக்கியமாக அசோக்குமாரும் ஒரு ஆங்கிலப் படம் பார்ப்பது போன்ற பிரமையை உண்டாக்குகிறார்கள். ஜானியால ஜானிதான்.

–நளினி சாஸ்திரி





புரளும்போது உங்கள் பையன் ஆர்வத்தோடு திரையைப் பார்க்க முயலலாம். பையனைச் சீட்டுக்கு அடியில் இரு கைகளாலும் தள்ளி ஓர் அமுக்கு அமுக்குங்கள். பையனின் தலை கொஞ்சம் தெரிந்தாலும், சீட்டுக்குக் கீழே குனிந்து நன்றாக அமுக்கி, துளியும் தாமதியாமல் பையனின் சீட்டில் காலைத் தூக்கிப் போட்டுக் கொண்டு விடவும். (பையன் உங்களை விடப் பலசாலியாயிருந்து உங்களை ஒரு தள்ளுத் தள்ளினால், விழும்போது ஜாக்கிரதையாக விழவும்.)


சரி, கற்பழிப்புக் காட்சிகள் வந்தால் என்ன செய்வது என்று கேட்கலாம். மாஜிக் ஷோவில் கண்ணைக் கட்டும் கறுப்புத் துணி அல்லது பழைய கிழிசல் குடைத் துணியைக் கொண்டு செல்லவும். (பழைய குடைத் துணி இல்லாதவர்கள் ஒரு புதிய குடை வாங்கி உசிதம் போல் மனைவி, மாமியார் அல்லது மானேஜர் மீது உபயோகித்தால், குடையும் பழசாகும்; குடைத் துணியும் கிடைக்கும்.) காட்சி திரையில் வருகிற சமயத்தில் உடனே பாய்ந்து பையன் அல்லது பெண்ணின் கண்களைக் கறுப்புத் துணியால் இறுகக் கட்டிவிடவும். இப்படிக் கட்டும்போது பக்கத்து வீட்டுக்காரரின் மனைவியுடைய அல்லது குழந்தைகளுடைய கண்களைக் கட்டிவிடாதீர்கள். அப்புறம் சண்டைக் காட்சிகள் திரையில் மட்டுமல்ல, அரங்கிலும் ஆரம்பமாகிவிடும்.

—இத்தனை முன்னேற்பாடும் பலிக்கவில்லை என்றால் என்ன செய்வது என்று கேட்கலாம். பத்திரிகை ஆசிரியருக்குக் கடிதங்கள் எழுதலாம். வேறு என்ன செய்வது!



கர்நாடக மாநிலத்தில் உள்ள மணிப்பால் மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஒரு அறிக்கையில் இப்படிக் கூறியிருக்கிறார்கள்:— டாக்டர்கள் தங்கள் முடியை நீளமாக வைத்துக் கொள்ளாமல் குட்டையாகக் கட்டிங் செய்துகொண்டால் ஆஸ்பத்திரிகளில் பரவக் கூடிய தொற்றுநோய்க் கிருமிகளைக் கணிசமாகக் குறைக்கலாம். 53 சதவீத முடியானது கிருமிகளைப் பரப்புவதற்கு ஏதுவாக அமைகிறது.

- ஏ. சக்திவேல்



அத்தியாயம் 58

சுவர்க்கோழி

கவர்னர் மாளிகையில் அதுவும் அவர் அறையின் வாயிலில் காப்டன் மாக்ரே அத்தகைய துணிகரச் செயலில் இறங்குவானென்பதைக் கனவிலும் நினைக்காத ப்ரெளன் முகத்தில் மிதமிஞ்சிய அச்சம் நிலவியது. அந்த அச்சத்தையும் அச்சத்தின் விளைவாக ப்ரெளனின் உடலில் ஊடுருவிச் சென்ற நடுக்கத்தையும் கண்ட மாக்ரே லேசாக நகைத்ததோடு நில்லாமல் "தகுதிக்கு மீறிய அந்தஸ்தைப் பெறுபவர்களுடைய நிலைமையெல்லாம் இப்படித்தான்" என்றும் கூறினான் கையிலிருந்த ரிவால்வரை லவலேசமும் அகற்றாமல்.

வால்டர் ப்ரெளன் முகத்தில் சட்டென்று அச்சம் மறைந்தது. "தகுதிக்கு மீறிய அந்தஸ்தை யார் பெற்றார்கள்? கொடுத்தது யார்?" என்று வினவினான் கோபத்துடன்.

"பெற்றது நீ. கொடுத்தது ஹிஸ் எக்ஸலன்ஸி. நமது கவர்னர்" என்றான் மாக்ரே, ப்ரெளன் கோபத்தைச் சிறிதும் லட்சியம் செய்யாமல்.

ப்ரெளனின் கண்களில் குள்ளநரியின் தந்திரச் சாயை துளிர்த்தது. "கவர்னரின் முடிவுகளைப் பற்றி நீ கேள்வி கேட்கிறாய்" வாசகத்தை முடிக்கவில்லை ப்ரெளன்.

"நானல்ல கேட்பது" என்றான் மாக்ரே இதழ்களில் புன்முறுவலைப் படர விட்டுக் கொண்டு.

"வேறு யார் கேட்கிறார்கள்?"

"எல்லோரும் கேட்கிறார்கள். போர் அனுபவமற்ற குமாஸ்தாவை அவர் எப்படிப் பிரிட்டிஷ் கடற்படைக்குத் தலைவனாக நியமித்தார் என்று கேட்கிறார்கள்.. அதுவும் கனோஜி ஆங்கரே போன்ற இணையில்லாக் கடல் வீரனுக்கு எதிராக அனுப்பி ஏன் பிரிட்டனுக்குத் தோல்வியையும் நஷ்டத்தையும் சம்பாதித்துக் கொடுக்கிறார் என்றும் கேட்கிறார்கள்."

"எதிரியைப் புகழ ஆரம்பித்துவிட்டாய்."

"எந்த வீரனையும் புகழ்வேன். அவன் எதிரியாயிருந்தாலும் அதைப் பற்றிக் கவலையில்லை."

இதற்கு மேல் பதில் சொல்லத் தெரியாத ப்ரெளன் "நீ கவர்னருக்குத் துரோகி, பிரிட்டனுக்குத் துரோகி" என்று கூவினான்.

மாக்ரேயின் கண்கள் சினத்தைக் கக்கின. "இருவருக்கும் துரோகி நீதான். கனோஜியைப் பற்றி உண்மை நிலைமையைக் கூறாதது நீ செய்த முதல் குற்றம். உன்னால் கடற்படையை நடத்த முடியாதென்பதைச் சொல்லாதது இரண்டாவது குற்றம். தோல்வியடைந்து கவர்னர் கஷ்டப்பட்டுப் பெரும் செலவில் கட்டிய ப்ராம் போன்ற பல கப்பல்களைத் தொலைத்தும் இன்னும் நீ பதவியிலிருப்பது மூன்றாவது குற்றம். நீ செய்ததெல்லாம் உன்னை நம்பிய கவர்னரையும் நாட்டையும் காட்டிக் கொடுத்ததுதான். உன்னைப் பற்றி கவர்னருடன் நான் பேச ஏதாவது ஒரு சமயம் கிடைக்கும். அப்பொழுது அவரிடம் விரிவாகச் சொல்கிறேன்" என்றான் மாக்ரே. அப்பொழுதுதான் வால்டர் ப்ரெளன் தனக்கு விரித்த வலையைப் புரிந்து கொண்டான்.



கடல் ராணி

சாண்டில்யன்

''அந்தச் சமயம் உனக்கு இப்பொழுது கிடைத்து விட்டது'' என்ற குரலைக் கேட்ட மாக்ரே பனிச்சென்று திரும்பினான். திரும்பிய வேகத்தில் வாயிற்படிக்கு வெகு அருகில் நின்ற கவர்னர் மீது மோதிவிட்டுக் கீழே விழ இருந்த கவர்னரைத் தாங்கிப் பிடித்து நிற்க வைத்தான்.

கவர்னர் திடமாக நின்று தமது உடையைச் சரிசெய்து தட்டிவிட்டுக் கொண்டார். ''காப்டன் மாக்ரே! நீ சொல்ல வேண்டியதைச் சொல்லலாம்'' என்றார்.

''இன்னும் இவன் சொல்ல வேண்டியது என்ன இருக்கிறது?'' என்று ப்ரெனன் கேட்டான்.

கவர்னர் தமது கையசைப்பினால் ப்ரெனனை அடக்கினார். பிறகு இருவரையும் உள்ளே வரச் சொல்லி, தாம் மீண்டும் பழையபடி சாளரத்தருகே சென்று சாய்ந்து நின்று கொண்டார். மாக்ரே பேசலாம் என்பதற்கு அறிகுறியாகக் கையால் ஜாடை காட்டினார். மாக்ரே பேசவில்லை. ''முதலில் நமது கடற்படைத் தலைவர் பேசட்டும். அவர் தங்களுக்கு முக்கியமான செய்தி வைத்திருக்கிறார்'' என்றான் மாக்ரே.

அடுத்து கவர்னர் ப்ரெனனை கவனித்தார். ''என்ன விஷயம்?'' என்று விசாரித்தார்.

அதுவரை தைரியசாலியாக இருந்த ப்ரெனனுடைய கால்கள் நடுங்கின. ''யுவர் எக்ஸலென்ஸி!'' என்று துவங்கினான்.

''சொல்.'' கவர்னர் முகம் கடுமையாக இருந்தது.



ப்ரெனன் சங்கடப்பட்டான்.

''முதலில் இவனை நான் விசாரித்துவிட்டுத் தங்களிடம் அனுப்புகிறேன்'' என்றான்.

''என்னாலே விசாரிக்க முடியும். சொல்'' என்று கவர்னர் அடம் பிடித்தார்.

ப்ரெனன் விழித்தான் எப்படித் துவங்குவதென்று அறியாமல். அந்தச் சமயத்தில் மாக்ரேயே ப்ரெனனுக்குக் கைகொடுத்தான். ''யுவர் எக்ஸலென்ஸி! நீங்கள் என் பின்னால் வருவதற்கு முன்புதான் இந்தக் கோழியைச் சுட என் கைத்துப்பாக்கியை எடுத்தேன்'' என்று கூறினான்.

'''கோழி? யூ மீன்...'' என்று கவர்னர் திகைத்தார்.

''காக் (சேவல்)'' என்று பொருளை விளக்கினான் மாக்ரே.

''நான் கோழியல்ல'' என்றான் ப்ரெனன்.

''கவர்னரிடம் சதா கோள் சொல்லும் நீ யார்?'' என்று கேட்டான் மாக்ரே.

ப்ரெனன் கவர்னரைப் பரிதாபமாகப் பார்த்தான். ஆனால் ஏதும் பேசவில்லை. மாக்ரேயே பேசினான். ''எக்ஸலென்ஸி! உங்களிடம் நான் ஒரு ஒப்பந்தத்தை மறைத்ததாக இந்தக் கோழி குற்றம் சாட்டினான்.'' என்று.

''நான் கோழியல்ல'' என்று சீறினான் ப்ரெனன்.

''டஸ் நாட் மாட்டர் வாட் யூ ஆர். டெல் மி வாட் த மாட்டர் ஈஸ் (நீ எதுவாயிருந்தாலும் பாதகமில்லை. விஷயம் என்னவென்று சொல்)'' என்று கவர்னர் வினவினார்.

ப்ரெனன் பதில் பேசவில்லை. ''எக்ஸலென்ஸி! ஹி ஹாஸ் கால்ட் மி எ ட்ரெய்டர். ஹி மஸ்ட் ப்ரூவ் இட் ஆர் கில் மி ஸாடிஸ்பாக்ஷன் (இவன் என்னை ராஜத் துரோகி என்றான். ஒன்று அதை நிரூபிக்க வேண்டும். அல்லது என்னுடன் போரிட வேண்டும்)'' என்று மாக்ரேயே கூறினான்.

ப்ரெனனின் உடல் நடுக்கம் கண்டது. மாக்ரேயுடன் சண்டையிட்டால் கோழியைச் சுடுவது போல் தன்னைச் சுட்டு விடுவான் என்பதைப் புரிந்து கொண்டதால். ''ஐ நெவர் கால்ட் யூ ட்ரெய்டர் (உன்னை

நான் துரோகி யென்று அழைக்கவில்லை)'' என்றான்.

மாக்ரேயின் உயர்ந்த உருவம் மெள்ள ப்ரௌனை நெருங்கியது. ''யூ ராட்! ஹொய் நாட் டெல் த கவர்னர் தென, வாட் யூ வுட் ஸே இன் மை ஆப்ஸென்ஸ் (அடேய் எலி! நான் இல்லாதபோது கவர்னரிடம் சொல்லப் போவதை இப்பொழுதே சொல்'') என்று சீறினான் மாக்ரே ப்ரௌனை அதிகமாக நெருங்கி. அவனைக் கன்னத்தில் அறையக் கையையும் ஓங்கினான்.



ஆவியுலகத்தைப் பற்றிக் கொஞ்சம் துணுக்குகள் எழுதிக் கொண்டு வந்திருக்கேன், பிரசுரிக்கிறீர்களா? -ஜி. நடராஜன்

''ஸ்டாப் இட்!'' என்ற கவர்னரின் அதிகாரக் குரல் மாக்ரேயின் கையைத் தேக்கியது. ''காப்டன் மாக்ரே கம் அண்ட் ஸிட் டௌன் (இங்கு வந்து உட்கார்)''. என்ற அழைப்பும் கவர்னரிடமிருந்துவந்தது.

மாக்ரே திரும்பிப் பார்த்தான். தனக்கும் ப்ரௌனுக்கும் நடந்த உரையாடலின்போது கவர்னர் தமது நாற்காலியில் அமர்ந்து கைகளை மேஜையின் மீது ஊன்றிக் கொண்டு விட்டதையும் அவர் முகத்தில் தீவிர யோசனை உலாவுவதையும் கண்டான். அவர் கட்டளைப்படி அவருக்கு எதிரிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்தும் கொண்டான்.

பிறகு கவர்னர் ப்ரௌனை நோக்கி ''நௌ யூ கான் லீவ் அஸ் (இனி நீ எங்களை விட்டுச் செல்லலாம்'') என்றார்.

''நான் தங்கள்...'' என்று துவங்கினான் ப்ரௌன்.

''என் கடற்படைத் தலைவன்'' என்று வாக்கியத்தை முடித்த கவர்னர் ''அதனால் தான் நீ பிராணனை விடுவதை நான் விரும்பவில்லை. இந்த மாக்ரே துஷ்டன். உங்கள் இருவருக்கும் சண்டை நடந்தால். விளைவு உனக்கே தெரியும்'' என்றும் கூறினார்.

ப்ரௌனின் கோபம் தலைக்கேறினாலும், தனது பலவீனத்தையும் சற்று முன்பு தன்னை நோக்கிய துப்பாக்கியின் பயங்கர வாயையும் எண்ணி அந்த அறையை விட்டு அகன்றான். அவன் போனதும் கவர்னர் தமது நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து கொண்டார். ''நௌ டெல் மீ'' என்றார்.

மாக்ரே பதில் ஏதும் சொல்லவில்லை. தனது கோட்டின் உட்புறம் கையை விட்டு அதிலிருந்த ஒப்பந்தத்தை எடுத்து கவர்னரிடம் நீட்டினான். கவர்னர் அதை வாங்கிப் பிரித்துப் படித்தார். பிறகு திரும்ப அதை மாக்ரேயிடம் கொடுத்தார்.

''இதை எந்த இடத்தில் கையெழுத்திட்டாய்?'' என்று சர்வ சாதாரணமாக வினவினார்.

மாக்ரே உண்மையைச் சிறிதும் ஒளிக்காமல் சொன்னான். ''கனோஜியின் அரண்மனையில்'' என்று.

''நீ இந்தக் கடல் ராணியை நம்ப முடியுமா?'' கவர்னரின் அடுத்தகேள்வி எழுந்தது.

''முடியும்.''

''இந்த ஒப்பந்தத்தின்படி ஐந்து கப்பல்களுடன்தான் நீ போக வேண்டும்.''

''குறைந்த பட்சம் ஐந்து கப்பல்களுடன் என்று இருக்கிறது வாசகம்.''

''ஐ ஸீ.''

''எக்ஸ்யுவர் எக்ஸலன்ஸி! நான் ஐந்து கப்பல்களுடன் போனால் அவர்கள் கையாளாயிருக்க வேண்டும். பத்துக் கப்பல்களுடன் சென்றால், அதாவது அவர்கள் எதிர்பாராத பலத்துடன் சென்றால், நிலைமை வேறு.''

புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகக் கவர்னர் தலையை அசைத்தார். மாக்ரே தனது திட்டத்தை விவரித்தான். ''யுவர் எக்ஸலென்ஸி! நான் முதலில் ஐந்து கப்பல்களுடன் போவேன் ஒப்பந்தப்படி. மீதி ஐந்து கப்பல்கள் நான் புறப்பட்ட மறுநாள் புறப்படும். எதிரிகளுடன் நான் இணையும் போது ஐந்து கப்பல்கள் இருக்கும். காஸண்ட்ரா கைவசமானதும் எதிரிகளை மடக்கிப் பிடிக்கவும், அவர்கள் கப்பல்களை அழிக்கவும் மீதி ஐந்து கப்பல்கள் என்னுடன் சேர்ந்து கொள்ளும். ஐந்து புதுக் கப்பல்கள் போருக்குப் பிறகு களைத்து நிற்கும் எதிரிக் கப்பல்களை வளைத்துக் கொள்ளும். முடிவை நான் விவரிக்கத் தேவையில்லை'' என்று கூறினான்.

அத்துடன் நிற்கவில்லை மாக்ரே. தனது மடியிலிருந்து இன்னொரு காகிதத்தையும் எடுத்துக் கவர்னர் முன்பாக விரித்தான். கவர்னர் கூர்ந்து அந்தக் காகிதத்தில் கண்ட படத்தை ஆராய்ந்தார். அராபியக் கடலின் கடற் பகுதி அதில் வரையப்பட்டிருந்தது. ஐந்து பிரிட்டிஷ் கப்பல்கள் எதிரிகளைச் சந்திக்குமிடம், மற்றவை மறைந்து நிற்கும் குடைவரைப் பகுதிகள், எல்லாவற்றையும் விவரமாக வரைந்திருந்தான் மாக்ரே.

''எந்த இடத்தில் எதிரிகளுடன் மோதுவாய்?'' என்று வினவினார் கவர்னர்.

''இந்த இடத்துக்கு நமது எதிரிகளை, இல்லை, நண்பர்களை அழைத்து வருவேன். இங்கு அவர்கள் நம்மிடம் சிறைப்படுவார்கள். லா பூஷே, அனந்த், டெய்லர், இங்கிலண்ட், ஆல் ஆப் தெம், அதாவது இவர்களில் போரில் சாகாதவர்கள்'' என்றான் மாக்ரே.

மாக்ரேயின் விரல் பதிந்து நின்ற இடத்தை கவர்னர் கவனித்தார். ''விஜயதுர்க்கத்தின் சிறிது கீழே, சிந்து துர்க்கத்திற்குச் சிறிது மேலே. நல்லது நல்லது. நல்ல இடம் மாக்ரே! உன்னைப் பாராட்டுகிறேன்'' என்றார் கவர்னர்.


''எதிரிகளுடன் நான் செய்துகொண்ட ஒப்பந்தம்....'' என்றான் மாக்ரே நகைத்து. ''இந்த ஆண்டின் முதல்தர ஜோக் — நோ நோ. தட் ஈஸ் ராங் - ஐ ஷுட் ஸே அண்டிப்ளமாடிக் - ராஜதந்திரம்'' என்ற கவர்னர் மாக்ரேயுடன் சேர்ந்து நகைத்தார்.

கவர்னர் அறையின் சாத்தப்பட்ட கதவுக்கு அப்புறத்தில் நின்று அனைத்தையும் கவர்க்கோழி போல் ஒட்டுக்கேட்ட ப்ரௌன் இருவர் நகைப்பையும் கேட்டவுடன் கோபத்தால் முகம் சிவக்கப் படிகளில் பூனைபோல் இறங்கிச் சென்றான். (தொடரும்)

PHILIPS

இன்றைய உயர்சக்தி ஸ்டீரியோ ஸிஸ்டங்களில்

விட்டுப்போன இணைப்பு



...ஒரு ஹைஃபிடிலிடி, ஹை பர்ஃபார்மன்ஸ் ரெகார்டு பிளேயர். ஆனால் இப்போது, பிலிப்ஸ் ஜீஏ 242 மூலம், முன்பு விட்டுப் போனதைக் கேட்டு மகிழுங்கள்.

ஒரு மியூஸிக் ஸிஸ்டத்தில் மிக முக்கியமான ஓர் இணைப்பு ரெகார்டு பிளேயர் ...ஏனெனில் அங்குதான் இசையே தோன்றுகிறது. இப்போது பிலிப்ஸ் ஜீஏ 242-ஐப் பாருங்கள். அது ஹைஃபையில் DIN 45500 தரத்தைத் தாண்டி விட்டது. அதில் தொழில்துறை சிறப்புகள் உள்ளதால், ஒலிக் குலைவு அறவே தவிர்க்கப் படுகின்றது.

பெல்ட் ட்ரைவ் : தொழில்நுட்ப ரீதியில் மிகச் சிறப்பான ட்ரான்ஸ்மிஷன் ஸிஸ்டம் கொண்டதால், மோட்டாரின் அதிர்ச்சிகளை எல்லாம் தாங்கிக் கொள்ளுகிறது.



ஃப்ளோடிங் ஸஸ்பென்ஷன் : டர்ன்டேபிள், பிக்-அப்-ஆர்ம் ஆகியவை மெல்லிய ஸ்ப்ரிங்குகளின்மீது 'மிதப்பதால்', மோட்டார் அஸெம்பிளியிலிருந்து தனித்துஉள்ளன. எனவே ஒலி சம்பந்தப்பட்ட ஃபீட்பேக் தவிர்க்கப்படுகின்றது.

எலெக்ட்ரானிக் மூளை : இது ஜீஏ 242-ன் மோட்டாரைக் கட்டுப்படுத்துவதால், வோல்டேஜ், ஃப்ரீக்வென்ஸி மற்றும் தட்பவெப்ப நிலையில் மாறுபாடுகள் இருந்தாலும், சரியான வேகத்தை உறுதி செய்கிறது. தவிர, 1 கிலோ எடையுள்ள ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் சுழல் தட்டு சக்தி வாய்ந்த வகையில் சமநிலைப் படுத்தப்பட்டுள்ளதால், அது வேகத்திலுள்ள சின்னஞ் சிறிய மாறுபாடுகளுக்கும் ஈடுகொடுக்கிறது. (wow and flutter <.12%)

சூபர் மி ஹைஃபை கார்ட்ரிஜ் : முழு ஃப்ரீக்வென்ஸியையும் கச்சிதமாகப் பிரதிபலிக்கச் செய்து (20 Hz—20 KHz) தெள்ளத் தெளிவான சிறந்த ஒலி தருகின்றது.



ஹைட்ராலிக் க்யூயிங் : பிக்-அப் ஆர்ம் இறகுபோல் மெதுவாக இறங்க, இந்த ஆர்ம் மிகவும் லேசாக ரெகார்டில் அழுந்துகிறது. (1.5 முதல் 3 கிராம் வரை சரிசெய்து கொள்ளலாம்) அதோடு, ரெகார்டு அனாவசியமாகத் தேயாமல் இருக்க, உள்ளமைந்த, சறுக்காத வசதி உண்டு.



OBM/3003 TM

hi fi HIGH FIDELITY INTERNATIONAL


பிலிப்ஸ் எலெக்ட்ரானிக் ஹைஃபை ஸ்டீரியோ டர்ன்டேபிள் ஜீஏ 242

பிலிப்ஸ்

பைகோ எலக்ட்ரானிக்ஸ் அண்ட் எலக்ட்ரிகல்ஸ் லி



டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்



தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
..போர்ட், பம்பாய்-400 023. ..போன்: 273831

''பூரண ஹரியும் பூரண ரசிகமணியும்'' என்ற மகுடத்துடன், கல்கி 10–9–67 இதழில் ராஜாஜி வழங்கிய அரியதொரு கட்டுரையின் முத்தாய்ப்பு வரிகள்:

''தமிழ்க் கவிக் காவலர் டி. கே. சி. என்ற பெயரைப் பெற்ற மகான், சிதம்பரநாத முதலியார் அவர்கள். இவர்தான் கல்கி கூட்டத்தின் குலபதியாக இருந்து பல்லாண்டு அப்பத்திரிகையையும் அதை நடத்தியவர்களையும் படிப்பவர்களையும் ஆசீர்வதித்து வந்தார். அவரைக் கல்கி மறக்கமுடியுமா? ஸ்ரீ ஜயந்தி என்றால் கண்ணன் பிறந்த நாள். டி. கே. சி. பிறந்த நாள்; என்றும் தமிழர் கொண்டாடும் நாள்.''

என் குருநாதர் டி.கே.சி

—சுந்தா



நந்த வனத்தில் ஓர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தான் ஒரு தோண்டி-அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி!

இதுதான் டி.கே.சி.யின் தனிக் குரலில், தனிப் பாணியில் என் செவிகளில் ஒலித்து என்னைச் சிலிர்க்க வைத்த முதல் பாடல். அதன் வரிகளை அவர் மடக்கி மடக்கித் திரும்பத் திரும்பப் பாடினார். அதன் பொருளும் வடிவமும் ஒன்றாய் இணைந்து ஓர் அற்புத உருக்கொண்டு மன அரங்கில் கூத்தாடிற்று. அந்தப் பாட்டில் வரும் தோண்டி உடைந்துதான் போயிற்று. ஆனால் அந்தப் பாடல் என்ற தோண்டி ஒரு பத்தரை மாற்றுப் பொற்குடமாய், உடையாமலும் மெருகு குறையாமலும் என் இலக்கிய அனுபவக் கொலுவிலே இன்றும் ஒளிவீசிக் கொண்டிருக்கிறது.

பொருத்தமானதொரு சமயத்தில்தான் அப்பாடலைப் பாடிக் காட்டினார் டி. கே. சி. 1935ம் ஆண்டின் இறுதியில் ஒரு நாள் மாலை திருநெல்வேலி டவுன் மாணவர் சங்கக் கூட்டம் ஒன்றில். அப்போது இளைஞராய் இருந்த டாக்டர் ஜஸ்டிஸ் மகராஜன், உமர்கயாத்தின் ருபயாத் கவிதை பற்றி ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தினார். அக்கூட்டத்துக்குத் தலைமை வகித்த ரசிகமணி — அண்மையில் தான் அவர் அறநிலைய ஆணையாளர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்னையிலிருந்து வந்திருந்தார். — மகராஜன் எடுத்துச் சொன்ன, '' களிமண்ணால் பிசைந்த உயிர்'', ''ஆதியிலே களிமண்ணால் ஆக்கியுள்ளான் யாவையுமே'' முதலிய மேற்கோள்களைக் குறிப்பிட்டு, ''அந்தப் பாரசீகப் புலவர் சொன்னது இருக்கட்டும். இதே கருத்தை நம் தமிழ்க் கவிஞர் ஒரு

வர் எப்படிச் சொல்லுகிறார் பார்ப்போமா?'' என்று மீசையைத் தடவி விட்டுக் கொண்டே கேட்டுவிட்டு, நந்தவனத்து ஆண்டியின் தலையில் தோண்டியை ஏற்றுவித்துக் கூத்தாடச் செய்தார்.

அதற்கு மறுநாளே என் சொந்த ஊரான மேலநத்தம் கிராமத்திலிருந்து பொருநை நதிக் கரை வழியே கிழக்கே நடந்து, மூன்று மைல் தொலைவில் அதே கரையில் வண்ணார் பேட்டையிலிருந்த ரசிகமணியின் வீட்டுக்கு நடந்தேன். அன்று நான் நடந்த நடை என் வாழ்க்கையின் நடையையே மாற்றி விட்டது. என்னை அந்த அண்ணல் தமது அன்புக்கு உரிய சீடர்களில் ஒருவனாய் ஏற்றுக்கொண்டார். (சீடனேயாயினும், வயதில் சிறியவனேயாயினும், என்னை அவர் சம அந்தஸ்துக்கு உரிய நண்பனாகவே பாவித்தார். அவருடைய சிறந்த பண்புகளில் ஒன்று அது.) ஆங்கில மோகினியின் மயக்கத்தில் இருந்த என்னை அவர் பைய பைய அதிலிருந்து விடுவித்துத் தமிழ்த் தாயின் தொண்டனாக மாற்றினார். அதுவரை ஆங்கிலத்திலும் தமிழிலுமாய் எழுதிவந்த என்னை, தாய் மொழியில் மட்டுமே எழுதச் செய்தார். அதில் நான் எழுதியதை யெல்லாம் பாராட்டிப் பாராட்டி ஊக்குவித்தார்.

வானொலிப் பணிக்காக என் கிராமத்தை விட்டு நான் பெயர்ந்ததற்கு முன்னால், சுமார் ஐந்தாண்டு காலம் என் குருகுல யாத்திரை தொடர்ந்தது. அந்த யாத்திரை எளிதாகவும் விரைவாகவும் இருக்கும் பொருட்டு ஒரு சைக்கிள் வாங்கிக் கொண்டேன். அது ஒரு லேடீஸ் சைக்கிள்! — தட்டாடை வேட்டியுடன் சவாரி செய்வதற்கு வசதியாய் இருப்பதற்காக. அதில் ஏறிப்போய் டி.கே.சி. வீட்டின் திண்ணைக்கு அருகே அதை நிறுத்திக் ''கிளிங்'' என்று மணி அடிப்பேன். ''வேடி சுந்தா வந்துட்டாக!'' என்று குரல் கொடுத்துக்கொண்டே ரசிகமணி வாசற்படிக்கு வந்து ஆசையுடன் என்னை வரவேற்பார். அடுத்து அவருடைய மனைவியாரும் குமாரர் செல்லையாவும் வரவேற்பார்கள். பிறகு பலகாரமும் காப்பியும் வரும். சாப்பாட்டு வேளை என்றால் சாப்பாடு; அல்லது அந்த வேளை வரை என்னை அமர்த்தி வைத்துக் கொள்வார் குருநாதர். சில சமயங்களில் என் குருகுல யாத்திரை குருகுல வாசமாகவே நீண்டுவிடும். தொடர்ச்சியாய் இரண்டு மூன்று நாள் அவருடைய குடும்பத்தில் ஒருவனாய்த் தங்கிவிடுவேன். விருந்தோம்பலை ஒரு கலையாகக் கொண்டவர்கள் டி.கே.சி.யும் அவருடைய குடும்பத்தாரும்.

முறையாகப் பாடம் சொல்வது அல்லது பாடம்கேட்பது என்பது கிடையாது. வட்டத் தொட்டி என்ற முற்றத்தில் எதிரெதிரே உட்கார்ந்து உரையாடும்போதோ, அருகருகே அமர்ந்து உணவருந்தும்போதோ, கூடத்தில் அல்லது தோட்டத்தில் உலவும் போதோ, தமிழ்க் கவிதையின் இதய ஒலியையும், அன்பே உருவான தம் இதயக் கனியின் சுவையையும் எனக்கு ஊட்டுவார் ரசிகமணி. அப்படி ஊட்டுவது நெஞ்சிலே நிறைந்துவிடும்; மனத்திலே நிலைத்துவிடும்.

நான் எம்.ஏ. பட்டதாரியோ, பி.ஏ. பட்டதாரியோ கூட அல்ல. ஆயினும் ஆர். ஆர். பட்டதாரி! அதாவது ரசிகமணியின் ரசிகன். இந்தப் பட்டத்துக்கு முற்றிலும் உரியவன்தான்நான் என்பதற்கு ரசிகமணியே ஒரு கடிதத்தில் சான்று வழங்கியுள்ளார்: ''என்னிடம் தமிழ் கற்க முன்வந்தவர்கள் பலர். அத்தனை பேரும் என்னைவிடத் தமிழில் விற்பத்தி உடையவர்கள். அது காரணமாக என்னிடம் கற்க வேண்டியது அவ்வளவாக ஒன்றும் இல்லை என்று வெகு சீக்கிரத்தில் தெரிந்து கொண்டார்கள். ஆனால் ஒருவர் மாத்திரம் என்னைவிட விற்பத்தி குறைந்தவர். அது காரணமாகவே என்னிடம் ஏதோ கற்கலாம் என்ற எண்ணம் உண்டு. அந்தப் பைத்தியக்கார ஆசாமிதான் சுந்தா!''

தெளிந்த மனசுடன், திறந்த மனசுடன் பக்தி மனசுடன் ரசிகமணியை அணுகினேன். அதனால்தான் அதை அவர் தம் இச்சைப்படி பக்குவப்படுத்த முடிந்தது. ஆயினும் முழுவதுமாய் அதை அவர் பக்குவப்படுத்த முடியாதபடி, வயிற்றுப் பிழைப்புக்காக வெகு தூரத்தில் உள்ள டெல்லிக்கு நான் செல்லும் படியாய் நேர்ந்து விட்டது. அங்கிருந்தும் அஞ்சல் வழியாய் அவரிடம் கற்றுக் கொண்டுதான் இருந்தேன். ஆயினும் அது நேர்முகக் கேள்விக்கு ஈடாகுமா?

சென்ற இடத்தில் வேறொரு குருவை நான் நாடவும் இல்லை; தானாகக் கற்க

கறிவேப்பிலை துலாபாரம்!



குருவாயூர் கோவிலில் ஓர் அதிசயமான பிரார்த்தனை நிறைவேற்றப்பட்டது. திருமதி கமலா ராஜ்மோகன் என்பவரை அவரது எடைக்கு நிகரான கறிவேப்பிலை இலைகளால் துலாபாரம் தூக்கினார்கள்.

திரு ராஜ்மோகன் மூன்று குழந்தைகளின் தந்தை. சில ஆண்டுகட்கு முன் அவர் இதயநோயால் பாதிக்கப்பட்டு, வேலையை இழந்து துன்புற்ற சமயம் அவரது நண்பர்களாலும் சுற்றத்தினராலும் விருந்தில் ஒதுக்கப்படும் கறிவேப்பிலை போல உதாசீனம் செய்யப்பட்டாராம். மனமுடைந்த அவர் தனக்கு மீண்டும் நல்ல நிலைமை வந்தால் கறிவேப்பிலையாலேயே துலாபாரம் செய்வதாகப் பிரார்த்தனை செய்து கொண்டார். தற்போது திரு ராஜ்மோகன் செல்வம் கொழிக்கும் அரபு நாடுகளில் வேலை செய்கிறார். தாம் வேண்டிக்கொண்டபடி, துன்பத்திலும், இன்பத்திலும் தம்முடன் எப்போதும் துணையாக நின்ற தம் மனைவியின் எடைக்குக் கறிவேப்பிலையால் துலாபாரம் நிகழ்த்தினார்.

தகவல்: ராஜலக்ஷ்மி கிருஷ்ணன்

ஆதாரம்: மாத்ருபூமி

கார்டு, கவர், ஆஸ்பிரின்!

தபாலாபீசுகளில் இனி கார்டு-கவர் ஸ்டாம்புகளுடன் அத்தியாவசிய மருந்துகளும் விற்கப்போகிறார்களாம்.

"இன்லண்ட் லட்டர் ஒன்னு கொடுங்க."

"இன்லண்ட் இல்லே. ஆஸ்பிரின் மாத்திரை இருக்கு. இரண்டு தரவா?"

"ஆஸ்பிரின் மாத்திரையிலே என்ன லெட்டர் எழுத முடியும்? இன்லெண்ட் லெட்டர் இருக்கா இல்லியா, அதைச் சொல்லுங்க!"

"அதான் இல்லேன்னேனே. இல்லாததையே இருக்கா இருக்கான்னு கேட்டா?"

"சரி, கார்டாவது ஒன்னு கொடுங்க!"

"கார்டு இல்லே. வயத்து வலி மருந்து தரவா?"

"அதையாரு கேட்டாங்க! சரி ஒரு கவர் கொடுங்க. தண்டம் முப்பத்தைந்து பைசா..."

"கவர்கூட இல்லே."

"கவரும் இல்லியா? சரி முப்பத்தஞ்சு பைசா ஸ்டாம்ப் ஒன்னு கொடுங்க. மளிகைக் கடையிலே ஒரு கவர் வாங்கிக்கறேன். அதுக்கு ஒரு அஞ்சுபைசா தண்டம்."

"முப்பத்தைந்து பைசா ஸ்டாம்ப் இல்லே. இருபத்தஞ்சு பைசா தான் இருக்கு."

"சரி, ஒரு இருபத்தஞ்சும் ஒரு பத்தும் கொடுத்துத் தொலையுங்க."


"பத்து இல்லே. இருபத்தஞ்சும் பதினைஞ்சும் தான் இருக்கு."

"ஐயோ, ஐயோ, உங்களோட பெரிய ரோதனையாப் போச்சு. தலைவலியே வந்துடும் போலிருக்கு..."

"அதுக்குத்தான் முன்னாடியே கேட்டேன், ரெண்டு ஆஸ்பிரின் மாத்திரை தரவான்னு!"

"கொடுங்க ரெண்டு ஆஸ்பிரின்! சீக்கிரம்! தலைவலிபோனாக்குது!"

-எஸ். விஸ்வநாதன்



முயலவும் இல்லே. டி. கே. சி. ஒருவரே குரு. அவர் கற்றுக் கொடுத்ததே போதும் என்றிருந்துவிட்டேன்.

> மன்னவன் கம்பன் பாட்டை
> மகிழ்ந்து நான் பாடும்போது
> அன்னவர் குரலும் ஊடே
> ஆர்த்தொலி செய்யக் கேட்பேன்.
>
> இன்னமுது உண்ணும் போது
> இன்னுரை கேட்கும் போது
> அன்னவர் இனிமைப் பண்பை
> அனைவரும் அறியச் செய்வேன்
>
> இன்னிசை கேட்கும் போது
> இனியன காணும் போது
> அன்னார் டி.கே.சியைப் போல்
> அழகுடன் அனுபவிப் பேன்.
>
> என்னுளம் நோகும் போது
> எண்ணங்கள் அலையும் போது
> அன்னவர் அமைதிப் பாங்கை
> அடைந்திட யோகம் செய்வேன்.

குற்றாலத் தமிழ் முனிவராம் என் குருநாதர், கவர்னர்-ஜெனரல் ராஜாஜியைப் பார்ப்பதற்காகத் தலைநகருக்கு வந்திருந்த போது அவரிடம் தெரிவித்தேன்: "தமிழ்க் கவிதையைப் பொறுத்தமட்டில் தாங்கள் எனக்குக் கற்றுக் கொடுத்தது என் ஆயுள் முழுதுக்கும் போதுமானதே. தாங்கள் பதிப்பித்துள்ள கம்பராமாயணம், முத்தொள்ளாயிரம், தாங்கள் தேர்ந்தெடுத்துச் சொல்லி, நான் எழுதி வைத்திருக்கும் ரத்தினப் பாடல்கள் — இவைகளைத்தான் நான் திரும்பத் திரும்பப் படித்துக் கொண்டும், பாடிக்கொண்டும் இருக்கிறேன்."

தில்லித் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் என் குருநாதருக்கு வரவேற்பு மடல் ஒன்றை வரைந்து வாசித்தளிக்கும் பெருமையை நான் அடைந்தேன். அந்த வரவேற்புக் கூட்டத்தில் அவர் கவிதை பற்றிய தமது தனிக் கருத்துக்களை எடுத்துச் சொன்னார். அவருடைய கவிதைத் தத்துவத்தை இதுவரை அறிந்திராதவர்கள் யாரேனும் இருப்பாராகில், அவர்களுக்காக அதை இங்கே அவருடைய நடையிலேயே தெரிவிக்கிறேன்:

கவி என்று சொல்லும்போது, ஏதோ அறிவுள்ள விஷயம் ஒன்றைச் சொல்ல வந்தது என்று, சாமான்ய ஜனங்கள் நினைக்கலாம். வேறு சிலர், அறிவுள்ள உணர்ச்சியைத் தெரிந்து கொண்டால் போதும் என்று எண்ணலாம். ஆனால், கவியில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது உணர்ச்சியானது பாவ உருவத்தில் வந்து வெளிப்படுகிறதா என்பதுதான். இந்த உருவத்தின் மூலமாகவே கவிஞருடைய உள்ளத்தில் எழும் உணர்ச்சியைப் பார்க்கிறோம். அப்படிப் பார்க்கும் போதுதான் கவிஞர் இதயத்திலுள்ள அற்புதமான சிருஷ்டி தத்துவம் நம்முடைய இதயத்துக்கு வந்து சேருகிறது. கவிஞருடைய சிருஷ்டி தத்துவத்தால், கவிஞர் இதயத்தில் பெருகிய ஆனந்தம், அவ்வனவிலும் நாமும் பங்கு கொள்கிறோம்.

பாடலைப் பாட வேண்டுமே ஒழிய வசனத்தைப் போல் வாசிக்கக் கூடாது. நாட்டியத்துக்கும் சாதாரண நடைக்கும் எவ்வளவு வித்தியாசமோ, அவ்வளவு வித்தியாசம் பாடலுக்கும் வசனத்துக்கும் இருக்கிறது. பாடலை இதயம் ஒட்டிப் பாடும் போது, நாமும் சிருஷ்டி தத்துவத்துக்கு உள்ளேயே போய்விடுகிறோம். அப்படிப் போனால்தான் கவியை உணர்கிறோம் என்றாகும். ஏன் சிருஷ்டி கர்த்தாவாகவே ஆய்விடுகிறோம். கலை உணர்ச்சி என்றாலே நாம் கூடு விட்டுக் கூடு பாய்கிறோம் என்றுதான் பொருள்."

ஸ்ரீ வெங்கடேஸ்வர (பாலாஜி) பஞ்சரத்னமாலா எல்.பி.3



ஏழுமலையான் கழலிணைகளில்

ஸ்ரீமதி எம்.எஸ்.சுப்புலக்ஷ்மியின்
ஏழிசைக் காணிக்கை

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் ஆதரவில் ஸ்ரீமதி எம்.எஸ். தொடுத்தளிக்கும் ஸ்ரீ வெங்கடேஸ்வர (பாலாஜி) பஞ்சரத்னமாலா எனும் ஐந்து நீண்ட நேர இசைத் தட்டுத் தொகுப்பில் மூன்றாவதாக, நடு நாயகமாக அமையும் இந்த இசைத் தட்டில் அவர் இறைவன் பால் இதயத்தைத் தொட்டு எழுப்பும் ஐந்து துதிகளை இசைக்கிறார். மஹாத்மாக்களான கவிஞர்கள் அருளிய இத்துதிகளில் நான்கு ஸம்ஸ்கிருதத்திலும், கடைசி ஒன்று ஹிந்தியிலும் ஆனவை.

கணேச பஞ்சரத்னம்:

ஐங்கரனாகிய ஐயன் கணேசனின் அருட் சிறப்புக்களைக் குறித்து ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதர்கள் பாடிப்பரவிய ஐந்து சுலோகங்கள்.

மதுராஷ்டகம்:

கண்ணனிடம் கனிந்த பக்தி நிலையிலே முக்தி பெற ஒரு சமய-தத்வ சம்பிரதாயத்தை நிறுவிய ஸ்ரீ வல்லபாசாரியார், கண்ணனைக் குறித்த சகல அம்சங்களிலும் செறிந்து நிற்கும் மதுரமாகிய ரஸத்தை எடுத்துரைக்கும் எட்டு சுலோகங்கள்.



கீத கோவிந்தத்தில் உள்ள தசாவதார ஸ்தோத்திரம்:

ராதா-கிருஷ்ணனின் காதல் காவியமாக புகழ்கொண்ட கீத கோவிந்தத்தின் முகப்புத் துதியாக ஸ்ரீ ஜெயதேவர் அருளிய இப்பாக்களில் ஒவ்வொரு பாட்டிலும் பூர்ணவதாரமான கண்ணனின் மற்ற பத்து அவதாரங்களில் ஒவ்வொன்றின் சரிதையும் ரத்தினச் சுருக்கமாகக் கூறப்படுகிறது.

நாம ராமாயணம்:

இசைத் தட்டின் இரண்டாவது பக்கத்தின் தொடக்கமாக அமைவது பிரசித்தி பெற்ற நாம ராமாயணம். ஸ்ரீமத் ராமாயணமாகிய ஸப்த காண்ட ஸாகரத்தின் ஸாரத்தை நூற்றி எட்டே வரிகளில் வடித்துத் தருகிறது. இதில் குறிப்பிடத்தக்க அம்சம் ஐயனின் பதினாலாண்டு வனவாஸத்தை வர்ணிக்கும் ஆரண்யகாண்டத்தை பதினாலே வரிகளில் உருவாக்கியதாகும்.

அனுமான் சாலிஸா:

தொடக்கத்தில் ஆனை முகனையும் முடிவில் ஆஞ்சநேயனையும் வழிபடும் மரபுக்கேற்ப கணேச பஞ்சரத்ன'த்தில் தொடங்கிய இசைத்தட்டு 'ஹனுமான் துதியோடு' நிறைவு பெறுகிறது. 'ராம சரிதமானஸ்' என்ற பெருமை வாய்ந்த ஹிந்தி ராமாயணத்தை அருளிய கோஸ்வாமி ஸ்ரீ துளஸிதாஸர் மாருதிப் பிரபுவின் மஹிமைகளைக் கூறி ஆக்கிய இந்த நாற்பதடித் துதி ஆறு ஹிந்துஸ்தானி ராகங்களில் அருமையான இசையுருக் கொள்கிறது..

வடநாட்டிலே பிரபலமாக வழங்கும் தோத்திரங்களைத் தென்னாட்டின் தலைசிறந்த இசை மேதையான ஸ்ரீமதி எம்.எஸ். பாடி பதிவு செய்த இவ்விசைத் தட்டு பாரதத்தின் கலாசார ஒருமைபாட்டுக்கு ஈடு இணையற்ற சின்னமாக உள்ளது.



பேதங்கள் அனைத்தும் கடந்த நாத வித்தையின் வித்தகத்துக்கு ஏற்ப ஸ்ரீமதி எம்.எஸ். கர்னாடக மரபுப் படியும் ஹிந்துஸ்தானி மரபுப் படியும் அமைந்த ரஞ்சகம் மிக்க முப்பது ராகங் களில் வடிந்துள்ள இந்த பக்தி ரஸத்தை பருகும் உள்ளமெல்லாம் பரவசமுறும்.

ரீங்காரமிடும் ராகங்கள்:

கணேச பஞ்சரத்னம்: ஹம்ஸத்வனி, மலஹரி, கல்யாண வஸந்தம், குந்தல வராளி, மத்யமாவதி

மதுராஷ்டகம்: மிச்ர கமாஸ்

கீத கோவிந்த தசாவதாரம்: பைரவ், பூபாலி, ஜயஜயவந்தி, மால்கௌன்ஸ், கேதார், பட்தீப், பெஹாக், துர்கா, பூர்யதனஸ்ரீ, ப்ருந்தாவன ஸாரங்க, பைரவி

நாம ராமாயணம்: யமன் கல்யாண், தர்பாரி கானடா, கலாவதி, சுத்த ஸாரங்க, திலக் காமோத், தானி, மிஸ்ர-காஃபி.

ஹனுமான் சாலிஸா: பிபாஸ், தேஷ், பஹார், மிச்ரமாண்ட், ஜோன்புரி, சங்கரா.

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் ஆதரவில் உருவான இந்த எல்.பி. இசைத் தட்டுகளை பாரதத்திலும் பார் எங்கிலும் உள்ள பக்த ரசிகர்களுக்கு வழங்குவதில் "தி கிராமபோன் கம்பெனி ஆஃப் இந்தியா" பெருமித முறுகிறது.



APRC 105-TAM

EMI The future is sound

THE GRAMOPHONE COMPANY OF INDIA LTD

HMV

TIRUMALA TIRUPATI DEVASTHANAMS

Exempt from Sales Tax in the State of Andhra Pradesh vide G. O. MS No.1159 REV (S) DEPT dated 17th Sep 1979.

ஆகஸ்ட் 19ம் தேதி அன்று புது டில்லியில் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களால் LP-3 இசைத்தட்டு வெளியிடப்பட்டது. இப்பொழுது நாடெங்கிலும் உள்ள HMV டீலர்களிடம் கிடைக்கிறது.

கடுகு பதில்கள்!

⌘ மஞ்சுதேவன், சென்னை-17
கே. ஜோசியத்தில் நம்பிக்கை உண்டா?
ப: முன்பு இல்லாமல் இருந்தது. 'சஞ்சய் காந்திதான் அடுத்த பிரதமர்' என்று ஜோசியம் சொன்னவர்கள் இப்போது தரும் விளக்கங்களைப் படித்த பிறகு இவ்வளவு விளக்கங்களுக்கு இடம் கொடுக்கும் விஷயமான ஜோசியத்தில் எனக்கு அபார ''நம்பிக்கை'' ஏற்பட்டு விட்டது!

⌘ டி. லக்ஷ்மி ரெட்டி, வேலிடுபட்டி
கே. அமரர் கல்கியின் நகைச்சுவைக்கு சிறு சான்று?
ப: ஒரு மாபெரும் கூட்டத்தில் அவர் சொன்னது: எனக்கு அபார ஞாபக சக்தி உண்டு. பாருங்களேன், ஐம்பது வருஷத்துக்கு முன்பு எனக்குப் பெயர் வைத்தார்கள். இன்னும் அதை ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறேன்!

⌘ ஜயந்தி சண்முகம், சித்தரஞ்சன்
கே. கேள்விகளைவிட தங்களுடைய பதில்கள் சுவையாக இருக்கின்றன. என் கேள்விகளுக்குப் பதில் அளிக்க, நான் தங்களுக்கு வைத்த ஐஸ் போதுமா?
ப: ஐஸ் மட்டும் வைத்தால் எப்படி? எலுமிச்சம் பழமும், சர்க்கரையும் வைத்தால் ஜூஸ் பிழிந்து சாப்பிட்டுவிட்டு 'ஜூஸி'யாகப் பதில் சொல்வேனே!

⌘ என். அருணாசலம், பெங்களூர்-23
கே. உறவின் கைதிகள், ஜெயலலிதா எழுதும் சொந்தக் கதையா?
ப: சொந்தமாக எழுதும் கதை.

⌘ எச். சுப்பிரமணியன், சென்னை-33
கே. கப்பல்களின் பெயருக்கு முன்னால் எஸ். எஸ்., எம். வி. என்று போடுகிறார்களே அவை எதைக் குறிக்கின்றன.
ப: எஸ். எஸ். என்பது ஸ்டீம் ஷிப் என்பதையும் எம். வி. என்பது மோட்டார் வெஹிகிள் என்பதையும் குறிக்கின்றன.

⌘ எஸ். கணபதி சுப்பிரமணியன், விழுப்புரம்
கே. கார்ட்டூனிஸ்ட் ஸ்ரீதர், நாடக டைரக்டர் சந்திரசேகரன், தொடர் பாணிதரன் - உங்களைக் கவர்ந்தவர் யார்?
ப: கார்ட்டூனிஸ்ட் ஸ்ரீதர். மாலிக்குக்கு அடுத்தபடியாக அழுத்தமான கார்ட்டூன்களைப் போட்டவர் ஸ்ரீதர்தான்.

⌘ ராதா நாராயணன், கல்கத்தா-29
கே. வரதட்சிணை கொடுமை படித்தவர்களிடமும் தாண்டவமாடுகிறதே?
ப: படித்தவர்களிடம்தான் சற்று அதிகமாக உள்ளது என்பேன். ஓர் உண்மைச் சம்பவத்தைச் சொல்லட்டுமா? தன் பெண்ணுக்கு நிறைய சீர் எல்லாம் செய்து ஒருவர் கல்யாணம் செய்து வைத்தார். பெண் வேலையில் இருந்தவள். மாப்பிள்ளை கேட்டான்: ''நீ எத்தனை வருஷமாய் வேலையில் இருக்கிறாய்?'' பெண் சொன்னாள்: ''நாலு வருஷமாய்.'' அப்படியானால் மாசம் 450 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தாய். நாலு வருஷத்தில் 21,600 ரூபாய் சம்பாதித்தாயே அது உன் பணம்தானே? உன் அப்பா எப்படி வைத்துக் கொள்ளலாம்? முதலில் அந்தப் பணத்தை வாங்கிக் கொண்டுவா'' என்று கூறி மனைவியைப் பிறந்தகம் துரத்திவிட்டார். பெண்ணைப் பெற்ற மனிதர் தலையை அடகு வைத்துப் பணம் திரட்டிப் பெண்ணிடம் கொடுத்து அனுப்பினார். பின்னே ரொம்ப ரொம்பப் படித்தவர்!

⌘ எம். ராஜேந்திரன், லால்குடி
கே. நரபலி சாமியாரை நேரில் கண்டால் என்ன செய்வீர்கள்?
ப: ''ஆ! நீதானா அந்தக் கயவன்! அடேய் உன்னை என்ன செய்கிறேன், பார். மக்களைப் பலி போடும் உன் குடலைக் கிழித்து வெளியே போடட்டுமா? அல்லது உன்னைக் கண்ட துண்டமாக வெட்டி ஏழு கடலில் உள்ள மீன்களுக்கு இரையாகப் போடட்டுமா? அற்பப் பதரே! நீசனே!'' என்றெல்லாம் மனத்திற்குள் கத்திக் கொண்டு பிடிப்பேன் ஓட்டம்.

⌘ வி. தேவதாஸ், பார்த்திபனூர்
கே. பக்கத்து வீட்டுக்காரர்களை ஏனோ ஆண்டவன் படைத்தான்?
ப: இது தெரியாதா உங்களுக்கு? ஆண்டவன் என்று ஒருவன் இருப்பதை நினைவுபடுத்துபவர்கள் நமது பக்கத்து வீட்டுக்காரர்கள்தான். அவர்கள் வீட்டில் கொள்ளை போனால் நாம் என்ன சொல்கிறோம்? ''நல்ல காலம். திருடன் நம் வீட்டுக்கு வரவில்லை.. கடவுள் காப்பாற்றினார்.'' என்கிறோம். அவர்களுக்கு லாட்டரியில் பரிசு விழுந்தது என்று வைத்துக் கொள்ளுங்கள். ''சே... நமக்கு விழவில்லை. இந்த ஆண்டவனுக்குக் கண் இல்லையே'' என்கிறோம். தனக்காகவே பக்கத்து வீட்டுக்காரர்களை ஆண்டவன் படைத்திருக்கிறான்.

பரிசு பெறுபவர்:

ராதா நாராயணன்
22-ஏ, அனில்ராய் தெரு,
கல்கத்தா-700 029.





ஒரு காகிதத்தின் மரணம்

சுப்ர. பாலன்



நினைத்துக் கொள்கிறேன். தேவையில்லாமல் போய்விட்ட பிறகு அவனை நினைத்துக்கொள்கிறேன். அவசரங்களின் இடையே அகப்பட்டு, வெட்டித்தனமான நெரிசலில் விழி பிதுங்கிச் செத்துப்போன அந்த ஒற்றைக் காகிதத்தை எண்ணி மனசுக்குள் அழுகிறேன்.

அதற்கு மேல் என்னால் செய்யக் கூடியது எதுவும் இல்லை. மேலே மேலே விழுந்து குவியும் காகிதச் சமுத்திரத்தில் அவனைப் பற்றிய நினைவும் பழசாகிப் போன ஒரு சின்ன அலைதான்.

தெருவில் நிற்கிற அவனுடைய குடும்பத்துக்கும் பிள்ளைகளுக்கும் யார் எப்படி, என்ன வகையான ஆறுதலைத் தந்துவிடப் போகிறார்கள்?

காலை நேரத்துச் சூடான செய்தித்தாளில் வெளியாகியுள்ள தற்கொலைச் செய்தி- ''புளிப்பல் பாளையம்... இன்ன வேலைபார்த்த சாமிவேலு வறுமை காரணமாய்த் தூக்குப் போட்டுக் கொண்டான்'' என்பதே செய்தி.

பத்தோடு பதினொன்றாய் இதை ஒதுக்கி விட என்னால் முடியாது. அலுவலகம் போனால், பழசாகிப்போன நோட்டுப் புத்தகத்தாளில் சாமிவேலு எழுதிய புகார் மனு கண்ணில் படத்தான் செய்யும். அவன் செத்துப்போய் விட்டாலும் அந்தக் காகிதத்துக்கு இன்னமும் உணர்ச்சி இருக்கிறது.

இனிமேல் மறந்துபோய் விட முடியாத அளவில் அவன் செத்துப்போய் என்னுள் ஊடுருவி விட்டதன் மூலம், எனக்கு விழிப்பிலும் உறக்கத்திலும் அவனே முக்கியமான எதிரியாகிவிட்டான்.

போன வாரம்தான் அவன் அலுவலகத்துக்கு வந்திருந்தான். போன வாரமும் என்றே சொல்ல வேண்டும். அது ஏழாவது முறை. ''ஆகட்டும் சீக்கிரம் கவனிக்கிறேன்'' என்று வழக்கம்போல் அவனுக்கு அன்றும் உறுதியளித்துவிட்டு வழக்கம்போல் என் மற்ற தலைபோகிற அவசரங்களில் மூழ்கத் தலைப்பட்டபோது—

''மன்னிச்சிடுங்க சார்! நான் இனிமே இங்கே வரவே மாட்டேன். ரிடையர் ஆகி மூணு வருசம் ஆயிடுச்சு. கஞ்சிக்கே காசில்லாமத் தவிச்சுக்கிட்டிருக்கோம். ஒவ்வொரு தபா வந்து ஒங்கிட்டயும் அதிகாரி கிட்டேயும் நின்னு என்னத்தைக் கண்டேன். பஸ் செலவு ஆவுறதுதான் மிச்சம். — ஒண்ணு மட்டும் யாவகம் வச்சுக்கோ. இன்னைக்குத் திங்கள்

> ''ஒரே ஒரு சாவு சோகநிகழ்ச்சி, லட்சக்கணக்கான சாவு புள்ளி விவரம்!''
> —ஸ்டாலின்
>
> ●
>
> ''கஷ்டம் என்பது, பெரும்பாலும், சோம்பேறித் தனத்துக்குப் பிறந்த மகன்!''
> —சாமுவேல் ஜான்சன்
>
> —சம்பத் குமாரி



ஸ்டேனோ : "மிஸ்டர் முரளி, நீங்கதானே புதுசா வந்திருக்கிறவரோர்க்கு? நீங்க எனக்குத் தந்த லவ் லெட்டரைத் தவறுதலாக மானேஜர் கையெழுத்துக்கு அனுப்பிட்டேன்!"

முரளி : "ஐயோ!..."

ஸ்டேனோ : "எதுக்குக் கவலைப் படறீங்க? டூப்ளிகேட் காப்பி இருந்தாக் குடுங்க... அது போதுமே!" -ஜி. நடராஜன்

கிழமை. இன்னும் பத்து நாள் பார்க்கறேன். கடோசி வாட்டியா. அதுக்குள்ளே உத்தரவு ஒண்ணும் வரலேன்னு....." என்று சிவக்க விழித்துக் கையை ஆட்டிச் சொன்னான்.

முழுதும் சொல்லாமல் அவன் முறைத்துக் கொண்டு போனபோது நான் இப்படி ஆகும் என்று நினைத்துப் பார்க்கவில்லை.

எனக்கு எத்தனையோ அவசரங்கள். வயிற்றுப் பிரச்னைகளையும் வாழ்க்கைப் பிரச்னைகளையும் கவனிக்க நேரமில்லாமல் வறட்டுத்தனமான புள்ளி விவரங்களில் பொழுது போய்விடுகிறது.

தீபாவளிக்கு மறுநாள் எண்ணெய் தேய்த்துக்கொண்டவர்கள் எத்தனை பேர் என்கிற மாதிரி ஏதோ ஒரு 'முக்கியமான' புள்ளி விவரத் தொகுப்பில் பத்து நாட்களாய்த் திணறிக் கொண்டிருந்தேன்.

ஒரு வழியாய், இடையிடையே கிடைத்த நேரங்களில் புளிப்பல் பாளையம் சாமிவேலு விவகாரத்தையும் அவனுக்குச் சாதகமாய் உத்தரவு வாங்கி அனுப்பியாகிவிட்டது. அந்தக் கடிதம் அவன் கையில் சேருவதற்குள் பாவி அவசரப்பட்டு விட்டான்.

சிவப்பு நாடா, மஞ்சள் நாடா என்று மற்றவர்கள் கிண்டல் பண்ணுகிற அளவுக்கு அலுவலகங்களை ஆக்கி வைத்தது யார்? முன்பு பத்துப்பேர் பார்த்த அதே வேலையைப் பலமடங்காய் வளர்த்து நூறு பேர் பகிர்ந்து கொள்கிற அவசியம் ஏற்பட்டது எதனால்? வேலை வாய்ப்புப் பெருக வேண்டும் என்கிற ஒரே குறிக்கோளில் செயல்படுகிற அலுவலகங்களில் தாமதம் தவிர்க்க முடியாததாகிறது.

இந்த விவரங்கள் யாருக்கும் புரியப் போவதில்லை. எனக்கே கூடப் பல நேரங்களில் மனம் அலுத்துவிடுகிறது.

"உங்கப்பா எப்பவும் பொன் மொழிகளை உதிர்க்கிறாரே என்ன விஷயம்!"

"வாய் பூரா தங்கப் பல்லு கட்டி இருக்கார்.."

- வெ. சீதாராமன்



இந்த மாதிரியான ஒரு குழப்படி நடைமுறைக்குப் பலியானவர்களுள் புளிப்பல் பாளையம் சாமிவேலுவும் ஒருவன். அவ சரக்காரன். இப்படியெல்லாம் கோழைத்தனமாய்ச் செயல்படுகிற இவனெல்லாம் எதற்குக் கல்யாணம் செய்து கொண்டு, பிள்ளை குட்டி என்று பெற்று—

என்ன வேண்டுமானாலும் கேட்கலாம். ஆனால் பாதிக்கப்பட்ட மனநிலை அவனுடையது. முகம் தெரியாத அவனுடைய மனைவியும் மகனும் நினைவில் நிழலாடுகிறார்கள். "நீதான் கொன்றாய், நீதான் எங்கள் குடும்பத்தை இந்தக் கதிக்கு ஆளாக்கினாய்" என்று அவர்களின் சுட்டு விரல்கள் நீண்டு வளர்ந்து என்னைக் குத்திக் கிழிக்கிற மாதிரி ஒரு பிரமை.

தவறு முழுமையும் என்னுடையது என்று சொல்ல முடியாவிட்டாலும் தாமதப்படுத்தியதில் நிச்சயமாய் எனக்குப் பங்கு உண்டு.

சாமிவேலு விவகாரமே ஒரு வழக்காக உருவெடுத்து, நானும் பதில் சொல்கிற மாதிரி ஒரு நிலை வந்தால், 'வேண்டுமென்று தாமதப்படுத்தவில்லை. மற்ற வேலைகளின் அழுத்தத்தில் கிடந்து விட்டது' என்று நான் சொன்னால் அது ஏற்கப்படவும் கூடும்.


ஆனாலும் அநியாயமாய் ஓர் உயிர் கூடு பிரிந்துபோய் விட்டது மட்டும் நிஜம். இந்தத் தவற்றை யார் சரிக்கட்ட முடியும்?

படுக்கையை விட்டு இன்னமும் எழுந்திருக்காமலே மறுபடியும் அந்தக் காலை நேரத்துச் செய்தித் தாளைப் புரட்டிப் பார்க்கிறேன். புளிப்பல் பாளையம் செய்திக்கு அருகே கொஞ்சமும் பொருத்தமில்லாமல் எவளோ ஒரு நடிகை திமிர்த்தனமாய் உடலை வளைத்து 'போஸ்' கொடுத்துக் கொண்டிருந்தாள்.

சாமிவேலு விவகாரத்தோடு சரி. இனி மேல் உயிர் சம்பந்தப்பட்ட விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்ற தீர்மானத்துடன் படுக்கையை விட்டு எழுகிறேன்.

ஆஸ்பத்திரியில் ஒரு நோயாளிக்குத் தவறான ஊசியைப் போட்டு, அல்லது ஆபரேஷனில் கவனக் குறைவால் ஓர் உயிரைச் சாகடிப்பதும், அலுவலகக் காகிதங்களின் மேலான அசிரத்தையால் இப்படி மரணம் நேரக் காரணமாவதும் ஒன்றுதான்.

காகிதங்களுக்கும் உயிர் உண்டு என்பது காலங்கடந்து புரிகிறது.





● எஸ். வி. வி. நூற்றாண்டுச் சிறப்பிதழ் அந்த நகைச்சுவை மன்னருக்குத் தக்கதொரு புகழ் மகுடமாய் அமைந்திருக்கிறது. அகஸ்தியனின் தயாரிப்பும் திரட்டும் தாளிப்பும், வெவ்வேறு புனைபெயர்களிலும் அனுமதேயமாயும் அவர் வழங்கியுள்ள விஷயங்களும் மிக நேர்த்தி. எஸ். வி. வி.யின் ஆற்றலைக் கண்டு கல்கி அவர்கள் வியந்தது போலவே, அகஸ்தியனின் ஆற்றலைக் கண்டு நான் வியக்கிறேன்.

சென்னை-17 சுந்தா

● நகைச்சுவை சிறப்பிதழை
அருமையான படைப்பு
என்பேன்,
அதனை அமைத்தவரின்
பாலைவனத் தலைக்குள்ளே
பெரும்
சோலைவனச் செழிப்பு
என்பேன்.*

சென்னை-23 சௌமியாதேவி

● அகத்தியன் தயாரித்த சிரிப்பு இதழ் மிகவும் மோசம்! நன்றாக இருக்கிறது என்று நாங்கள் சொல்லும்வரை பலமுறை அவரை எழுதச் சொல்லி 'இம்பொஸிஷன்' கொடுங்கள்.

திருவனந்தபுரம் மு. இரவீந்திரன்

● நகைச்சுவைச் சிறப்பிதழ் அருமைதான். ஆனாலும் ஒரே குறை. துணுக்குகள் அதிகமாக இடம் பெறாதது தான்.

சிவகாசி வி. வசந்தகுமார்

● யாருமே தலையங்கத்துக்குத் தேர்ந்தெடுக்காத ஒரு விஷயத்தை நீங்கள் தேர்ந்தெடுத்திருப்பது மட்டுமல்லாமல், கட்டுரை மூலம் சிந்திக்கவும் வைத்திருக்கிறீர்கள்.

கராத்தே மணிக்கு உடல் வலிமை இருக்கிற அளவுக்கு மன வலிமை இல்லையென்று தெரிகிறது.

உங்கள் தலையங்கத்தின் நாலாவது பாரா கொட்டை எழுத்துக்களில் இருந்திருக்க வேண்டும்.

பாளையங்கோட்டை ஏ.ஹெச்.கே. கோரி

● தொட்டிலையும் ஆட்டிவிட்டுப் பிள்ளையையும் கிள்ளி விடுகிற பழக்கம் நம் நாட்டில் தொன்றுதொட்டு நடந்து வருகிறது. நீர்மட்டும் அதற்கு விதிவிலக்கா என்ன? கராத்தே மணியிடம் கராத்தே பயிற்சிக்கான பாடங்களை வாங்கிப் பிரசுரித்துக் கொண்டே கராத்தே ஜோக்கையும் போடு

படங்கள் :
இடது : அ. குமார், பெங்களூர்-5
வலது : எஸ். சந்திரமௌலி, சென்னை-34

கின்ற பொல்லாத ஆளையா நீர்! அப்படி இருக்க கராத்தே மணி கோபமடைய மாட்டாரா? கல்கி அலுவலகம் வந்து உம்மையும் உம் அலுவலக நாற்காலி மேஜைகளையும் நொறுக்காமல் பயிற்சிக்கான பாடங்களைத் தராமல் நிறுத்தியதோடு விட்டாரே! அதற்காக சந்தோஷப்படும்!

மேலூறிஞ்சிப்பட்டு த. யோகநாயகன்

● அருமையான சித்திரங்களை மட்டுமே அளித்து வந்த ''கோபுலு''வை நகைச்சுவையாக 'துக்காராமை' எழுதவும் வைத்திருக்கிறீரே அதற்காக அகத்தியனை எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

பெங்களூர்-53 ''மலர்மடந்தை''

● உமாபதி வரைந்த நகைச்சுவை அட்டைப் படம் பணத்திமிரெடுத்த ஒருவரின் முகபாவனையை நன்கு பிரதிபலிக்கிறது. தந்தைகளின் சம்பாஷணையைக் கேட்ட சித்திரத்திலுள்ள மற்ற பாத்திரங்களின் முகபாவனைகளும் வெகு பிரமாதம்!

பரமக்குடி நா. ஆறுமுகம்


● இந்த வாரத்து 'கல்கி' இதழில் ஸ்ரீமத் ஆண்டவனுடைய படத்தை வெளியிட்டது என்னைப் போன்ற ஆயிரக் கணக்கான ஆண்டவனின் சிஷ்யர்களுக்கு மகிழ்ச்சியைத் தந்திருக்கும்.

திருக்குடந்தை ஆண்டவனின் அருளாசி சுரக்கும் கண்களின் ஒளியைப் பார்த்தாலே நம்முடைய துன்பங்கள் அகலும்.

சிதம்பரம் எம். கே. நாராயணன்

● கடைசிப் பக்கத்தில் வெளியிடப்பட்ட ''சனிங் நேரத்திலே...'' கவிதையான து நான் படித்த கோவை மாவட்டம் காங்கேயம் நகரிலுள்ள ராவ் பகதூர் சர்க்கரை மன்றாடியார் நினைவு நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் 1952வரை தமிழாசிரியராகப் பணியாற்றிய எனது மதிப்புக்குரிய திரு துரைசாமி ராஜா அவர்கள் புனைந்து 'குமுதம்' இதழில் வெளிவந்தது என்று பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

சென்னை-4 ஆர். கிருஷ்ணன்



007 பாலு
6
கதை: குமரன். சித்திரம்: விஜய்
ராம் குமாரின் மேஜையை பாலு ஆராய்ந்த போது.. ....
ஆ! இதோ ஒரு மினி காமிரா, பென்சில் மாதிரி பாக்கெட்டில் செருகிக் கொள்ளக் கூடியது.
பாலு, வெளிப்படையாக ...
ஒரு கர்சிப், பழனி விபூதி பாக்கெட், ஒரு பிஸ்கெட் பொட்டலம் இருக்கு ஸார், எடுத்துப் போகவா? ஸெண்டிமெண்டல் வால்யூ உண்டு!
ஓகே. ரசீது தந்துட்டுப்போ!
பாலு வீடு திரும்பியதும் தான் கிளப்பிக் கொண்டு வந்த காமிராவை ஓர் உறையிலிட்டு ஒட்டி ....
HVFல் ராம்குமாரின் மேஜையை ஆராய்ந்த போது கிடைத்த சாட்சியம் பாலு 24-7-80
காமிரா, நெ. 1 நன்னு காட்டுது. ஆக, உள்ளே பிலிம் இருக்கு. 4 படங்கள் எடுக்கப்பட்டிருக்கு. இதை அம்மாவிடம் சொல்லி பாங்க் லாக்கரில் வைக்கணும். பின்னால் சாட்சியமா பயன்படும். கர்சிப் முதலானவற்றை நாளைக்கு ராம்குமாரின் தாயிடம் சேர்ப்பிக்கணும்.
இதே நேரத்தில் பசவப்பாவுக்கு HVFல் வேலைசெய்யும் அவனுடைய கையாள் ஃபோன் போட்டு பேசிக் கொண்டிருக்கிறான்.
TELEPHONE
ஹலோ! அந்தப் பயல் இங்கே வந்திருந்தான். ஜி.எம். மோட சேர்ந்து ரிசர்ச் டிபார்ட்மெண்டுக்கு போனான். ராம்குமாரின் மேஜையைக் குடைஞ்சு பார்த்தானாம்.....


மறுநாள் காலை பாலு நாளிதழில் தான் கொடுத்த விளம்பரத்தைப் பார்க்கிறான்...
டைகர் நீ எங்கே இருக்கே?
சீக்கிரம் என்னிடம் திரும்பி வந்துவிடு! நான் வாலைச் சுருட்டிக்கிட்டு இருக்கேன்!
இப்படிக்கு உன் நண்பன்
அதே நேரத்தில்....
முதலாளி இந்த விளம்பரத்தைப் பார்த்தீங்களா? பயல் நம்ம கிட்டே இனி வாலாட்ட மாட்டானாம். பாவம், நாயை விட்டுடலாமா?
மூச்! பாஸ் பம்பாயிலிருந்து வரட்டும். அப்புறம் பார்த்துக்கலாம்.
பாலுவை நம்புவதற்கில்லை. சாது மாதிரி விளம்பரம் தந்துட்டு ஒற்று வேலை செய்கிறான். எனக்குத் தகவல் கிடைச்சுது. வாலை ஒட்ட நறுக்கினால் தான் ஆட்டாமல் இருப்பான்!
SPCA
BLUE CROSS
இதற்கிடையில்
விளம்பரத்தைப் பார்த்துட்டு அந்த அரக்கன்களின் மனம் இளகும்னு எதிர்பார்க்க முடியாது... இங்கே சாலே எனக்கு ஏதாவது உதவ முடியுமா பார்க்கலாம்....
பாலு டைகருக்கு நேர்ந்த கஷ்டத்தை மட்டும் எடுத்துரைத்து...
இது தான் சார் நடந்தது. நல்லவேளை வேனின் ரிஜிஸ்தர் நம்பரை டைரியில் குறிச்சுக்கிட்டேன்....
திருட்டுப் பசங்க, டைகரைக் கடத்திப்போக வந்தபோது நம்பர் பிளேட்டையே மாத்திக் கிட்டு கூட வந்திருப் பாங்க!
கடவுளே! அப்போ டைகரை நான் மறுபடி பார்க்கவே முடியாதா?
தொடரும்

அப்பொழுது எனக்கு நான்கு வயது இருக்கும். என் வீட்டுக்கு எதிரில்தான் பத்மினி அவர்கள் வீடு. அவர்கள் வீட்டுக்கு என்னை என் தாத்தா தான் அழைத்துச் செல்வார். ஒரு நாள் நான் டான்ஸ் பார்க்கப் போன போது பத்மினி ஆடிக்கொண்டே இருந்தார். இரவு மணி 11 ஆயிற்று. 12ம் ஆயிற்று. 'ட்ரூப்'பில் எல்லாரும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தார்கள். ஒரு மணிக்குத் தான் முடித்தார்கள். எனக்கோ அரைத்தூக்கம். ஆனால் ஆட்டத்தைப்பார்க்க வேண்டுமென்ற ஆசை. பத்மினி என் தாத்தாவிடம், ''இவள் தூக்கம் கெடுவதுடன் உங்கள் தூக்கத்தையும் ஏன் கெடுத்துக் கொள்ளுகிறீர்கள்? அவள் இங்கேயே தூங்கட்டும். காலையில் அனுப்புகிறேன்'' என்றார். அடுத்த நாள் மாலையில் நான் தாத்தாவிடம் ''மறுபடி ரிகர்சலுக்குப் போகலாமா?'' என்று கேட்டேன். ''என்ன நீ சும்மா சும்மா போக வேண்டு மென்கிறாயே. அங்கு போனால் நீயும் சினிமாவில் சேர்ந்துடுவே! பாட்டுக் கற்றுத் தருகிறேன். மரியாதையாகப் பாடு'' என்றார். எனக்கோ உள்ளூற

சலங்கை கட்டினார் பத்மினி

அங்கு போக வேண்டும் என்ற ஆசை. அப்போதே எனக்குச் சலங்கையினால் தாளம் போடும் முறை தெரியும். யாரிடமும் கற்றுக் கொள்ளாமலேயே சரியாகப் போட வந்தது. இதைப் பார்த்த பத்மினி ''தாளம் சரியாகப் போடுகிறாள். நீங்கள் ஏன் டான்ஸ் கற்றுக் கொடுக்கக் கூடாது?'' என்றார். தாத்தாவுக்கு இஷ்டமில்லை. ஆனால் பத்மினி ''நீங்க வேணாப் பாருங்க. அவ நல்ல டான்ஸராத்தான் வருவா'' என்றார்.

சனி, ஞாயிறு என்றால், ''லீவுதானே! என்னுடன் ஸ்டுடியோவுக்கு வா'' என்று அழைப்பார் பத்மினி. அப்படி போனபோது எம்.ஜி.ஆர். சிவாஜி போன்ற பெரிய நடிகர்களைப் பார்த்தேன். ஒரு நாள் நான் சொன்னேன், ''எனக்கு எம். ஜி. ஆர். என்றால் ரொம்பப் பிடிக்கும். நான் அவரைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன்'' என்று! ''அவர் என்ன ஒசத்தி?'' என்று யாராவது கேட்டால் ''அவர்தான் நன்றாகச் சண்டை போடுகிறார்'' என்பேன். வீட்டுக்கு வந்ததும் சுவரெலாம் ''எம்.ஜி. ஆர். எம். ஜி. ஆர்'' என்று எழுதுவேன். என் அண்ணனுக்கும் எம். ஜி. ஆர். என்றால் மிகவும் பிடிக்கும். உயரமான இடத்திலிருந்து குதிப்பான். முட்டியை உடைத்துக் கொள்வான். கேட்டால், ''இது எம்.ஜி. ஆர். ஸ்டைல்'' என்று கூறுவான்.

எனக்கு ஐந்தரை வயது இருக்கும். என் அம்மாவிடம், பத்மினி, ''வித்யாவுக்கு நல்ல டான்ஸ் வரும். பரத நாட்டிய ட்ரெஸ் போட்டா அழகாக இருக்கும்'' என்று சொல்லி ஆசையைக் கிளப்பி விட்டார். அப்பொழுது வைஜயந்தி மாலாவுக்கு நடன ஆசிரியராக இருந்தவர் கே. என். தண்டாயுதபாணி பிள்ளை. அவர்தான் தலைசிறந்த நடன ஆசிரியர் என்பதால் என் தாயார் அவரிடம் சென்று ''ஓரியண்டல் நடனம் வேண்டாம். பரத நாட்டியம்தான் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று ஆசை'' என்று கூறினார்.

ஒரு நல்ல நாளில் என் பயிற்சி ஆரம்பமாயிற்று. ஆரம்ப நாளில் பத்மினி எனக்கு ஒரு பவுன் வைத்துக் கொடுத்தார். அன்றிலிருந்து பத்தொன்பது வருடங்கள் ஒரே



டான்ஸ் மாஸ்டரிடம்தான் கற்றுக்கொண்டேன்.

சலங்கை கட்டும் விழாவின்போது பத்மினியே வந்து சலங்கை கட்டினார். அப்பொழுது மிகவும் வயதான என் பாட்டி அதாவது என் தந்தையின் தாயார் எனது நாட்டிய அரங்கேற்றத்தை நடத்தி விட வேண்டும் என்று கூறினார். ஒவ்வொரு வருடமும் அரங்கேற்றம் செய்யலாமென்று இருக்கும்போது ஏதாவது தடங்கல் வரும். காலில் அடி, ஜுரம் என்று இப்படி ஏதாவது ஒன்று. கடைசியில் எனது பதினோராவது வயதில்தான் அரங்கேற்றமே நடந்தது.

பரத நாட்டிய உடையில் என்னைப் பாட்டியின் எதிரில் நிறுத்தினார்கள். இதையெல்லாவற்றையும் பத்மினிதான் முன்னின்று எனக்குச் செய்தார். உடல் நலிவுற்றிருந்த பாட்டிக்காக இவை எல்லாம் செய்தோமே தவிர அடுத்த வருடம் முதலில் மறைந்த தென்னமோ என் தாத்தாதான்.

தாத்தா நான் நாட்டியம் ஆரம்பிப்பதற்கு முன்பு வேண்டாம் என்று கூறிய போதிலும் தொடங்கிய பிறகு, ''வித்யா நீ நன்றாக ஆடுகிறாய். நாட்டியத்தை நீ விடவே கூடாது. சினிமாவில் நடிப்பதெல்லாம் வேண்டாம். அப்படி நடித்தால் நாட்டியத்தை விட்டுவிடுவாய்'' என்று கூறினார். ஆனால் எனக்கோ சினிமாவில் நடிக்கவேண்டும் என்ற ஆசையும் உள்ளூற பொங்கியபடி இருந்தது. நான் சினிமாவில் நடிக்கவேண்டுமென்று சொன்னதைப் பத்மினி கேட்டிருக்கிறார். ''இன்னும் சிறிது பெரியவளான பிறகு நானே சொல்லி ஏற்பாடு செய்கிறேன்'' என்று கூறுவார் பத்மினி. அவர் வீட்டுக்கு அடிக்கடி சென்று அங்குள்ள மேக்கப் சாமான்களை எடுத்து முகத்தில் அப்பிக்கொண்டு வீட்டுக்குத் திரும்புவேன். தாத்தாவின் முன்னால் வேண்டுமென்றே வந்து நிற்பேன். அவர் அடிக்க வருவார். கைக்கு அகப்படாமல் நான் நழுவ அவர் திட்டுவார். நான் அடம் பிடிப்பேன். அவருக்கு நான் நடிகையாவதில் விருப்பமில்லை. சிறந்த பாடகியாக வரவேண்டுமென்று ஆசைப்பட்டார். பாவம், அவர் ஆவலோடு என்னிடம் எதிர்பார்த்த அந்த ஒன்றைத் தவிர மற்றவற்றில் நான் சோபித்தேன்!

அட்டை. வண்ணப்படம்: **ஜே. வி.**

பேட்டி: **சலன்**

சிந்தனைச் சிதறல்கள் — ஸ்ரீவித்யா





டிரைவர்: பெண் கண்டக்டரோட இனிமே போக முடியாது சார்...

ஆபீஸர்: ஏன்... என்ன தகராறு?

டிரைவர்: அப்புறம் என்ன சார்... ஒரு புடவைக் கடையைப் பார்த்தா போதும் உடனே விசிலடிக்கிறாங்க...

- பாபநாசம் நாகராஜன்

♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦

''ஜோக்'' மொழிகள்!

✖ பத்திரிகையை வாங்கியவனுக்கு ''ஜோக்''கு மேலே கண்.

✖ சிரிக்கத் தெரியாதவன் ''ஜோக்''கைக் கண்டு மிரண்டானாம்.

✖ ''ஜோக்'' அடிப்பவனுக்குச் சென்ற இடமெல்லாம் சிரிப்பு.

✖ எழுதியவன் ''ஜோக்''கைக் கெடுத்தான்; படித்தவன் சிரிக்காமல் கெடுத்தான்.

✖ சிரிப்பு வராத ''ஜோக்'', சிரிப்பு வரும் ''ஜோக்''கைப் பார்த்துக் கேலி செய்ததாம்.

✖ ''ஜோக்'' பந்தலில் சிரிப்பு மழை பெய்தது போல.

✖ நானே வரும் கதையை விட இன்று வரும் ''ஜோக்''கே மேல்.

✖ ''ஜோக்'' மேல் ''ஜோக்'' சொன்னால், சிரிக்காதவனும் சிரித்து விடுவான்.

✖ ''ஜோக்''கைக் கேட்டு சிரிக்காதவன் ஊரில், ''ஜோக்''கைக் கேட்டுச் சிரிப்பவன் பைத்தியக்காரன்! - தங்க. குஞ்சிதபாதம்

தோளில் சிறிய ஹோல்டால்.

இடுப்பில் பட்டையாய் முரட்டு பெல்ட். வலது தோள்பட்டையிலிருந்து ஆரம்பித்து இடுப்பை முத்தமிட்ட பெரிய துப்பாக்கி. ஒரு சம்பிரதாய ஹண்டர். பிரசாத்!

ஐம்பதடி தூரத்திலேயே அந்தக் காட்டுமிராண்டித்தனம்தெரிந்தது.

சிறிய இடைவெளியில் இரண்டு கம்புகள் —நான்கடி இருக்கும் — நடப்பட்டிருந்தன.

அதன் கீழே அக்கினியின் அரசு.

கம்புகளை இணைத்த ஒரு தடிக் கயிற்றில் ஏதோ ஒரு பிராணியின் மாமிச மிச்சம் வறுபட்டுக் கொண்டிருந்தது.

அங்கேயிருந்த ஐந்து பேர்களில் ஒருவன், அந்த இடத்தைச் சுற்றிச் சுற்றி வந்து ஒரு குச்சியினால் எல்லா இடங்களிலும் நெருப்புபடும்படி செய்து கொண்டிருக்க, பிரஸாத் அந்த அருவருப்பான காட்சியைக் கண்டான்.

மற்ற நான்கு பேரும் அட்டகாசமாய், விநோத ஒலியை எழுப்பிச் சிரித்தபடி அந்த மாமிசத்தைப் பிய்த்துப் பிய்த்து வாயில் திணித்துக் கொண்டிருந்தார்கள்.

அவள் வந்தாள்.

பிரஸாத் அ...ப்...ப...டி...யே நின்றான்.

அந்தக் குச்சியை எடுத்து நெருப்பைக் கிளறினாள். வாயால் ஊதினாள். கம்புகளில் கட்டியிருந்த அந்தப் பழைய மாமிசத்தை எடுத்துவிட்டு, தான் புதிதாய்க் கொண்டு வந்திருந்த — அப்போதுதான் செத்துப் போயிருந்த குட்டி முயல் — புதிய சமாசாரத்தைக் கட்டினாள்.

பார்த்துக் கொண்டே இருந்தான்.

என்ன அழகு! என்ன அழகு!

நகரத்து நாகரிகங்களையெல்லாம் தூக்கிச் சாப்பிடும் கிராமப்புற இயற்கைத்தனம். அலட்சியமாய் அணியப்பட்டிருந்த அந்த விநோத உடையில் வெளிப்பட்ட இளமையின் அட்டகாசம். காதிலும் மூக்கிலும் பெரிய பெரிய நகைகள்.

சலசல ஒலிகேட்டு அவள் நெருங்கினாள்.

டச்! மென்மை ஸ்பரிசங்கள்....

''யார் நீங்க? ஏன் இங்கே வந்தீங்க?'' படபடப்பு சத்தமாய்த்தெரிந்தது அவளிடம்.

கருக்கமாய்ச் சொன்னான் பிரஸாத்.

''அய்யய்யோ! இங்க ஒருத்தருக்கு நீங்க வந்திருக்கிற விஷயம் தெரிஞ்சாப் போதும். கூறு கூறு கூறுதான். திரும்பிப் போயிடுங்க.''

''சரி. இந்தக் காட்டுமிராண்டிகளைப் பற்றிக் கொஞ்சம் சொல்லேன். தெரிஞ்சுக்கிறேன்.'' சம்பிரதாயமாக உட்கார்ந்தான்.

''நீங்க ராத்திரி ஒரு பத்து மணி போல, இதே இடத்துக்கு வாங்க. எங்க கட்டுப்பாடுகள், கோட்பாடுகள், கடமைகள், தண்டனைகள், சம்பிரதாயங்கள் எல்லாத்தையும் சொல்றேன். இருட்டில் யாருக்கும் தெரியாது.''

ஓடினாள்.

பிரஸாத் அந்த மயக்கங்களிலிருந்து விடுபடுவதற்குள் மறுபடி திரும்பி வந்தாள். ''என் பேர் மஞ்சரி. நான் வரேன்.''

மிகச் சரியாய்ச் சொன்ன நேரத்துக்கு வந்தான்.



அந்த இருட்டு, அந்த இளமை, அந்தக் குரல் எல்லாவற்றையும் மீறி அவன் சொல்வதைக் கேட்கக் கஷ்டமாய் இருந்தாலும் பிரஸாத் தீவிரமாகக் கேட்டான்.

காட்டு மிராண்டிகள் உண்மையாகவே காட்டு மிராண்டிகள். மிருகங்களையும் பறவைகளையும் பச்சையாகவே சாப்பிடும் அவர்களுக்கு வெளி ஆள் யாராவது வேட்டையாட வந்தால் பிடிக்காது.

இந்த மஞ்சரிதான் யாருக்கும் தெரியாமல், தமிழ் எழுத்துக்களைக் கற்றுக் கொண்டு எழுதும் அளவுக்கு வந்திருக்கிருள். அவளுடைய அப்பாதான் அவர்களுக்கு ராஜா மாதிரி.

பிரஸாத் சிரித்தான். "மஞ்சரி! இந்த இடம், இந்த மனிதர்கள், செய்கைகள் எல்லாம் புதிசா இருக்கு. ஐ லைக் இட். நான் உங்கப்பா கிட்டப் பர்மிஷன் வாங்கிட்டு, வேட்டையாடப் போறேன்."

"அப்போ இவ்வளவுநேரம் நான் சொன்னதெல்லாம் செவிடன் காதில ஊதினது தா்னு? ஒண்ணும் புரியலையா?"

"நீ சொல்லாமச் சொன்ன ஒண்ணு புரிஞ்சது."

"என்ன?"

குனிந்து காதருகில் போய் ஏதோ சொன்னுன். அடுத்த நிமிடம் மஞ்சரியின் முகம் செம்பருத்தி.

அந்த டிராவலர் பங்களாவின் இருண்ட மூலையில் மரங்களின் போர்வையில் பிரஸாத்தின் பார்வையில் மயங்கிக் கிடந்த மஞ்சரி திடீரென்று சொன்னுள்:

"பிரஸாத்! எங்கப்பாவை நெனச்சா ரொம்ப பயமா யிருக்கு. அடுத்த வீட்டுப் பாத்திரத்தைக் கூடத் தொடாதவர், என்னை ஒரு அந்நியனுக்குக் கல்யாணம் பண்ணி வைப்பாரா?"

"டோன்ட் ஒர்ரி டார்லிங். வந்து, நான் ஒரு பத்திரிகை ரிப்போர்ட்டர், உங்க பழக்க வழக்கங்களைப் பத்திப் பெருமையா எழுதப் போறேன்னு உங்கப்பா கிட்டச் சொல்லுவேன். அவர் சரி சொல்வார். அப்புறம் பேட்டி இங்க வேண்டாம், என் ரூமுக்கு வாங்கன்னு டி. பி.க்கு அழைச்சுட்டு வருவேன். இங்க கொஞ்ச கொஞ்சமாப் பேசி, நம்ப காதலை உருக்கமாச் சொல்லி, அவர் சம்மதத்தைக் கேப்பேன்."

"வெறும் பகல் கனவு" என்று மஞ்சரி சிரித்தாள்.

"கவலைப்படாதே மஞ்சு! எப்படியாவது நம்ப கல்யாணம் நடந்தே தீரும்!" அந்த 'எப்படியாவது' அவனை என்னவோ செய்ய, கொஞ்சம் மகிழ்ச்சி, கொஞ்சம் சோகத்துடன் கிளம்பினுள் அவள்.



ஆசிரியர்: "பேம் மணி, உலகத்திலேயே முடி அலங்காரத்துக்கு பேர் போன நகரம் எது?"
மணி: "உரோமாபுரிதான்!"
ஜி. நடராஜன்

பாம்பநல்லா நுழையும்போதே அட்டகாசம்.

மானேஜர் பவ்யமாக ஒதுங்கி வழிவிட, திறந்திருந்த பிரஸாத்தின் அறையில் நுழைந்தான்.

"வாங்க, வாங்க உட்காருங்க."

கரடு முரடான காட்டுமிராண்டி உடை. தலையில் கலர் கலராய் ஏதோ சிறகுகள். இறகுகள். காதுகள், மூக்கில் வளையங்கள். கால்களில் மூர்ர்ர்ர்ரட்டுச் செருப்புக்கள். மந்திரவாதி போல் நிரந்தரமான பயங்கரம் கண்களில். பெயர் வேறு பயமாய்.

பிரஸாத் காட்டிய நாற்காலியை அலட்சியப்படுத்தி, "நான் அந்நியப் பொருட்களைத் தொடுவதில்லை," என்று சொல்லி, தான் கையோடு கொண்டு வந்திருந்த மான் தோலை விரித்து அதில் உட்கார்ந்தான்.

பாம்பநல்லாவுடன் பேச்சுக் கொடுத்த ஐந்தே நிமிடங்களில் பிரஸாத் உணர்ந்து கொண்டுவிட்டான்.

இவன் உயிரோடிருக்கும் கடைசி நிமிஷம் வரை மஞ்சரியை மணக்க முடியாது.

தான் ஏற்கனவே செய்திருந்த முடிவின்படி, "உங்க பழக்க வழக்கங்கள் எல்லாம் கொஞ்ச நாள்ள எங்க பத்திரிகையில் வரும். பெருமைப்படுத்தியே எழுதறேன்" என்று சொல்லிவிட்டு உள்ளே போனுன்.

"உம்" — சிங்க கர்ஜனையாய் முழங்கினுன் பாம்பநல்லா.

ஒரு டம்ளர் பாலுடன் வந்தான் பிரஸாத்.

"நான்தான் அந்நியப் பொருளையே தொட மாட்டேனே? போனுல் போகிறது. ஆசையோடு கேட்கிறுய். பாலுக்கு தோஷமில்லை. இதோ என்னுடைய கிண்ணம். இதில் ஊற்று பாலை." கட்டளை.

மனத்தில் சிரித்துக் கொண்டே பாலை ஊற்றினுன். அடுத்த விநாடி அந்தக் கிண்ணம் வெடித்துச் சிதறியது.

பிரஸாத் திடுக்கிட்டு, விழித்து அந்தப் பிரமையிலிருந்து வெளிவரு முன்—

பாம்பநல்லாவின் வெட்டரிவாள் பிரஸாத்தின் கழுத்தில் மிகச் சரியாய்த் தாக்கி தலை கீழே விழுந்து வழுக்கி ஓடியது.

பாம்பநல்லா பல்லைக் கடித்தபடி கர்ஜித்தான். "ராஸ்கல்! விஷம் கலந்த பாலைக் கலந்து என்னைக் கொல்லவா பார்த்தே? இந்தக் கிண்ணம் சாதாரணக் கிண்ணம் இல்லேடா. காண்டாமிருகத்தின் கொம்பில் செய்தது. விஷம் கலந்த எந்தப் பொருள் இதன் மேல் பட்டாலும் வெடித்துச் சிதறிவிடும். இந்தக் காட்டுமிராண்டி ஒண்ணும் மூளையில்லாதவன் இல்லை. அந்நியப் பொருட்களைத் தொடக்கூடாதுங்கற எங்கள் சட்டதிட்டம்தான் என்னைக் காப்பாற்றியது. வாழ்க நல்லாக் கடவுள்!"

நடந்தான். பிரஸாத் உடல் 'மஞ்சரி மஞ்சரி' என்று துடித்து அடங்கிக் கொண்டிருந்தது.

ஒரு பெண்ணுக்கு
தாய்வீடே போதுமென்றால்
தலைவனோடு
தலையணைச் சகவாசம்
தேவையில்லை....
—மு. மேத்தா — ''கண்ணீர்ப் பூக்கள்''

உறவின் கைதி...


அந்த மிராசுதார் பல ஆண்டுகளுக்கு முன் அதிகப் பெண் சபலம் உள்ளவராக இருந்தவராம். அவ்வப்போது ஒரு புதிய ஆசை நாயகியைத் தேர்ந்தெடுப்பார். நாள் முழுவதும் அவள் வீட்டிலேயே கிடப்பார். அவருடைய மனைவிக்கு (கமலாவின் தாயாருக்கு) அவருடைய நடத்தை ஆழ்ந்த வருத்தத்தை உண்டாக்கிற்று. கணவரின் போக்கை எண்ணி உள்ளம் நொந்து சதா சர்வ காலமும் கவலையாகக் காட்சி அளிப்பாள். அழுது கொண்டே இருப்பாள். அடிக்கடி கணவனுக்கும் மனைவிக்கும் இதைக் குறித்து வீட்டில் சச்சரவு ஏற்படும். வீட்டுக்கு வந்தவுடன் அவள் ஏதாவது தட்டிக் கேட்பாள், அவர் கண்டபடி திட்டுவார், அடிப்பார். இதையெல்லாம் சிறுமியாகிய கமலா கவனித்துக் கொண்டே வந்தாள். தாயாரிடம் அளவற்ற பாசமுள்ள கமலாவுக்கு, ''அப்பா எப்பொழுதும் அம்மாவை அழ வைக்கிறாரே! அம்மாவை இப்படிச் சித்திரவதை செய்து துன்புறுத்திக் கொண்டே இருக்கிறாரே!'' என்ற எண்ணம் வேரூன்றிப் போக, தந்தையிடம் மனத்தில் ஒரு துவேஷத்தை வளர்த்துக்கொள்ள ஆரம்பித்தாள்.

கமலாவுக்குப் பதின்மூன்று வயது இருக்கும். ஓர் இரவு, மிராசுதார் அளவுக்கு மீறிக் குடி போதையில் புதிய ஆசைநாயகியை வீட்டுக்கே அழைத்து வந்துவிட்டார்.

''வெளியே நீங்க என்ன செய்தாலும் இத்தனை வருஷமாச் சகிச்சுக்கிட்டேன். இப்போ என் வீட்டுக்குள்ளேயே இன்னொருத்தியை அழைச்சுக்கிட்டு வந்துட்டீங்களே! இதை என்னாலே எப்படிப் பொறுத்துக்க முடியும்? நீங்க செய்யறது உங்களுக்கே நல்லா இருக்கா?'' என்று அவர் மனைவி அழுது கொண்டே கேட்டாள்.

குடி போதையில் இருந்த மிராசுதார், என்ன செய்கிறோம் என்று தமக்கே புரியாத நிலையில் தம் மனைவியை அடித்துஉதைத்து, வாய்க்கு வந்தபடி யெல்லாம் இழிவாகத் திட்டிவிட்டார். எல்லாமே ஆசைநாயகியின் முன்னிலையிலேயே நடந்தது. கமலாவும் பயந்துபோன நிலையில், மறைவாக நின்று எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தாள்.

கணவர் சொந்த வீட்டுக்குள்ளேயே ஆசை நாயகியை அழைத்து வந்ததும் இல்லாமல், அவள் எதிரில் தன்னை இப்படி அவமானப் படுத்திவிட்டாரே என்று எண்ணும்போது, கமலாவின் தாயாரால் இந்தக் கொடுமையைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. அவமானம் தாங்காமல், அன்று இரவே தன் மீது மண் எண்ணெயை ஊற்றிக் கொண்டு தன்னையே எரித்துக் கொண்டாள்.



ஜெயலலிதா

அப்போது கமலாவுக்கு வயது பதின்மூன்று. உயிரினும் மேலாக நேசித்த தனது தாயின் இந்தக் கோர முடிவு, கமலாவின் இதயத்தில் பழுக்கக் காய்ச்சிய இரும்பால் சூடு போட்ட மாதிரி அழியாத தழும்பை ஏற்படுத்தி விட்டது. அருமைத் தாயின் தற்கொலைக்குக் காரணமாக இருந்த மிருகத்தனமான நடத்தை கொண்ட தந்தையின் மீது கமலாவின் நெஞ்சினுள் துவேஷம் நெருப்பாகப் பற்றி எரியத் தொடங்கிற்று.

மனைவியின் தற்கொலை உண்டாக்கிய அதிர்ச்சியில் மிராசுதார் உண்மையாகவே மனம் வருந்தித் திருந்தி விட்டார். அதன் பிறகு தமது தீய வழக்கங்கள் அனைத்தையும் துறந்தார். கமலாவுக்கு ஒரு நல்ல தகப்பனாக இருந்து, மகளின் நலனே இனி தம் வாழ்க்கையின் லட்சியமாக மேற்கொண்டார். தாயின் இழப்புக்குக் கமலாவுக்கு ஈடு செய்ய விரும்பினார்; மகளின் அன்பைப் பெறுவதற்கு ஆயிரம் முயற்சிகளைச் செய்தார். ஆனால் பலனில்லாமல் போய்விட்டது.

வெளிப்படையாகக் கமலா அதிகம் பேச மாட்டாள். ஆனால் மனத்துக்குள் தந்தை மீது அவளுக்கு இருந்த வெறுப்பு, துவேஷம், துளியும் தணியவில்லை. தணலாய் எரிந்து கொண்டே இருந்தது. நாளடைவில் தந்தை மீது இருந்த வெறுப்பு மொத்தமாக ஆண் வர்க்கத்தின் மீதே வெறுப்பாக மாறி விட்டது. ஆண்கள் என்றாலே மிருகங்கள் என்ற வெறுப்புணர்வை, துவேஷத்தைக் கமலா மனத்தில் வளர்த்துக் கொண்டாள். தன் வாழ்க்கையில் திருமணம் என்ற சொல்லுக்கே இடமில்லை என்று தானே முடிவு செய்தாள். மற்ற சாதாரண இளம் பெண்களைப்போல் சிரிப்பது, விளையாடுவது, உல்லாசமாக இருப்பது — எல்லாவற்றையும் தாயின் தற்கொலைக்குப் பின் விட்டுவிட்டாள். எப்போதும் நெஞ்சினுள் சுமையோடு, தீராத துயரத்தோடு, ஆண்கள் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்ற தணியாத நெருப்பாக இதயத்தைச் சுட்டெரிக்கும் உணர்வோடு வளர்ந்து பெரியவளானாள்.

இதையெல்லாம் மிராசுதார் வருத்தத்துடன் உணர்ந்தார். கமலாவை ஒரு சாதாரணப் பெண்ணாக மாற்ற எத்தனையோ முயற்சிகள் செய்தார் — நடக்கவில்லை. இருப்பினும் தந்தை என்ற முறையில் அவர் கடமையைச் செய்ய விரும்பினார்.

கமலாவுக்கு வயது பதினெட்டு நிரம்பியதும், அவளுக்குத் திருமணம் முடித்து வைக்க மிராசுதார் தீர்மானித்தார். இதைக் குறித்து ராஜீவுடைய பெற்றோருடன் பேசி அவனுக்கே கமலாவைக் கட்டி வைப்பதென்று முடிவு செய்தார். கமலா வெளியில் காண்பதற்கு அழகான பெண்ணாக மட்டும் தெரிந்தாள். அவளுக்குள் புதைந்து கிடக்கும் எண்ணங்களைப் பற்றி ராஜீவுடைய பெற்றோருக்கு எப்படித் தெரியும்?

திருமணம் ஆனபிறகு கமலா மாறிவிடுவாள் என்று மிராசுதார் நம்பினார். ராஜீவுடன் அவள் திருமணம் நிச்சயிக்கப்பட்டதை மிராசுதார் அவளிடம் சொன்னதும் கல்யாணமே வேண்டாம் என்று கமலா அழுதாள். புலம்பினாள். எரிந்து விழுந்தாள். மன்றாடிக் கேட்டாள். ஓயாமல் தந்தையுடன் வாதாடினாள், சண்டை போட்டாள். ஒன்றும் பலிக்கவில்லை. ''வயசுப் பெண்கள் எல்லோருமே இப்படித்தான் முதலில் சொல்வார்கள். திருமணம் முடிந்துவிட்டால், எல்லாம் சரியாகிவிடும்'' என்று மிராசுதார் முடிவாகக் கூறிவிட்டார் — அப்படியொரு நம்பிக்கையைத் தாமும் மனத்தில் வளர்த்துக்கொண்டிருந்தார்.

இதையெல்லாம் திருமணம் முடிந்த பிறகு, மிராசுதார் ராஜீவிடம் சொன்னார். ''மாப்பிள்ளை! என் பெண்ணோட மனோ பாவம் இப்படி ஆனதுக்கு நான்தான் காரணம். என்ன இருந்தாலும் அவ சின்னப் பொண்ணு. நீங்கதான் பொறுமையா அவளை வழிக்குக் கொண்டு வரணும். நடந்ததை யெல்லாம் ஒளிவு மறைவு இல்லாமல் சொல்லிவிட்டேன். ஆரம்பத்திலே அவ உங்க மனசு நோகும்படி நடந்துக்கிட்டாலும், தயவு செஞ்சு அவ குற்றங்களை மன்னிச்சு அவகிட்டக் கொஞ்சம் மென்மையா நடந்து கொள்ளுங்க. பொறுமையாயிருந்தீங்கன்னா, சீக்கிரமே அவ சரி ஆயிடுவான்னு நம்பறேன். அவளுடைய வாழ்வு உங்க கையிலேதான் இருக்கு. அவளை உங்ககிட்டே ஒப்படைக்கிறேன். கமலா எனக்கு ஒரே குழந்தை, தயவு பண்ணி அவளைப் பத்திரமாப் பார்த்துக்கங்க'' என்றார் மிராசுதார் உருக்கத்தோடு.

''உங்க மாமனார் அப்படிச் சொன்னதும் உங்களுக்கு எப்படி இருந்தது?'' என்று உஷா இப்போது கேட்டாள்.

''ஆரம்பத்திலே நான் ஏமாற்றப்பட்டேங்குற எண்ணமே ஏற்படலே, உஷா. கமலாவோட கதையைக் கேட்டவுடனே, அவமேலே எனக்கு முதல்லே அனுதாபம்தான் பிறந்தது. பாவம், இளம் வயசுலே அப்படிப்பட்ட கொடூரமான சூழ்நிலையிலே தாயை இழந்த ஒரு பெண், அப்படி ஆனதிலே ஆச்சரியப்படறதுக்கு ஒண்ணுமில்லைன்னு நினைச்சேன். ரொம்ப ஸென்ஸிடிவ் கர்ல், அவளை மென்மையா, பொறுமையோடு கையாண்டா அவளைச் சரிப்படுத்திவிட முடியும்னு நம்பினேன்'' என்றான் ராஜீவ்.

''உம்...அப்பறம்?''

''நான் மெட்ராஸிலே வேலை பார்த்துக்கிட்டு இருந்தேன் இல்லையா? கல்யாணம்

அவள்: நீங்க உண்மையிலேயே என்னைக் காதலிக்கலே!
அவன்: அதெப்படிச் சொல்றே?
அவள்: நம்ம கல்யாணம் எப்போன்னு கேட்டா உடனே அடுத்த வாரம்னு சொல்லி என்னை ஏமாற்றத்துக் குள்ளாக்கிட்டீங்களே!
—கே. ஆர். எம்.





வல்லவர் நல்லவர்

ஜெமினி 'சந்திரலேகா'வில் உள்ள சில 'மேட்சிங்' காட்சிகளைப் போல் இதுவரை தமிழ்ப் படத்தில் மட்டுமல்ல தென்னக மொழிப் படங்களிலேயே வரவில்லை என்று நான் அடித்துக் கூற முடியும். அந்தப் பெருமை சமீபத்தில் மறைந்துவிட்ட தலை சிறந்த ஓவியரும் ஆர்ட் டைரக்டருமான சேகர் அவர்களையே.சாரும். அப்பொழுதே என் தந்தை ஏ.வி.எம்.முக்கு இவரது திறமையின் மீது அபரிமிதமான மதிப்பு. ஆனந்த விகடனிலும் பிறகு ஜெமினியிலும் பணியாற்றிவிட்டு 1962ல் எங்களுடன் இணைந்தார். சில நாட்களுக்கு முன்புதான் எங்களது 'முரட்டுக் காளை' படத்துக்காக ஏ. வி. எம். ஸ்டுடியோவில் ஒரு பெரிய செட்டை உருவாக்கினார்.

'கார் உங்களை அழைக்க வரும்' என்று சொன்னால் 'நானே வந்துவிடுகிறேன்' என்று சொல்லி பஸ்ஸில் நேரத்தோடு வந்துவிடுவார். காரில் நாம் போகும்போது எங்காவது அவரைப் பார்த்துவிட்டால் நம்மைப் பார்க்காதது போல் ஒதுங்க ஆரம்பிப்பார். காரணம் 'லிஃப்ட்' தர நிற்போமே! மற்றவர்களுக்குத் தம்மால் சிரமமே ஏற்படக் கூடாது என்று நினைக்கும் உள்ளம்.

இதுவரை அவர் பணமாக வாங்கியதாக எனக்கு நினைவில்லை. செக்தான். வரி அதிகாரிகளே வியக்கச் சரியான கணக்கு வைத்து வரிகளை ஒழுங்காகக் கட்டிவிடுவார்.

''முதல் தேதி'' படத்துக்கு ஒருகாட்சியை ஓவியமாக வரைந்துவிட்டு, ''நான் இந்த இடத்தைப் பார்த்ததில்லை. கற்பனையில் தோன்றியதை வைத்துத்தான் ஓவியமாக வரைந்தேன். வேறு யாராவது இந்த இடம் இப்படி இருக்காது என்று சொன்னால் அவருடன் வாதாடவும் தயார்'' என்றார். அவர் குறிப்பிட்டது எமலோகக் காட்சி! ப.நீலகண்டன் ஒரு சமயம் இதை என்னிடம் கூறிச் சிரித்தது நினைவிருக்கிறது.

கன்னட இயக்குனர் புட்டண்ணாவின் படத்தில் இவர் பணியாற்றினார். பணம் கொடுக்கும்பொழுது ''உங்களுடன் வேலை செய்ய வேண்டும் என்று ஆசை. அதனால் செய்தேன். பணம் வேண்டாம்'' என்றாராம்!

வற்புறுத்திச் செக் கொடுத்ததாக புட்டண்ணாவே என்னிடம் சொன்னார். சினிமா உலகில் இப்படியும் ஒரு மனிதர்! வல்லவர், நல்லவர்! ஒரு சிறந்த ஸ்டில் போட்டோகிராபரும் கூட. (திரு சரவணன் கூறக் கேட்டு எழுதியவர்: ''அசோக்'')

முடிஞ்சதும் கமலாவையும் அழைச்சிக்கிட்டு மெட்ராசுக்கு வந்தேன். இங்கே ஒரு அபார்ட்மெண்ட் பில்டிங்குலே ஒரு சாதாரண ஃப்ளாட்டை வாடகைக்கு எடுத்தேன். அங்கே புதுக் குடித்தனம் ஆரம்பிச்சோம்.''

ராஜீவ் மேலும் தன் கடந்த கால வாழ்க்கையை விவரித்தான். தொடக்கத்திலிருந்தே கமலா ஒரு வெறுப்புடனேயே அவனிடம் பழகினாள். அவனைப் பழிதீர்த்துக்கொள்ள வேண்டிய எதிரியைப் போலப் பாவித்தாள். அவளுக்குத் தாம்பத்திய வாழ்க்கை அறவே பிடிக்கவில்லை. இல்லற வாழ்வைத் தனக்கு விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனையாகக் கருதினாள். அதிலிருந்து தப்ப வழியே இல்லை என்று அவள் நினைத்ததாலோ என்னவோ, தொட்டதற்கெல்லாம் கடிந்து கொண்டாள். மிக அற்பமான விஷயங்களுக்காக அவனுடன் கடுமையாகப் போராடுவாள், சச்சரவு செய்வாள்.

''என் வாழ்க்கையே ஒரு போர்க்களமாக மாறிவிட்டது உஷா. ஏன்தான் திருமணம் செய்து கொண்டேனோ, அதற்கு முன்பு நிம்மதியாக இருந்தேனே என்று ஒவ்வொரு நாளும் நினைத்தேன். கல்யாணத்துக்கு அப்புறம் என் வாழ்க்கை நரகமாகிவிட்டது. ஆயிரம் ஆசை எண்ணங்களோடு புதுசாக் கல்யாணம் பண்ணிக்கிட்ட ஒரு இளைஞனுக்கு இப்படி ஒரு அனுபவம் ஏற்பட்டால் எப்படி இருக்கும் சொல்லு? மனசாரச் சொல்றேன் — என் ஜன்ம விரோதிக்குக்கூட கமலா மாதிரி ஒரு மனைவி வாய்க்கணும்னு விரும்ப மாட்டேன்.

''இருந்தாலும் பொறுமையாகவே இருக்க முயற்சி பண்ணினேன். கமலாவோட அப்பா சொன்னதை மனசுலே வைச்சுக்கிட்டு, எல்லாத்தையும் பொறுத்துக்கிட்டேன். கமலா என்ன சொன்னாலும், என்ன செய்தாலும் நான் அவகிட்டக் கடுமையா நடந்துக்கவே மாட்டேன். ஆனா, நானும் மனுஷன் தானே? அப்போ எனக்குச் சின்ன வயசு. எப்போதாவது நானும் பொறுமை இழந்து ஏதாவது கோபமாச் சொல்வேன். ரொம்பப் பொறுக்க முடியாமப் போனா வெளியே போயிடுவேன். கோபம் தணிஞ்சதுக்கு அப்புறம் வீட்டுக்குத் திரும்புவேன்.''

''புவர் ராஜீவ்! ஹவ் யு மஸ்ட் ஹேவ் சஃப்பர்ட்!'' என்றாள் உஷா அனுதாபத்தோடு.

''வெறும் வேதனை இல்லை — சித்திரவதை! மென்டல் டார்ச்சர்!'' பழைய நினைவுகள் நெஞ்சுக்குள் அலைமோதவே ஒரு நிமிஷம் ராஜீவ் மௌனமாகிவிட்டான்.

''அப்புறம்?'' மேலும் அவன் கதையைத் தொடர உஷா தூண்டிவிட்டாள். ''அப்புறம் என்ன ஆச்சு?''... (தொடரும்)


உங்களைப்
போன்றவர்களை திருப்தி
செய்ய சார்மினாரால்தான்
முடியும்
CHARMINAR
THE VAZIR SULTAN
TOBACCO CO LTD



மீனு என்ன சொல்கிறாள்?

'அன்னம்'

"கெட்டி மேளம்! கெட்டி மேளம்!" எனப்பலர் ஏககாலத்தில் கூவினார்கள்.

அருமையாக வாசித்துக் கொண்டிருந்த நியாகையரின் கல்யாணி ராக கீர்த்தனையை அந்தரத்தில் நிறுத்திவிட்டு நாயனக்காரர், 'கெட்டி மேளம்' வாசித்தார். தம் கைபலம் அத்தனையும் கொண்டு தவுல்காரர் தட்டித் தீர்த்தார்.

இத்தனைபரபரப்புக்கும் காரணமானமீனு குனிந்த தலை நிமிராமல் ரகு கட்டிய தாலியைத் தாங்கிக் கொண்டாள்.

மீனுவைப் பொறுத்தவரையில் இது எப்போதோ நிச்சயமான விஷயம். ரகு அவள் அத்தை பையன்தான். பத்தொன்பது வருஷங்களுக்கு முன்பு அவள் பிறந்தவுடன், அத்தை கேட்டாளாம்: "ஏன் அண்ணா? இவளை என் பிள்ளைக்குத் தருகிறாயா?... அவள் கொஞ்சம் கறுப்பு!" என்று தயங்கியபடி கேட்டாளாம்.

தங்கை கேட்டு இல்லை என்று சொல்லியறியாத மீனுவின் அப்பா அன்றைக்குத் தலையாட்டினார். அதை மனத்தில் வைத்துக் கொண்டு இன்று ஊர் அறியப் பெண்ணைக் கன்னியாதானம் செய்து கொடுத்துவிட்டார்.

ரகுவுக்குப் பெரியவர்கள் இரண்டு பேர் உண்டு. அவர்களுக்குக் கல்யாணமாகி விட்டது. இரண்டு மருமகள்களும் நல்ல பெரிய இடத்திலிருந்து வந்தவர்கள். அவர்களுடன் ஒப்பிடும்போது மீனுவின் பொருளாதார அந்தஸ்து சற்றுத் தாழ்ந்ததுதான். இருந்தாலும் கூட மீனுவின் அழகுக்காக—பாட்டுக்காக — படிப்புக்காக — ஒரு பைசா கூட வரதட்சிணை வாங்காமல் — தன் செலவில் கொடி திருமாங்கல்யம்கூடச் செய்து பெண்ணை அழைத்துக் கொண்டு விட்டாள் மீனுவின் அத்தை.

மீனுவும் ரகுவும் புறப்பட்டார்கள். மீனு கலங்கவில்லை. எத்தனையோ முறை அத்தையின் வீட்டுக்குச் சாதாரணமாகப் போயிருக்கிறாள். இன்று மருமகளாகப் போகிறாள்.

"காயத்ரி... உன் அண்ணா இவளுக்கு ரொம்பச் செல்லம் கொடுத்து வளர்த்திருக்கிறார். முன்னே பின்னே இருந்தாலும் நீதான் கொஞ்சம் 'அட்ஜஸ்ட்' செய்து கொண்டு போக வேண்டும்!" என்றாள் மன்னி மங்களம்.

காயத்ரி — மீனுவின் மாமியார் — சிரித்தாள். "இந்தச் சம்பிரதாயமெல்லாம் எதற்கு மன்னி? மீனுவுக்கு என்னைத் தெரியாதா அவளைத்தான் எனக்குப் புரியாதா?... நீ கவலைப்படாதே!... வளைகாப்புக்கு நல்ல நாள் பார்த்து எழுதுகிறேன்!" என்றாள்.

மீனு வெட்கத்துடன் தலை குனிந்து கொண்டாள்.

புது வீட்டுப் பெண் இரவு முழுவதும் ஆனந்தத்தில் நீந்திவிட்டு விடியற்காலை அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள்.

கதவை இடிக்கும் சத்தம் கேட்டது. மீனு சோம்பல் முறித்துக் கொண்டு போய்க் கதவைத் திறந்தாள். வெளியே அத்தை.

"இப்படியெல்லாம் சோம்பல் முறிப்பது பெண்களுக்குப் பாந்தமாக இல்லை. போய்ப் பல்லைத் தேய்த்து விட்டு வாசலில் நீர் தெளித்துக் கோலம் போட்டுவிட்டு வா!" என்றாள் அத்தை.

மீனு பதில் பேசாமல் போய்ச் சொன்னபடி செய்தாள். முதல் நாள் புது மருமகள் கோலம் போடுவது நல்லதுதானே என்று நினைத்துக் கொண்டாள். ஆனால் அது தினம் அவள் செய்யும் வேலையாயிற்று.

முதல் மருமகள் ஹேமா உத்தியோகம் பார்க்கிறாள். அவள் எழுந்திருப்பது காலை ஏழு மணிக்குத்தான். இரண்டாவது மருமகள் காமுவுக்குச் சமையல் இலாகா. சமைப்பாள் இறக்கி வைப்பாள். பின்னர் நாவல் படிக்கப் போய் உட்கார்ந்து விடுவாள்.

மீனுவுக்கு ஒவ்வொரு நாளும் வேலை கூடிக் கொண்டு போயிற்று. காலையில் எல்லோருக்கும் அவள்தான் காப்பி கலந்து கொடுக்க வேண்டும். வேலைக்காரி தோய்த்து வைக்கும் துணிகளை எடுத்து வைத்து இஸ்திரி போட வேண்டும். இரவுச் சமையல் பொறுப்பு அவளுடையது. கொட்டிலில் கிடந்த மாடுகளை மாற்றிக் கட்டுவது கூட அவள் வேலையாயிற்று.

மீனு சோம்பேறி இல்லை. இருந்தாலும் தன்னை அத்தை எப்போது பார்த்தாலும் ஏவிக் கொண்டிருப்பது போல் தோன்றியது.

அலுத்துக் களைத்துப் போய்ப் படுத்தால் போதும். "குடும்பப் பெண்கள் பகலில் தூங்கலாமா? எழுந்திரு! உடல் பருத்துப் போய்விடும்!" என்று எழுப்புவாள்.

முன்பெல்லாம் ஒவ்வொரு முறை வரும் போதும் வலுக்கட்டாயமாக, அவளைப் பாடச் சொல்லிக் கேட்கும் அத்தை இப் போது அதைப் பற்றிப் பேசுவதே இல்லை.

அவளாகப் 'பாடட்டுமா?' எனக் கேட் டால் ''இதற்கெல்லாம் என்ன கேள்வி? சாயங்காலம் விளக்கை ஏற்றி வைத்துக் கொண்டு இரண்டு கீர்த்தனை வீணையில் வாசிப்பதுதானே?'' எனச் சாடுவாள்.

மீனுவினால் நம்ப முடியவில்லை. ''அப்படிப் பட்ட அத்தையா இப்படி? மாமியார் என் றாலே இந்தக் குணங்கள் வந்துவிடுமா?'

நின்றால் குற்றம், உட்கார்ந்தால் தப்பு, பேசினால் வாயாடி, பேசாமல் இருந்தால் மெழுகுப் பொம்மை.

மருமகள் மூன்று பேரும் ஒரு நாள் கோவி லுக்குச் சேர்ந்து போனார்கள்.

''மீனு... உன் அத்தை ஏன் இப்படி உன்னைக் கரித்துக் கொட்டுகிறாள்?'' என ஹேமா கேட்கவும் அதற்குக் காமு ''என் னிடம் மட்டும் இப்படிப் பேசட்டும்.. அடுத்த நாள் மூட்டையைக் கட்டிக் கொண்டு புறப்பட்டு விடுவேன்'' எனத் தாபம் போட வும் மீனுவுக்கு அழுகை அழுகையாக வந்தது.

திருமணமாகி வந்த ஆறுவது மாதம், காயத்ரிக்குத் தான் பாட்டியாகப் போகும் செய்தி தெரிந்தது. உடனே மருமகளைப் பிறந்தகம் அனுப்பி விட்டாள்.

மீனுவின் தாயார் மங்களம் பெண்ணைப் பார்த்துப் பூரித்துப் போனாள். திரும்பவும் மாமியார் வீட்டுக்குப் போகும் நாளை எண்ணி நடுங்கிக் கொண்டிருந்தாள் மீனு. அவள் தாயார்கூட அவள் சொன்னதை நம்பவில்லை.

மீனுவின் பிரார்த்தனைக்கு ஆண்டவன் செவி சாய்த்து விட்டான். ரகுவுக்கு மாற்றல் கிடைத்து விட்டது. அதுவும் பிறந்த ஊரிலேயே... புதுவீடு பார்த்து விட்டார்கள்.

மறுநாள் ரகு வரப்போகிறான். அவர்கள் தனிக் குடித்தனம் தொடங்கப் போகிறார்கள்.

''மீனு! கோயிலுக்குப் போய் விட்டு வா. ''போகும்போது என் நெக்லெஸ் இருக்கிறது அதைப் போட்டுக் கொண்டு போ!'' என்றாள்.

மீனு பீரோவைத் திறந்தாள். நெக் லெஸைப் போட்டுக் கொண்டு திரும்பிப் பெட்டியை வைக்கும்போது எல்லாச் சாமான் களும் சரிந்தன. அவைகளை மீண்டும் அடுக்கும்போது ஒரு கடிதம் விழுந்தது.


கராத்தே பயிற்சி 4

பயிற்சியாளர்: டோனி பொன்னையா
சித்திரம்: ராஜ்..
தயாரிப்பு: குங்குமணி

நடக்கப் பழகுதல்-2

முதலில் இயற்கையான கராத்தே முறையில் நிற்க வேண்டும். (NATURAL STANCE)

பிறகு இடது காலை முன் வைக்கும் போது ஐம்பது சதவீதம் மடக்கி வலது காலை நேராக வைத்துக் கொள்ள வேண்டும். அடுத்து இரு கால்களையும் மடித்த நிலையில் ஒன்று சேர்க்க வேண்டும் அப்புறம் அடுத்த அடி... முன்னும் பின்னுமாக நடக்கப் பழக வேண்டும்.



கல்கி வாசகர்களுக்கு மாதாந்திரப் பரிசுத்திட்டம்
(செப்டம்பர்)

இந்த இதழ் தொடங்கி நாலு வாரங்களுக்கு இப்பகுதியில் நாலு புகைப்பட குவிஸ்கள் இடம் பெறும். நாலு குவிஸ்களையும் கத்தரித்து எடுத்து விடையை அதிலேயே எழுதி நான்கையும் ஒன்றாகஇணைத்து ஓர் உறையிலிட்டு, போதிய தபால் தலை ஒட்டி 'கல்கி மாதாந்திர பரிசுத் திட்டம், தபால் பெட்டி எண் 3159, சென்னை-32' என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

நான்கு குவிஸ்களிலும் வெற்றி பெறுபவர்களுக்குப் பரிசு ரூ. 1000. ஒன்றுக்கு மேற்பட்டவர் நான்கு விடைகளையும் சரியாக எழுதினால் பரிசு பெறுபவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார். நாலு விடைகளையும் சரியாக எழுதிய மற்றவர்களுக்கு நவம்பர், டிசம்பர் மாதக் கல்கி இதழ்கள் இலவசம்.

முடிவு தேதி: அக்டோபர் 22.


இந்த வாரக் குவிஸ்:

இந்தப் படத்தில் கிரிக்கெட் பந்து ஓவியரால் மறைக்கப்பட்டுள்ளது. அது இருக்க வேண்டிய இடத்தைப் பேனாவால் அளவாக வட்டமிட்டுக் காட்டவும்.

என் பெயர்:

விலாசம்:

கையெழுத்து:



'மன்னிக்கு நமஸ்காரம்.

மீனா என்ன சொல்கிறாள்? இந்த அத்தை பசுத் தோல் போர்த்திய புலி என்றா... இல்லை மாமியார் அரக்கி என்றா?

என் நிலை உனக்குப் புரியும். என் இரண்டு நாட்டுப் பெண்களும் பெரிய இடத்துத் திமிர் உள்ளவர்கள். இந்தச் சம்பந்தத்தை அவர்கள் தங்களுக்குச் சமமாக நினைக்கவில்லை. ஆனால் மீனா என் கண்ணின் கருமணி போன்றவள்.

அவளால் அவர்கள் அன்பைப் பெற முடியாது. ஆனால் அனுதாபத்தை உண்டாக்கலாம் அல்லவா? மீனாவை ஏசினேன். குற்றம் சொன்னேன். இடித்துக் காட்டினேன். இப்போது மூன்று நாட்டுப் பெண்களும் ஒரே கூட்டு — அவளுடன் இழைகிறார்கள்.. இழைகிறார்கள்... அப்படி இழைகிறார்கள்.

பொது எதிரி நான்தான் மன்னி.

மீனாவுக்கு என்னால் முடிந்தது வேளா வேளைக்குப் பால்... கட்டாயப்படுத்திப் பழங்கள் — நெய் அதிகமாக ஒரு ஸ்பூன்— நான் செய்யத் தவறவில்லை. மீனாவைப் பார்க்கும்போது நீங்கள் புரிந்து கொள்வீர்கள். சர்க்குச்சி மீனா எப்படிப் பூசினாற் போல் இருக்கிறாள் என்று தெரியவரும்.

நீ இதையெல்லாம் உன் மனத்துக்குள் வைத்துக்கொள். அண்ணாவிடம் கூடச் சொல்லாதே... மீனாவின் புகார்களை எபடி யாவது சமாளி....'

மீனா கடிதத்தைப் பீரோவில் வைத்தாள்.

மீனா கோவிலுக்குப் போய்த் திரும்ப நேரமானது கண்டு மங்களம் கவலைப்பட்டாள். ஒரு மணி நேரம் கழித்துத் திரும்பிய மீனாவைப் பார்த்ததும் ''எங்கேடி போனே... இத்தனை நாழி?'' என அதட்டினாள்.

'' 'போன்' போடத்தான்.''

''போனா?... யாருக்கு?''

''ஆமாம். அத்தையைக் கூப்பிடத்தான். வீட்டுக்குப் பெரியவர் அவர் இல்லாமல் புதுக் குடித்தனமா? எனக்குத் தெரியா விட்டாலும் நீ சொல்ல வேண்டாமா?'' எனக் கேட்டுவிட்டு மீனா உள்ளே போனாள்.

மங்களம் ஒன்றும் புரியாமல் குழம்பிப் போய் நின்றாள்.



வாசகர் விமரிசனம்

சிவாஜி சகாப்தம் முடிந்துவிட்டதா?

● சிவாஜியின் படங்களில் அவர் டூயட் பாடுவதைத் தான் கொஞ்சம் கூட விரும்பவில்லை என்று 'இப்போது' கூறும் விஜயன் தம் டைரக்ஷனில் வெளிவந்த அவரது பல படங்களில் 'அப்போது' அவரை டூயட்பாடி ஆட வைத்தது ஏனோ?

விருத்தாசலம் 'ரவீந்தர்'

● ஒரு நடிகன் திரையில் ஏற்றுக் கொண்ட வேடத்துக்கு எப்படிச் சிறப்பளிக்கிறான்? அது தானே கேள்வி. உண்மை வயதுக்கு ஏன் போக வேண்டும்? உண்மை வயதைப் பார்த்தால் ஒவ்வொரு படத்துக்கும் ஒவ்வொரு புது முகத்தைத்தான் போடும்படி வரும். முடியுமா? நடக்குமா? டைரக்டர் விஜயனுக்கும் சிவாஜிக்கும் தற்சமயம் உறவு விட்டுப் போய் நிற்கிறது. இந்த நேரத்தில் விஜயன் வேறு எப்படிச் சொல்வார்?

கும்பகோணம் டி.எஸ். சீதாராமன்

● வியட்நாம் வீடு சுந்தரம் அவர்களின் வாதத்தை ஏற்கும் நேரத்தில், சமீபகால சிவாஜி படங்கள் ஒரே மாதிரி கதையமைப்பிலும், சுவாரஸ்யம் இல்லாமலும் வெளிவருவதைக் கவனிக்க வேண்டும். 'காரெக்டர்கள்' அமைந்தால் பிய்த்துக் கட்டிவிடுவார்' என்கிறார். அமைத்துத் தராமல் இருப்பதன் மர்மம்தான் என்ன?

ஸ்ரீரங்கம் ஸ்ரீனிவாசன்.

● சிவாஜி தம்மை மாற்றிக் கொள்ளவேண்டும் என்று சௌகார், விஜயன் மட்டுமல்ல, என் போன்ற ஆயிரக் கணக்கான ரசிகர்களும் எதிர்பார்க்கிறோம். நடிப்பில் சரித்திரம் படைத்துவிட்ட சிவாஜியின் இப்போதைய நடிப்புச் சம்பவங்கள் எதிர்காலத்தில் கேலிக்கிடமாகிவிடக் கூடாது.

ராஜபாளையம் எல். விஜயன்

● சிவாஜி கணேசன் படம் என்றால் அழுத்தமான கதையும், அமெரிக்கையான நடிப்பும் இருக்கும் என இறுமாந்திருந்த காலம் போய் பத்தோடு பதினொன்றாய் அவர் படமும் ஆகிவிட்டது என்கிற உண்மை, அவர் எத்தனை பேரை ஆளாக்கிவிட்டார் என்கிற வாதத்தால் மறையாது. மனத்தில் நிற்கும் வேடத்தில் (சிறியதோ பெரியதோ) சிவாஜி நடிக்க வேண்டும். அப்படிச் செய்தால் கேள்விக்குறி மறுபடி ஆச்சரியக்குறியாகிவிடும்.

தூத்துக்குடி எஸ். ஜி. சங்கர்

● வியட்நாம் வீடு சுந்தரம் சிவாஜி கணேசனைப் பற்றி எழுதியிருந்ததைப் பார்த்தேன். சிரிப்புத்தான் வந்தது. பெரிய நடிகர் என்பதற்காகத் தம் பெரிய வயிற்றைக் காட்டிக் கொண்டும், சிறு பெண்களுடன் கூத்தாடிக் கொண்டும் இருந்தால் யார்தான் ரசிப்பார்கள்?

சென்னை-1 ஆர். முரளி

● 'சிவாஜி சகாப்தம் முடிந்துவிட்டதா?' என்று அர்த்தமற்ற சிறுபிள்ளைத்தனமான சர்ச்சையை சௌகார் ஜானகி மூலம் தாங்கள் தூண்டி விட வியட்நாம் வீடு சுந்தரம் அளித்திருந்த பதில் என்போன்ற லட்சக் கணக்கான சிவாஜிப் பிரியர்களின் எண்ணங்களைப் பிரதிபலிப்பதாக அமைந்திருக்கிறது.

இந்த அம்மாள் மட்டும் 'காவியத் தலைவி'யில் கல்லூரி மாணவி வேடம் போட்டுத் தம்மைவிட வயதில் சிறிய ரவிச்சந்திரனுடன் துள்ளி விளையாடவில்லையா?

விருகம்பாக்கம் கருணாநிதி

● சிவாஜி சகாப்தம் முடிந்துவிட்டதா...? முடியாது...முடியவே முடியாது... நல்ல கேரக்டர் (புதுமையான பாத்திரம்) சிறந்த கதை, புது இளம் இயக்குனர் இவை அமைந்தால் அண்ணன் சகாப்தம் தொடருமே தவிர முடியவே முடியாது.

வியட்நாம் வீடு சுந்தரம் போன்றவர்கள் இதையெல்லாம் கூறாமல் ஜால்ரா போடுவது அவரைப் பிடித்துக் கீழே தள்ளுவது போல் ஆகும்.

ராசிபுரம் ஆர்.டி. பாரதமணி

● சிவாஜி சகாப்தம் முடிந்துவிட்டதுபோல் தான் தோன்றுகிறது. சமீப காலப் படங்களில் அவரது நடிப்பைக் காணமுடியவில்லை. ரசிக்கவும் முடியவில்லை. பாத்திரப் பொருத்தம் இல்லாததால் அலுப்புத் தட்டுகிறது. நடிப்புலகச் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்த சிவாஜியின் தற்போதைய நடிப்பில் மிளிர்ச்சி இல்லை.

சென்னை-56 பூவை விமலன்

● இமயத்தின் உச்சியில் உட்கார்ந்துவிட்ட ஒருவர் அதற்கு மேல் போகத்தான் ஆசைப்படவேண்டுமே ஒழிய பரங்கிமலைக் குன்றின் மீது உட்காரக் கூடாது. அது நியாயமுமல்ல. இதைத்தான் திருமதி சௌகார் ஜானகி தெள்ளத் தெளிவாகக் கூறிவிட்டார் பல உதாரணங்களுடன். நடிகர் திலகம் செவி சாய்க்கட்டும். ஒரு சௌத்திரியாக — பிரஜு மஹு பத்மனுபனைக் காண மீண்டும் எதிர்பார்க்கிறேன்

பெங்களூர் .பாரதி

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor: K. Rajendran

ஜலதோஷமும் ஃப்ளூவும்— சில முக்கிய தகவல்களும் முறியடிக்கும் முறைகளும்

"ஜலதோஷம் மற்றும் ஃப்ளூவின் துன்பங்களிலிருந்து விரைவில் நிவாரணம் பெற அனஸின் பெரிதும் உதவுகிறது" என்கிறார் நர்ஸ் நாட்டாலியா டிசௌஸா.



ஜலதோஷமும் ஃப்ளூவும் வரக் காரணம் என்ன?
பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து காற்றில் வரும் விஷ அணுக்கள் ஜலதோஷத்தையும் ஃப்ளூவையும் பரப்புகின்றன. இந்த விஷ அணுக்களை சாதாரணமாக உடல் எதிர்க்கிறது. ஆனால் அளவுக்கு மீறிய உழைப்போ, சத்துக்குறைவோ உடலைப் பலவீனப் படுத்தி, நோய் எதிர்ப்பாற்றலைக் குறைக்கிறது.

அறிகுறிகள் யாவை?
உடல் வலி, தலைகனம், தும்மல், மூக்கிலே ஒழுக்கு இவற்றுடன் ஜலதோஷம் தொடங்கும். குளிர், அமைதியின்மை, வியர்வை தோன்றும். இருமல், தொண்டைப் புண், பசியின்மை, உடல் சோர்வு தொடரலாம்.

சிக்கல்கள் தோன்றுமா?
புறக்கணித்தால் நிமோனியாவிலும், சுவாச கோசம் மற்றும் மேல் மூச்சுக் குழாயின் நோய்த் தொற்றிலும் முடியலாம்.

அனஸின் எப்படி உதவுகிறது?
இது ஜலதோஷம், ஃப்ளூவினால் ஏற்படும் வேதனையைப் போக்குகிறது. உலகெங்கும் டாக்டர்கள் சிபாரிசு செய்யும் வலி-நிவாரணியை அதிக அளவில் கொண்ட அனஸின் சக்தி வாய்ந்தது. டாக்டரின் நம்பகமான மருந்துக் கலவை போன்றது. ஜலதோஷம் ஃப்ளூவின் முதல் அறிகுறி தோன்றியதுமே, அனஸின் சாப்பிடுங்கள், ஒரு நாளைக்கு 4 தடவை.

நீங்கள் வேறென்ன செய்யவேண்டும்?
- நிறைய திரவ பதார்த்தங்கள், கொதிக்க வைத்த நீர், ஆரஞ்சு அல்லது எலுமிச்சை சாறு பருகுங்கள்.
- சத்துணவு புசியுங்கள்.
- போதிய ஓய்வெடுங்கள்.
- ஆன்டிசெப்டிக் மருந்து அல்லது உப்புக் கரைத்த நீரால் கொப்புளியுங்கள்.
- அறைகள் காற்றோட்டமாக இருக்கட்டும்.



சக்தி வாய்ந்த நம்பகமான
மேனர்ஸ்
அனஸின்*

இந்தியாவின் புகழ்பெற்ற வலி-நிவாரணி

அளிப்பவர்கள்: ஜெஃப்ரி மேனர்ஸின் அனஸின் பிரிவினர்.

* Regd. TM

A24-6/79

REGISTERED No. M. 4382
Registered as a Newspaper in Sri Lanka



